اَلتُّحْفَةُ الْمُرْسَلَةَ

துஹ்பதுல் முர்ஸலா

அனுப்பப்பட்ட பரிசு!

அறபு மூல நூலாசிரியர்

முஹம்மத் பின் அஷ்ஷெய்க் பள்ளுள்ளாஹ்

தமிழாக்கம் - விளக்கவுரை

குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா

அஸ்ஸய்யித் கலீல் அவ்ன்

அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயகம்

வெளியீடு :

ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை

اَلتُّحْفَةُ الْمُرْسَلَة

துஹ்பதுல் முர்ஸலா

(அனுப்பப்பட்ட பரிசு!)

அறபு மூல நூலாசிரியர்

முஹம்மத் பின் அஷ்ஷெய்க் பள்ளுள்ளாஹ்

தமிழாக்கம் - விளக்கவுரை

குத்புஸ்ஸமான் ஷம்ஷுல் வுஜூத் ஜமாலிய்யா

அஸ்ஸய்யித் கலீல் அவ்ன்

அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயகம்

வெளியீடு

ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை

நூல் விபரம்

நூலின் பெயர்	:	துஹ்பதுல் முர்ஸலா - அனுப்பப்பட்ட பரிசு
ஆசிரியர்	:	ஜே. எஸ். கே. ஏ. ஏ. எச். மௌலானா
மொழி	:	தமிழ் - அறபு
நூல் வகை	:	மொழிபெயர்ப்பு
நூல் உரிமை	:	ஆசிரியருக்கு
பதிப்பு ஆண்டு	:	முதற் பதிப்பு : ஜுலை 2008
பக்கங்கள்	:	100
நூல் அளவு	:	14 x 22 செ.மீ.
எழுத்து	:	13 புள்ளிகள்
தாள்	:	ஆர்ட் பேப்பர்
பைண்டிங்	:	சாதா பைண்டிங்
விலை	:	ரூ. 75 /-
வெளியீடு	:	ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை
ஒளிஅச்சு & அச்சிட்டோர் & நூல் கிடைக்குமிடம்	:	ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ் 2/228, ஹாஜி பாத்திமா காம்ப்ளக்ஸ், ஃபயர் சர்வீஸ் எதிரில், மேற்கு ரத வீதி, திண்டுக்கல் - 624 002. போன் : 99445 - 76165, 99440 - 82252

முக்கிய அறிவிப்பு!

இந்நூல் அறிவுள்ளோர்க்கும் முரீத்களுக்கும் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது. விஷயமறியாத வெறும் மூளைகள் இதனையெடுத்து விமர்சித்து விஷமம் செய்ய வேண்டாம் என அறிவுறுத்துகின்றோம்.

- நூலாசிரியர்

பொருளடக்கம்

		பக்கம்
1.	பதிப்புரை	4
2.	வஹ்தததுல் வுஜூது (அறபுக் கவிதை)	5
3.	முகவுரை	7
4.	உஜூது	10
5.	உஜூதின் படித்தரங்கள்	28
6.	முதலாம் படித்தரம்	33
7.	இரண்டாம் படித்தரம்	35
8.	மூன்றாம் படித்தரம்	37
9.	நான்காம் படித்தரம்	40
10.	ஐந்தாம் படித்தரம்	41
11.	ஆறாம் படித்தரம்	43
12.	ஏழாம் படித்தரம்	44
13.	குர்புன்னவாபில்	67
14.	குர்புல் பராஇள்	69
15.	வஹ்தத்துல் வுஜூது	70
16.	வஹ்தத்துல் வுஜூதுக்கு ஆதாரங்கள்	79
17.	முராக்கபா	90
18.	குறிப்புகள்	96

பதிப்புரை

துஹ்பத்துல் முர்ஸலா - (அனுப்பப்பட்ட பரிசு)

இந்நூல் மெய்ஞ்ஞானத்தை சுருக்கமாக விளக்கும் அற்புதமான அறபு நூல்.

மதீனத்துல் இல்ம் எனும் மெய்ஞ்ஞானத் தலைநகரான நாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்திற்கு இந்நூலை இதன் ஆசிரியர் அன்புப் பரிசாக அனுப்பி வைக்கிறார். அதனாற்றான் "அனுப்பப்பட்ட பரிசு" எனும் அழகுப் பெயர் சூட்டியிருக்கின்றார். அறபு மொழியில் எழுதப்பட்ட இஸ்லாமிய ஆன்மீக நூலான இதனை அஷ்ஷைகு ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் தமிழாக்கம் செய்து - விளக்கவுரையும் அவர்களே அளித்துள்ளார்கள்.

அவர்களைத் தவிர இப்பணியைச் செய்ய வல்ல ஒருவரை இவ்வகிலத்தில் காணல் அரிது. அவர்கள் இந்நூலை மொழிபெயர்த்து - விளக்கவுரையும் வரைந்தமைக்கு இதன் மூல நூலாசிரியரின் ஆத்மாவே பெருமகிழ்வெய்தும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

முரீதுகளின் வேண்டுகோளுக்கிணங்க சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் இதனை எழுதி "மறைஞானப் பேழை" ஆன்மீக மாத இதழில் தொடர்ந்து வெளிவந்தது. இது நூலுருப் பெற வேண்டுமென்ற காலம் கனிந்தபோது இத்திருப்பணியைச் செய்து முடிக்க வேண்டுமென்ற பேராவலில் ஆழியூர். ஜனாப். M. அஹ்மது கபீர் M.A., ஹக்கிய்யுல் காதிரிய் (சிங்கப்பூர்) அவர்கள் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களிடம் அனுமதி பெற்று அச்சியற்ற ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்.

இந்நூல் தமிழ் முஸ்லிம்களுக்கும் - தமிழுலகிற்கும் - குறிப்பாக ஞானதாகம் கொண்டவர்களுக்கும் ஓர் அற்புதக் கருவூலம். அறபு மதுரஸாக்களில் "தஸவ்வுப்" எனும் ஆன்மீகக் கலைப் பாடநூலாக வைக்கத் தகுந்த மெய்ஞ்ஞானக் களஞ்சியம். அல்லாஹ் இந்நூலின் பயனாக தமிழுலகத்தில் மெய்ஞ்ஞானத் தெளிவை ஏற்படுத்துவானாக!

- ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை.

لااله الاالله

لاوجود الاالله

وَحْدَةُ الْوُجُوْد

هُوَالْوُجُوْدُ لاَ لَهُ اَشْيَا اُخَر *

هُوَالْكَمَالُ اَ نَّهُ لاَ مُخْـــتَصَر *

هُوَالَّذِىْ اَ لْاٰنَ بِالتَّصْرِيْف *

بَلْ اَ نَّهُ مِثْلُ الْقَدِيْمِ الْمُفْـــتَخَرْ *

اَيْنَ كَمَا بِمَا وَكَيْفَ لاَ لَهُ *

وَلاَالضَّمَائِرُ كُلُّهَا بِمُخْتَصَر *

بَطْــنًا وَّظَهْرًا لاَ لَهُ فِىْ كُنْهِهِ *

خُلْقٌ وَذَاتُهُ بِمُطْــلَقٍ طُهْر *

وَمَنْ فَـــنَى فِىْ وَحْدَةِالْوُجُوْد *

مِنْ عِنْدِهِ كُلٌّ تَجَلّٰى وَظَهَر *

(جمالية السيد خليل عون مولانا الحسنى الحسينى الهاشمي)

வஹ்தத்துல் வுஜூத்

(அல்லது)

ஏக காட்சி

அதுவே ஏகமயமானது. (அனைத்தும் அதுவேயாதலால்) அதனைத் தவிர்ந்த வேறு பொருட்கள் அதனுக்கு (அயலாய்) இல்லை. அதுவே பூரணமானது. அதுவே குறுக்கமானதன்று.

இப்பொழுது அது மாறுபட்டுள்ளது. எனினும் அது பெருமைக்குரிய பழமையை (முன்னிருந்ததைப் போன்றது.

எங்கே? என்பதும் ஒன்றைப் போன்றது என்பதும் ஒன்றைக் கொண்டு (ஆனது) என்பதும் எப்படி? என்பதும் அதற்கில்லை. (நான், நீ, அவன், அவள், நாங்கள், நாம், அவர்கள் இவர்கள், அது, இது, அவை, இவை முதலாம்) பிரதிப் பெயர்கள் அனைத்தும் அதனைக் கட்டு(மட்டு)ப் படுத்துபவையன்று.

உள்ளாலும் வெளியாலும் அதன் தாற்பரியத்திலே அதற்கு (இப்படித்தான் எனும் சுபாவம் (பாங்கு) இல்லை. அதன் பிரணவ உள்ளமை பரிசுத்த சம்பூரணமாகும்.

ஏக மயத்தில் எவன் தன்னை அழித்தானோ அவனிடத்திருந்து அனைத்தும் தோன்றும்; வெளியாகும்.

முகவுரை

இந்நூல் ஆத்மார்த்த அறிவில் (தஸவ்வுபில்) மிகச் சிறப்புக்குரியது. பள்ளிக் கூடங்களில் படிப்பதற்கு இன்றியமையாத தென்பதாலும் ஆத்துமார்த்த இன்பத்தில் திளைத்த நம் ஞானப் பிள்ளைகள் விரிவுரை கேட்டுக் கொண்டதற்கமையவும் இந்நூலிற்கு மொழி பெயர்ப்பும் விரிவுரையும் அமைத்துள்ளோம். அறபுச் சொல்லுக்கு எவ்விடத்தும் ஒரே கருத்தையே அமைத்துள்ளோம். அதனாற் சொன்மயக்கமமைவது நீக்கப்படுமென்க. யாவரும் கற்க வேண்டும் என்பதனை மனக்கண்கொண்டு இலகு தமிழை உபயோகித்தோம். இந்நூல் ஆத்ம வேட்கை கொண்டோருக்கேயன்றி சித்தசேட்டை கொண்டோருக்கன்றெனவறிக.

அச்சியற்ற உதவியோர் நீடுவாழ்க. நாடு செழிக்க வஹ்தத்துல் வுஜூத் எனும் ஒரே உள்ளமை எங்கணும் பரவுக. நீதம், நியாயம், சத்தியம், நேர்மை, பயபக்தி முதலாம் நற்காரியங்கள் மக்கள் உள்ளத்துள் மலர்க, வளர்க என வாழ்த்துகின்றோம். வஹ்ஹாபியம் அழிகவென சபிக்கின்றோம். வஹ்தத்துல் வுஜூத் மிளிர்க. ஜிஹாத் ஜிஹாத் எனக்கூறி மக்களை வழிகெடுக்கும் தீவிரவாதிகளுடன் சேராது உண்மை, உத்தம, தத்துவவாதிகளுடன் சேர்ந்து உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள்.

ஜமாலிய்யா ஸய்யித் கலீல் அவ்ன்
அல்ஹாஷிமிய் மௌலானா

வெலிகாமம்.
இலங்கை.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

கிருபாகரனான, கருணாகரனான அல்லா(ஹ்)வின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கிறேன்.

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ

புகழனைத்தும் அகிலத்தாரை வளர்த்துப் பரிபாலிக்கும் இறையாகிய அல்லாவுக்கே.

وَالْعَاقِبَةُ لِلْمُتَخَلِّيْ عَنِ الْكَوْنَيْنِ

(பூதலம், மீதலமாகிய) ஈருலகங்களை விட்டும் ஒழிந்தவனுக்கு (நீங்கியவனுக்கு) (இறையறிவைத்தேடி இறை பாதையிலே நடந்து செல்லும்) முடிவின் இலட்சியம் உண்டு.

وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى مَظْهَرِ الْاَتَمِّ سَيِّدِنَا مُحَمَّدٍ فَضْلًا

وَشَرَفًا لَدَيْهِ وَعَلٰى اٰلِهِ وَصَحْبِهِ اَجْمَعِيْنَ

கருணையும் ஈடேற்றமும் அவர்களிடத்தேயுள்ள கண்ணியத்தாலும் சிறப்பாலும் பரிபூரணத் தோன்றலான எங்கள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதாகும். அவர்கள் கிளையார் மீதும் அவர்கள் தோழர்கள் மீதும் அனைவர் மீதுமாகும்.

فَيَقُوْلُ الْعَبْدُ الْمُذْنِبُ الْمُحْتَاجُ اِلٰى شَفَاعَةِ النَّبِيِّ صَلَّى

اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ مُحَمَّدُ ابْنُ الشَّيْخِ فَضْلُ اللّٰهِ.

இறையோனின் கருணையும் ஈடேற்றமும் அவர் மீதிருக்குமே அந்த நபியின் மன்றாட்டத்தின்மீது ஆசை கொண்ட முஹம்மத் பின் அஷ்ஷெய்கு பள்ளுள்ளா(ஹ்)வெனும் (நானெனும் மமதைத் திரையையணிந்த) பாபியான அடிமை சொல்கிறார்.

هٰذه نُبْذَةٌ منَ الْكَلمَات فِىْ علْم الْحقَائق

இது யதார்த்த அறிவு அல்லது மெய்ஞ்ஞான அறிவிலே சில வார்த்தைகளினின்றுமுள்ள சாரமாகும்.

جَمَعْتُهَا بمَحْض فَضْل اللّٰه تَعَالٰى وَكَرَمه

அல்லாஹுத்தஆலாவின் கலப்பற்ற வரிசையைக் கொண்டும் அவனுடைய சங்கையைக் கொண்டும் அதை ஒன்று சேர்த்தேன்.

فَلهٰذَا وَجَعَلْتُ ثَوَابَهَا لرُوْحِ ذَات رَسُوْل اللّٰه صَلَّى اللّٰهُ عَلَيْه وَسَلَّمَ

அதனால் அதன் கைம்மாறை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அதேயான உள்ளமையின் ஆத்துமாவுக்கு ஆக்கினேன்.

وَسَمَّيْتُهَا بالتُّحْفَة الْمُرْسَلَة الَى النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْه وَسَلَّمَ

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்து அனுப்பப்பட்ட பரிசு என்று இதற்குப் பெயர் வைத்தேன்.

وَاَسْئَلُ اللّٰهَ تَعَالىٰ اَنْ يَبْلُغَ ثَوَابَهَااِلَيْه عَلَيْه الصَّلٰوةُ وَالسَّلَامُ

எங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களளவில் அதனுடைய கைம்மாறை அடைய வைக்கிறதை அல்லாஹ்விடம் வேண்டுகிறேன்.

اَنَّهُ عَلٰى كُلِّ شَيْئٍ قَدِيْرٌ وَبالْاجَابَة جَدِيْرٌ

அவனோ எல்லாப் பொருள்கள்மீதும் (அல்லதுஎல்லாப் பொருள்களை விடவும்) சக்தி வாய்ந்தவன்.இன்னும் (பிரார்த்தனைக்கு) விடை பகர்தலிலே தகுதிமிக்கவன்.

اِعْلَمُوْا اِخْوَانِيْ اَسْعَدَكُمُ اللّٰهُ وَاِيَّانَا اِنَّ الْحَقَّ سُبْحَانَهُ وَتَعَالٰى هُوَ الْوُجُوْدُ

என் சகோதரர்களே, அறிக. அல்லாஹ் உங்களுக்கும் நமக்கும் உதவி புரிவானாக. பரிசுத்தமான உயர்வுமிக்க அல்லா(ஹ்)வாகிய ஹக்கு உள்ளமையாகும்.

(வுஜூத் என்பதன் கருத்து: காட்சி, உண்டானது, உள்ளமை. இங்கு வுஜூத் என்பதைக் காட்சி எனவோ உண்டானது எனவோ கூறுவது சிர்க்காகிய இணையை அல்லது துவிதத்தை உண்டாக்கும். இங்கே வுஜூத் என்பது உள்ளமை அல்லது தன்னிலே தானானது எனப்பொருள் கொள்வது சாலச் சிறந்தது. ஆதலால் அது வேறொன்றிலிருந்து ஆகவில்லையென்பதும் முக்கால வேறுபாடின்றி எக்காலமும் குறை மிகையின்றி நிறைந்திருந்தது என்பதும் உணர்வுடையோருக்குத் தெளிவாகும்.)

وَاِنَّ ذَالِكَ الْوُجُوْدَ لَيْسَ لَهُ شَكْلٌ وَلَاحَدٌّ وَلَاحَصْرٌ

அந்த வுஜூதாகிய உள்ளமைக்கு உருவம் என்பதோ (இதுவரை தான்) என்கின்ற எல்லையோ (இடம், காலங்களிலே இவ்வளவுதான் என்கிற) மட்டோ இருக்கவில்லை. (இதுவே தன்ஸீஹ் எனக் கூறப்படும். இஃது ஒழிந்தது அல்லது தூய்மையானது அல்லது அரு எனப் பொருள்படும். இது ஹக்காகவிருந்தது.)

(இஃது இவ்வாறு இருக்கையிலே)

وَمَعْ هٰذَا ظَهَرَ وَتَجَلّىٰ بِالشَّكْلِ وَالْحَدِّ

இஃதுடனே (இது தன்னிலிருந்தே, இதுவே) உருவம், எல்லை என்பவைகள் கொண்டும் பெயர்கள் கொண்டும் பண்புகள் அல்லது வருணனைகள் கொண்டும்) வெளியாகித் தோன்றிற்று. (இதுவே தஷ்பீஹ் எனக் கூறப்படும். இஃது ஒப்பானது அல்லது உரு எனப் பொருள்படுவது.)

وَلَمْ يَتَغَيَّرْ عَمَّا كَانَ مِنْ عَدَمِ الشَّكْلِ وَعَدَمِ الْحَدِّ

(எல்லை, மட்டுகளற்ற பிரபஞ்சத்தில் சிருட்டிப் பொருள்கள் வெளியான போதும்) உருவம் எல்லைகளற்ற முன்னிருந்த வுஜூதின் நிலை பேதப்படவில்லை.

بَلْ هُوَ الْاٰنَ كَمَا كَانَ عَلَيْهِ

மேலும் அது இப்பொழுது, (முதலில்) எப்படியிருந்ததோ அப்படியேயிருக்கிறது. (எனவே உருவெடுத்து வெளித்தோன்றிய இந்தப் பிரபஞ்சங்களும் சிருட்டிப் பொருள்களும் வுஜூதிலே அருவமாகக் கலந்து நிறைந்து மறைந்திருந்தபோது தத்தம் உள்ளமைகளை அறிந்திருந்தன. தாம் உருவமெடுத்தபோது தத்தம் உள்ளமைகளை அவைகள் மறந்து விட்டன. அவ்வாறு தம்மைத் தாம் மறந்த ஒரு பகுதி தம்மை அதிலிருந்து வேறுபட்டவை எனக் கருதி தன்ஸீஹை மட்டுமே ஹக்கு என்கின்றன. மற்றொரு பகுதி தஷ்பீஹை மட்டுமே ஹக்கு என்கின்றன. என்னே மடமை! என்னே தம் இழிநிலைமை!! என்னே கொடுமை!!!)

(ஞானக் கடலான குத்புகள் பெருமான் அஷ்ஷெய்கு முஹிய்யுத்தீன் இப்னு அறபிய் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தன்ஸீஹ். தஷ்பீஹைப் பற்றிக் கீழ்வருமாறு பாடியுள்ளார்கள்.

கவிதை : شعْر

وَانْ قُلْتَ بِالتَّنْزِيْهِ كُنْتَ مُقَيِّدًا،

தன்ஸீஹை (மட்டுமே ஹக்கென்று) நீர் சொன்னீரானால். நீர் (அதைக் கொண்டு மட்டுமே) தளையிடப்பட்டவராகுவீர். (அதாவது ஓர் எல்லைக்குட்பட்டவராகுவீர்)

وَانْ قُلْتَ بِالتَّشْبِيْهِ كُنْتَ مُحَدَّدًا

தஷ்பீஹை (மட்டுமே ஹக்கென்று) நீர் சொன்னீரானால் நீர் (அதைக் கொண்டு மட்டுமே) எல்லையிடப்பட்டவராகுவீர்.) (அதாவது ஓர் எல்லைக்குட்பட்டவராகுவீர்.)

فَانْ قُلْتَ بِالْاَمْرَيْنِ كُنْتَ مُسَدَّدًا

(தன்ஸீஹ், தஷ்பீஹாகிய) இரண்டையும் (ஒன்றாக்கி அதை ஹக்கென்று) நீர் சொன்னீரானால், நீர் நேர்மையானவரானீர்.

وَكُنْتَ اِمَامًا فِى الْمَعَارِفِ سَيِّدًا

فَمَنْ قَالَ بِالْاشْفَاعِ كَانَ مُشْرِكًا

மெய்ஞ்ஞான அறிவிலே நீர் நாயகரானீர்; தலைவருமானீர். தன்ஸீஹையும் தஷ்பீஹையும் தனித்தனியாகப் பிரித்து இரட்டையை (ஹக்கென்று) சொன்னானே அவன் முஷ்ரிக்காகிவிட்டான். (இணை வைக்கிறவனானான்.)

وَمَنْ قَالَ بَالْاَفْرَادِ كَانَ مُوَحِّدًا

فَاِيَّاكَ وَالتَّشْبِيْهُ اِنْ كُنْتَ ثَانِيًا

(தன்ஸீஹையும் தஷ்பீஹையும் தனித்தனியாகப் பிரித்து ஹக்கென்று கூறாது) ஒருமைப்படுத்தி (அதையே ஹக்கென்று) கூறினானே அவன் (ஹக்கை) ஒருமைப்படுத்துகிறவன். நீர் இரண்டாவதானால் உமக்குத் தஷ்பீஹே உரித்தாகும்.

முதலாவது : தன்ஸீஹ், இரண்டாவது : தஷ்பீஹ்

وَاِيَّاكَ وَالتَّنْزِيْهُ انْ كُنْتَ مُفْرَدًا

நீர் முன்னதாகி விட்டீரானால் உமக்குத் தன்ஸீஹே உரித்தாகும்.

وَانَّ ذَالِكَ الْوُجُوْدَ وَاحِدٌ

அந்த வுஜூது ஒன்றேயாகும்.

(அறவே அதிலே எண்ணிக்கையில்லை - பலவென்று கூறத்தக்க எண்ணிக்கையில்லை.)

وَالْاَلْبَاسُ مُخْتَلِفَةٌ وَمُتَعَدِّدَةٌ

இன்னும் உடைகள் (தாம்) பேதப்பட்டவையாகவும் எண்ணிக்கை கொண்டவையாகவும் உள்ளன.

(1. தென்படாது அருவாக விளங்கிய வுஜூது தன்னிற்றானே மாற்றமடைந்து ஐம்பூதங்களாகவும் அவற்றுள்ளிருந்தே எண்ணற்ற உருவங்களாகவும் காட்சி கொடுத்தது.

2. இவ்வாறு பலவாறாக வேறுபட்டுப் பல இயற்கை அலங்காரங்களுடனும் எழில்களுடனும் தோற்றங் கொண்டவைகளே ஈங்கு உடைகளென வருணிக்கப்படுகின்றன.

3. இஃது எவ்வாறு தோற்றங் கொண்ட போதும் இதன் தாற்பரியம் அல்லது ஆரம்பம் அல்லது மூலம் ஒன்றேயாம்.)

وَانَّ ذَلِكَ الْوُجُوْدَ حَقِيْقَةُ جَمِيْعُ الْمَوْجُوْدَاتِ وَبَاطِنِهَا

அந்த வுஜூது எனும் பிரபஞ்சம் காணப்படும் அனைத்துச் சிருஷ்டிப் பொருள்களினுடையவும் அவற்றின் அந்தரங்கத்தினுடையவும் யதார்த்தமாகும்.

(வுஜூத் எனும் அறபு மொழியின் கருத்து: உள்ளமை, காண்டல், காட்சி, உண்டானது. பிரபஞ்சம், சிருஷ்டி Existing things என்பன. எனவே, வுஜூதைப் பிரபஞ்சம் எனக் கூறுவர். பிரபஞ்சம் என்பது: The world, the materials, universe எனும் கருத்துகளையுடையது. Universe என்பதன் கருத்து: cosmos, creation, nature சிருஷ்டிக்கிரமம், ஜகத்து, படைப்பு, பிரகிருதி, பிரபஞ்சம்.

கருத்துகள் எவ்வாறாயினும் வுஜூத் (பிரபஞ்சம் - universe) ஆகிய இது இரண்டாகப் பிரிக்கப்படுதல் காண்க.

1. வெளிப்படுத்தப்பட்ட பிரபஞ்சம். இது manifested universe எனப் பகரப்படும்.

2. வெளிப்படுத்தப்படாத பிரபஞ்சம். இது substratum எனக் கூறப்படும். எனவே இந்த வெளிப்படுத்தப்பட்டதையும் வெளிப்படுத்தப்படாததையும் தஷ்பீஹ் எனவும் தன்ஸீஹ் எனவும் கூறுவோம். இவ்விரண்டும் ஒன்று சேர்ந்த பிரபஞ்சம் அல்லது வுஜூதே தன்ஸீஹ்மஹ்ள் تَنْزِيْهُ مَحْضْ எனக் கூறப்படும். தன்ஸீஹிலிருந்து தான் தஷ்பீஹ் உண்டானது. தஷ்பீஹிலிருந்து தன்ஸீஹ் உண்டாகவில்லை. தன்ஸீஹிலிருந்தே தஷ்பீஹ் வெளியாயது. இயற்கையிலிருந்தே செயற்கை உண்டானது போன்று.

தன்ஸீஹ் : தூயது. அதாவது, அதுபோன்றதன்று இது போன்றதன்று எனக் கூறப்படும் ஒப்பு, உதாரணங்களிலிருந்து தூய்மையானது. இதுவே ஆதி நிலையாகும்.

தஷ்பீஹ்: நிகரானது. அது போன்றது இது போன்றது எனக் கூறப்படும் ஒப்புகள் பொதிந்தது.

وَانَّ جَمِيْعَ الْكَائِنَات حَتَّى الذَّرَّةَ لاَتَخْلُوْا عَنْ ذَالِك الْوُجُوْدِ

அணுவரையுள்ள இந்தச் சிருஷ்டியுலகம் அனைத்தும் அந்த வுஜூதை விட்டும் ஒழிந்தனவல்ல. (அதாவது வேறுபட்டனவல்ல.)

وَانَّ ذَالِكَ الْوُجُودَ لَيْسَ بِمَعْنَى التَّحَقُّقِ وَالْحُصُوْلِ

("தஹக்குக்"கினுடையவும் 'ஹுஸூலி'னுடையவும் கருத்தைக் கொண்டதல்ல அந்த வுஜூத். (அதாவது. தஹக்குக் 'ஹுஸூல்' ஆகிய இரண்டினதும் கருத்துகளைக் கொண்டு வுஜூத் எனும் ஆழ்கடலை விளக்கவோ புரிந்து கொள்ளவோ முடியாது என்பதாகும்.)

'தஹக்குக்' என்பது கீழ்க்காணும் பொருள்களைக் கொண்டது: நிச்சயத்தல், மெய்யெனக் கொள்ளல். திட்டப்படுத்தல், ஆராய்தல், தெளிதல், நிரூபித்தல்.

ஹுஸூல் என்பது கீழ்க்காணும் பொருள்களைக் கொண்டது: உண்டாதல், நிகழ்தல், அடைதல், பெறுதல், சேர்த்தல்.

எனவே, மேற்கண்ட கருத்துகளைக் கொண்டு வுஜூதின் உள்ளமையை அறிதல் இயலாது என்பதே மூல நூலார் எடுத்துக் கொண்ட முடிவு.)

لاَنَّهُمَا مِنَ الْمَعَانِى الْمَصْدَرِيَّة

ஏனெனில் (மேலே கூறப்பட்ட 'தஹக்குக்' ஹுஸூல் ஆகிய அவ்விரண்டு சொற்களும் (சொற்கள் பிறக்கும்) மூலச் சொல்லின் (தொழிற் பெயரின்) கருத்துகளினின்றுமுள்ளவை. இவை (திணை, பால். எண், இடம், காலம் காட்டாத போதும் வுஜூதைப் பூரணமாய் விளக்கத் தகுதியுடையனவல்ல. ஹக்கைச் சொற்கருத்தைக் கொண்டு மனதிலே

இத்திரப்படுத்திக் கொள்ளுதல் ஹக்கில் இரண்டறக் கலந்தோம் அல்லது அதனையடைந்தோம் என உள்ளத்தில் உறுதி கொள்ளுதல் போன்றவை ஹக்கை உண்மையில் அடைய வைக்காது. காமிலான ஹக்கைத் தன் ஞானக் கண்ணாற்கண்டு இரண்டறக்கலந்த செய்குமாரை அண்டியே அனுபவித்தலினாலேயே தான் ஹக்கை அடைதல் வேண்டும் என்பதையும் புத்தகங்களை (கிதாபுகளை) நாளெல்லாம் புரட்டிப் புரட்டி மேலும் கீழும் வாசித்து வாசித்துத் தாம் அடையப் போவதென்றுமே இல்லையென்பதையும் விளக்கவே மூலநூலார் இக்கருத்தை வெளியிடலானார்.

لَيْسَ بِمَوْجُوْدَيْنِ فِى الْخَارِجِ

இவையிரண்டு வெளி(த் தோற்றம் அல்லது வெளிக் கருத்திலே)யே காணப்படுவன(வும் உணரப்படுவனவும்) அல்ல. (அதாவது, இவையிரண்டின் நுண்கருத்துகளும் பார்வைக்குடையனவாய் வெளித் தோன்றுவனவல்ல. திணை, பால், எண், இடம், காலம் ஆதிய காட்டும் பொருளாயினே தோன்றற்பாலன. எனவே எத்தகைய சொற்களைக் கொண்டும் வுஜூதின் தாற்பரியத்தை நூல்கள் வழியாக அறிந்து கொள்வது பூரணமாய் இயலாதது என்பதை விளக்கவே இவ்விரு சொற்களையும் மூலநூலார் எடுத்துரைத்தார் என்பது எவருக்கும் புலனாகும்.

فَحِيْنَئِذٍ لَايُطْلَقُ الْوُجُوْدُ بِهٰذَاالْمَعْنٰى عَلَى الْحَقِّ الْمَوْجُوْدِ فِى الْخَارِجِ

அப்பொழுது (பூரணத்திலிருந்து அங்கமாய்) வெளித்தோன்றிய சிருஷ்டிப் பொருள்களான ஹக்கெனும் யதார்த்தம் அல்லது உள்ளமைப் பொருளின் மீதுள்ள இக்கருத்துக் கொண்டு வுஜூது பூரணப்படாது. (எனவே இக்கருத்துகள் வெளியே காணவோ உணரவோ முடியாதாயினும் காணவோ உணரவோ முடியுமாயினும் வுஜூதைப் பூரணமாய் விளக்கா.

பரிசுத்த ஹக்காகிய இறைவனின் அழகிய திருநாமங்களைக் கொண்டோ அதன் பண்புகளைக் கொண்டோ பூரணமாய் அதையறிதல் முடியாது. அவ்வாறே நாம் அறிந்தோம் எனக் கொண்டால் அதிலிருந்து சந்தேகங்களும் ஹக்கையறிய முடியாத இழப்புமே ஏற்படும் என்பது முன்கூறிய சொற்கருத்துகளிலிருந்து தெளிவாகும்.

இதனாலேயே இன்று மக்கள் மத்தியில் உள்ள வணக்கமாகிய தொழுகை, ஒரே நிரையில் ஒரே புறம் நோக்கி நின்றபோதும் பலமுகப்பட்டதாயும் பல நோக்குடையதாயும் மனச் சலனம் உடையதாயும் இறை இதுவோ அதுவோ எனும் சந்தேகமுடையதாயும் அது எங்கேயோவென்னும் மனத்தடுமாற்றம் உடையதாயும் அறியாதார் உருவ கோலத்தையும் சிறிது அறிந்தோர் அருவ கோலத்தையும் எண்ணியவாறு நிறைவேற்றப்படுவது வருந்தத்தக்கதே.

ஹக்கைத் தருக்க முறையாலோ சொல் விளக்கங்களாலோ அறிதல் இயலாததாகும். இதனை விளக்கக் கீழே சில உதாரணங்கள் தருகிறோம்.

இமாம் பக்ருத்தீன் ராஸி (ரலி) அவர்களுக்கு நஜ்முத்தீனுல் குப்ரா (ரலி) அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவர்களுக்கிடையே ஓர் உரையாடல் நிகழ்ந்தது. நஜ்முத்தீனுல் குப்ரா (ரலி) அவர்கள், பக்ருத்தீன் ராஸி (ரலி) அவர்களுக்குக் கிடைத்த இமாம் என்ற பட்டம் கல்வித் திறமையால் கிடைத்ததென்றும் அல்லா(ஹ்)வை அறியவுதவுவது மெய்ஞ்ஞானமாகிய இல்முல் மஉரிபத்தேயாகும் என்றும் அல்லா(ஹ்)வை அவர்கள் எப்படி அறிவார்களென்றும் கேட்டபோது தாம் அல்லாஹ் உள்ளான் என்பதற்கு நூறு ஆதாரங்கள் காட்டியுள்ளார்கள் என்றும் விடை பகர்ந்தார்கள். அப்போது நஜ்முத்தீனுல் குப்ரா (ரலி) அவர்கள் அவைகள் சந்தேகத்தை நீக்க உதவுமேயல்லாது மெய்விசுவாசத்தையும் அதன் வழியே உள்ள சந்தேகத்தையும் நீக்க உதவாது என்றும் மஉரிபாவே இவ்வகையில் சிறப்புடையது என்றும் கூறியபடி நஜ்முத்தீனுல் குப்ரா (ரலி) அவர்களை அடைந்து ஞானதீட்சை பெற்றுப் பேரருள் பெற்றார்கள். இதிலிருந்து விளங்குவது யாதெனில் சொற் கருத்துகளைத் தாமாக

விளங்கி ஹக்கை விளங்க முற்படுதலில் எந்தப் பிரயோசனமும் இல்லையென்பதாகும். இக்கல்வி ஏட்டுச் சுரைக்காய்க்குச் சமனாகும். இவ்விடயம் நமது பேரின்பப் பாதையில் விரிவாக உள்ளது கவனிக்கவும்.

இமாம் ஷாபிஇய் (ரலி) அவர்களிடம் குதர்க்கவாதி ஒருவன் வந்தான். அவன் மூன்று கேள்விகள் கேட்டான், அவற்றில் ஒன்று:

அல்லா(ஹ்)வின் மீது யான் நம்பிக்கை கொள்ள வேண்டுமாயின் எனக்கு அல்லா(ஹ்)வை நேரில் காட்ட வேண்டுமென்றான். தொடர்ந்து இரண்டாம் மூன்றாம் கேள்விகளையும் கேட்டான். அப்பொழுது இமாம் அவர்கள் திடீரென ஒரு கல்லையெடுத்து அவன்மீது எறிந்தார்கள். அவன் உடலில் பட்டதும் அவனுக்கு நோவுண்டாயிற்று. கேள்வி கேட்டால் கல்லால் எறிவதேன் எனக் கேட்டுக் கோபப்பட்டான். இமாம் அவர்கள் செய்த குற்றத்துக்காக வழக்குத் தொடரப்பட்டது.

அப்போது இமாம் அவர்கள் நீ அல்லாஹ்(வை)க் காட்டும்படியும் காட்டினால் நம்புவதாயும் கூறினாய். அப்போது யான் உன்னைக் கல்லால் எறிந்தேன். அதனால் வேதனையேற்பட்டதாயும் கூறுகிறாய். அப்படியாயின் வேதனையை எனக்குக்காட்டு. இல்லையாயின் என்னால் நம்ப முடியாது. இதுவே உனது முதற் கேள்விக்குப் பதில் என்றார்கள்.

இங்கே, இது குதர்க்கவாதிக்குத் தர்க்க முறையான விளக்கமேயன்றி மனதில் பதிந்து ஹக்கை உள்ளபடி அறிவதற்கான இர்பான் விளக்கமாகாது. இது உள்ளதை உள்ளபடி இணையற்ற நிலையில் மனமார விளங்க வைப்பதன்று. ஹக்கை உள்ளபடியே மனமார விளங்கிக் கொண்டவர்கள் ஒரு கண நேரமேனும் ஹக்கை விட்டும் பிரிந்தவர்களாகார்.)

تَعَالَى اللّٰهُ عَنْ ذَالِكَ عُلُوًّا كَبِيْرًا

(அல்லா(ஹ்)வை மனிதர்கள் எவ்வாறு நினைத்த போதும்) அல்லா(ஹ்)வோ (மேற்கூறிய மட்டுகள், வரம்புகள் சொற்கருத்துகள்

முதலான இணையெனும்) அதை விட்டும் மேன்மையாலும் மகாத்மியம் அல்லது பெருமையாலும் உயர்வு மிக்கவன்.

بَلْ عَنَيْنَا بِذَالِكَ الْوُجُوْدِ الْحَقِيْقَةَ الْمُتَّصِفَةَ بِهٰذِهِ الصِّفَاتِ

மேலும் (கீழே கூறப்படும்) இந்த (மூன்று) வருணனைகள் கொண்டு, வருணங் கொண்ட உள்ளமையையே அந்த வுஜூதைக் கொண்டு நாம் கருதுகிறோம்.

நான் கருதுகிறேன் - அவையாவன : اَعْنِيْ

وُجُوْدُهَا بِذَاتِهَا

(முதலாவது) அது தன்னைக் கொண்டே உண்டாயிருப்பது. (அதாவது அது தன்னைக் கொண்டே நிற்பதாகும் - அல்லது அது தன்னைக் கொண்டே நிலையானது - அல்லது அது தன்னைக் கொண்டே தன்னைக் காண்பது - அது இது என்பதல்லாததாய் இருப்பது. (உ.ம்) மரம் அல்லது களி என்பவைக்கு வேறு கூட்டுப் பொருள்கள் உதவியாகவுள்ளன; தன்னிற்றானே நிற்பவையன்று. ஆயினும் விளக்கம் கருதி இவைகள் வருவிக்கப்பட்டன. இதற்கு முன் ஒன்றும் இல்லாதிருந்தது எனக்கருதி மற்ற விளக்கங்களை அறிதல் எளிதாகும். முன் கூறப்பட்டது போன்று உதாரணங்களைக் கொண்டு ஹக்கை அடைதல் எளிதல்ல. ஆயினும் ஹக்கை இதுதான் எனத் தெளிவுற அறிய இஃதொரு வழியாகும்.)

وَوُجُوْدُ سَائِرِالْمَوْجُوْدَاتِ بِهَا

(இரண்டாவது) ஏனைய எல்லாச் சிருட்டிப் பொருள்களினுடையவும் உள்ளமை அல்லது வுஜூது அந்த வுஜூதைக் கொண்டேயிருப்பது. (அந்த ஹக்கான வுஜூதிலிருந்தே ஏனைய எல்லாச் சிருஷ்டிப் பொருள்களும் வெளியாயின அல்லது உண்டாயின என்பதாகும். உம்.: மரத்திலிருந்து நாற்காலி. மேசை. கட்டில். கதவு. யானை போன்றவைகளும்

களியிலிருந்து சட்டி, பானை, குடம் போன்றவைகளும் வேறுருப் பெற்று வெளியாயின போன்றது.)

وَانْتِفَاءِ (وُجُوْد) غَيْرِهَا فِى (الْوُجُوْدِ الخَارِجِ

(மூன்றாவது) வெளியான வுஜூதிலே (உள்ளமையிலே) அதல்லாத (ஹக்கல்லாத) வுஜூது (உள்ளமை) விலகிக் கொள்கிறது. (அதாவது இல்லை.) (அல்லது)

வெளியில் ஹக்கல்லாதது விலகிக் கொள்கிறது. (வெளிப்பட்டு சிருஷ்டிகள் உருவம் எடுத்தபோதும் அவை ஹக்கல்லாதன ஹக்கில் நின்றும் வேறானவை என்பது விலகிக் கொள்கிறது. ஆயின் ஹக்குத்தான் என்பது தெளிவாகிறது. இது ஒரு தனிப்பட்ட வுஜூத் என்பது விலகிக் கொள்கிறது. வெளியானது அதல்ல என்பது நீங்கி அதுவேயாகும் என்பது பிரத்தியட்சமாகிறது. வெளியான வுஜூத் அல்லது பிரபஞ்சம் அல்லது சிருஷ்டிப் பொருள்கள் ஹக்கான உள்ளமையான அல்லா(ஹ்)விலிருந்து வேறானது எனக் கருதாது அதிலிருந்தே வெளியானது எனக் கருதல் வேண்டும். ஹக்கின் உள்ளமையல்லாத ஒரு பிரத்தியேகமான, மேலதிகமான, தனி உள்ளமை வெளியானவற்றிற்கு இல்லை. ஒருவனின் நிழல் அவன் அசைந்தாலே அசையும். அவ்வாறே சிருஷ்டிப் பொருள்களும் ஹக்கின் நிழலாகவே விளங்குகின்றன.

மிக முக்கியம்: தன்னை அறிந்தவன் தன் ரப்பை (இறைவனை) அறிந்தான் என்பது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மணிமொழி. இங்குத் தன்னை அறிந்தவனே ஹக்கை அறிகிறான். அப்போது அவன் ஹக்கிலிருந்து பிரிந்தவன் அல்லன் என்பதைப் பூரணமாய் ஒப்புக் கொள்கிறான். 'தன்' வுஜூதையும் ஹக்கின் வுஜூதையும் ஒன்றென அறிகின்றனான். அப்போது வுஜூதை அறிந்த வரையில் ஹக்கோடு சம்பந்தப்படுகிறான். அவ்வாறே அவன் எஜமானாகிறான். அறியாதவன் ஏனைய மிருகங்கள் தன்னையறிந்த அளவாவது அறியாதுள்ளான். அறியாதவனது உள்ரங்கம் ஹக்காகவே இருந்த போதும் அவன்

அப்தாகிவிடுகிறான். இங்கே ஷிர்க் உண்டாகிறது. ஷிர்க் என்பது ஹக்கிலிருந்து பிரிந்து நிற்பதாகும். அதாவது ஹக்கு வேறு யான் வேறு எனக் கருதுவதாகும். ஒரே வுஜூதை இரண்டாகப் பிரிப்பதாகும். இந்த இடத்தில்தான் ஹக்கு ஹக்காகவும் அப்து அப்தாகவும் மாற்றம் பெறுகின்றன. உள்ளமையில் அனைத்தும் ஒன்றே. நிய்யத்தாகிய எண்ணம் அல்லது நினைப்பு மனிதனைக் கீழ்நிலைக்கும் மேல்நிலைக்கும் எடுத்துச் செல்கிறது. உண்மையை அறிதலே மிக முக்கியம்.

وَانَّ ذَالِكَ الْوُجُوْدَ مِنْ حَيْثُ الْكُنْهِ لَايَنْكَشِفُ لِاَحَدٍ

அது அதேயான மூலச் சத்தாயிருக்கின்ற காரணத்தால் அந்த உள்ளமை ஒருவருக்கும் வெளியாகாது. (இங்கே முர்ஸலான நபியாக இருந்தாலும் மிக நெருக்கமான மலக்காக இருந்தாலும் எவருக்கும் இந்த உள்ளமை வெளியாகாது என்று கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் பொருத்தமுடையதன்று. நபியாகவோ ரஸூலாகவோ மலக்காகவோ வேறு எவராகவோ இருப்பினும் ஹக்கில் விஸாலாகி இரண்டறக் கலந்த பரிபூரணமானவர்கள் உள்ளமையை அறிந்தவர்களே; உள்ளமையிற் கலந்தவர்களே. பனிக்கட்டி நீரில் கரைவது போன்றதும் தன்னிலிருந்து தானாகவே எழுந்த அலை, கடலில் ஒடுங்குவது போன்றதும் இன்னவர்கள் நிலையாகும். ஆதலால் அத்தகையோருக்கு உண்மையாகிய உள்ளமை அவசியம் வெளியாகும்.)

(மற்ற ஷரஹில்: மற்றுமொரு விளக்க நூலில், அறிவு சம்பந்தப்பட்ட உதாரணங்களினிமித்தம் (மனிதன்) ஹக்கை அறிந்து கொள்ளமாட்டான். தோன்றல்களிலிருந்து (அடையாளங்கள்) தோன்றுவதினிமித்தமும் அறவே ஹக்கு வெளியாகாது.

அதாவது, கடலும் அலையும் நீரும் பனிக்கட்டியும் போன்ற விளக்கங்களிலிருந்து கூட ஹக்கைத் தெளிவாய் அறிந்து கொள்ள இயலாது. வெளியே தோன்றியிருக்கின்ற பொருள்களைக் கொண்டு

இயற்கையில் இன்பங் கொள்வதனாலோ இறை வெளிப்பாடுகளைப் பார்ப்பதினிமித்தமோ இறையிலிருந்து பரிபூரணமாய் வெளியாகிய மள்ஹருள் ஹக்கான இறைத் தோன்றல்களிலிருந்து வெளியாகும் அடையாளங்களான கராமாத்களாலோ (ஹக்கை) இறையைப் பிரத்தியட்சமாய்க் காண்பது - அறிவது இயலாது என்பது இதன் கருத்து. எவன் ஹக்கை வேறாகவும் கல்கை வேறாகவும் பிரித்து, ஷிர்க்கில் இருக்கிறானோ அவனுக்கு மேலே கண்ட விளக்கங்கள் பொருத்தமானதென்க. அஃது அஃதாகவே இருக்கிறது என்பதை அறியாதாருக்கு ஹக்குத் தோற்றமாகாது. அஃதேயல்லாது வேறேதும் அதை அறியப் போவதில்லை. (உ.ம்) நீராகிய ஹக்கிலிருந்து வெளியாகிய பனிக்கட்டியெனும் படைப்பினம் தன்னை நீரெனவே கருதியுள்ளது. அது பின்னும் நீராகி விடுவேன் என அறிந்துள்ளது. ஆனால் ஹக்கிலிருந்து வெளியாகிய மனிதனோ தன் தாற்பரியத்தை அறியாதுள்ளான். ஹக்கிலிருந்து தன்னை வேறாகப் பிரித்திருக்கும் மூடன் ஒருவன் தன்னை எப்படி ஹக்கிலிருந்து வெளியானவன் என்பதையறிவான். இதுவே இங்கு, "ஒருவருக்கும் வெளியாகாது" என்பதன் கருத்தாகும். அவனுடனே வேறொரு பொருளும் இல்லை. அவன் (இறை) முன் எப்படியிருந்தானோ இன்றும் அப்படியே இருக்கிறான். எனவே, அஃதல்லாத வேறொன்று என்றுமே எங்குமே இல்லை. எல்லாம் அதுவே. ஆதலால் தானும் பரிபூரணத்திலிருந்து வெளியான ஒரு பகுதி என்பதை அறிபவனே ஹக்காகிய இறையை அறிவான்.)

وَلَايُدْرِكُهُ الْعَقْلُ وَلَاالْوَهْمُ وَلَاالْحَوَاسُّ وَلَايَتَأَتّٰى فِي الْقِيَاسِ.

புத்தியும் சந்தேகமும் உணர்வும் இந்த வுஜூதை அடையாது. ஒழுங்கு பிடிப்பதிலும் (அந்த உள்ளமை) அறிவு வராது.

(புத்தியைக் கொண்டோ சந்தேகம் ஒருவனுக்கு ஏற்பட்டு இதுதான் என்னும் முடிவுக்கு வருவது கொண்டோ சிந்தனை செய்வது கொண்டோ தருக்க முறைகளைக் கொண்டோ அது கொண்டு கண்டறிந்த சில ஒழுங்கு முறைகளைக் கொண்டோ அல்லா(ஹ்)வின் திருநாமங்களையும் ஸிபாத்துகளான வருணனைகளையும் மனனஞ் செய்து அவற்றின் கருத்துகளைச் சரியாகவும் விளக்கமாகவும் அறிவது கொண்டோ நாடோறும் பாராயணஞ் செய்வது கொண்டோ அதன் உள்ளமையை எவராலும் அறிதல் இயலாததாகும்.

இரண்டறக் கலந்து பூரணம் என்றாலும் பரிபூரணமாய்த் திகழ்ந்த ரஸூல் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்களுக்கும் அவர்கள் காட்டித் தந்த ஞானவழியில் அவர்கள் பேரருளால் இரண்டறக் கலந்த மகான்களுக்கும் இதை அடைவதில் எந்தக் கஷ்டமும் இராது. நெருப்பிற் கலந்த இரும்பு நெருப்பாவது போலும். அது நெருப்பாகவிருக்கும்போது இரும்பெனும் பெயர் மறைகிறது. அது நெருப்பாக விருக்கும் போது தன் வுஜூதைத்தானே அறிகிறது.)

لاَنَّ كُلَّهُنَّ مُحْدَثَاتٌ

ஏனெனில் மேலே கூறப்பட்டவைகள் அனைத்தும் புதிதாய் உண்டானவைகள். (மேலே கூறப்பட்ட புத்தி, சந்தேகம், உணர்வு, ஒழுங்கு காண்டல் முதலாயின இல்லை அல்லது சூனியம் அல்லது இல்லையென்றாலும் உள்ளது என்றிருந்து அதிலிருந்தே அது தன்னை வெளிப்படுத்திக் காட்ட உண்டான அல்லது படைக்கப்பட்டவைகளே மேலே கூறப்பட்டவைகள். மேலும், இவைகள் சடப் பொருள்கள் உண்டாவதற்கு முன் உதித்தவைகளாகும்.)

وَالْمُحْدَثُ لاَيُدْرِكُ بِالْكُنْهِ الاَّ الْمُحْدَثَ

وَالْمُحْدَثُ اَيْ مَخْلُوْقُ الْمَسْبُوْقِ بِالْعَدَمِ

அதுவேயான – (உள்ளமையான) யதார்த்தத்தை (இல்லது எனினும் உள்ளதாய் உள்ளதில் முன்படைக்கப்பட்ட)– புதிதாய் உண்டானவை புதிதாய் உண்டானவையன்றி அடைந்து கொள்ளா. (அதாவது புதிதாய் உண்டானதை உதாரணங்காட்டி அதன் மூலமே அதுவே அதான யதார்த்தத்தை நிதரிசனமாய் அறிந்து கொள்வது அல்லது உள்ளபடியே விளங்கிக் கொள்வது முடியாது. புதியனவற்றைப் புதியன கொண்டு அறிந்து கொள்ளலாம் என்பது. புதிதாய் உண்டானவை என்பது இல்லாததாயிருந்தது கொண்டு முந்திப்படைக்கப்பட்டவை) புதிதாய் உண்டானது மூலத்துவத்தை (அடையாது); அறிந்து கொள்ளாது; புதிதாய் உண்டானதைத் தவிர. (அதாவது புதிதாய் உண்டான ஒன்று – பூரணத்திலிருந்து பார்வையற்ற தோற்றமின்றிய அல்லது தோற்றமுள்ள எஃதாயினும் மிகப் பண்டைய காலத்தில் தோற்றமுற்றதாயினும் அது புதிதாய் உண்டானது; முஹ்தஸ் (مُحْدَث) எனப்படும்.) (அதுபோன்ற இல்லது எனினும் உள்ளதாய் உள்ளதில் முன்படைக்கப்பட்ட) புதிதாய் உண்டானதைத் தவிர. புத்தி, சந்தேகம், உணர்வு ஆதியன பார்வைக்குடையனவல்ல. இவை போன்றவைகள் சிருஷ்டிக்கு முன் சிருஷ்டிக்கப்பட்டவைகள். இதனாலே இவைகள் முஹ்தஸ் (مُحْدَث) எனும் இல்லது எனினும் உள்ளதாய் உள்ளதில் முன் படைக்கப்பட்ட புதிதாய் உண்டானவை என அழைக்கப்படுகின்றன. புதிதாய் உண்டானவை என்பது இல்லாததாயிருந்தது கொண்டு முந்திப் படைக்கப்பட்டவை.

(தென்படக்கூடிய ஒரு பொருளைக் காட்டி தென்படாத அகண்டாகார பரப்பிரம வுஜூதை – பிரபஞ்சத்தை விளக்குதல் இயலாதாகும். புதிதாய் உண்டானது புதிதாய் உண்டானதைத் தவிர – படைப்பினங்கள் படைப்பினங்களைத் தவிர அதுவே அதான வுஜூதை அடைந்து கொள்ளாது. அதாவது அறிந்து கொள்ளாது. அதுவே முஹ்தஸாகிய (مُحْدَث) புதிதாய் உண்டானதைக் கொண்டு முஹ்தஸ் (مُحْدَث)களை மட்டுமே அறிந்து கொள்ளவியலும். சிருஷ்டிப் பொருள்களை உதாரணமாகக் காட்டுவதால் சிருஷ்டிப் பொருள்களை

மட்டுமே அறிந்து கொள்ள முடியும். அகண்டாகார சொரூபத்தை, வடிவுடைய உருவத்தைக் கொண்டு விளக்கல் இயலாதாகும். எனினும் அறிந்ததைக் கொண்டே அறியாததை அறிதல் எனும் உத்தி அல்லது நியதியின்படி ஹக்கை அறிதற்குத் தென்படும் உதாரணங்களே உபயோகிக்கப்படுகின்றன. இவை ஆரம்பப் படிகள். பரிபூரணமாய் அறிவதாயின் பரிபூரண 'செய்க்' (ஆத்ம தந்தை) ஒருவரையே தஞ்சமாகக் கொள்ளல் வேண்டும். இதற்கு முன்னும் வேறோரிடத்தில் இது விளக்கப்பட்டுள்ளது.)

وَتَعَالىٰ بِذَاتِه وَصِفَاتِه عَنِ الْحُدُوْث عُلُوًّا كَبِيْرًا

உயர்வாலும் பெருமையாலும், புதிதாய் உண்டாகிறவைகளை விட்டும் அவனுடைய உள்ளமையைக் கொண்டும் அவனுடைய வருணனைகளைக் கொண்டும், அல்லாஹு தஆலா உயர்வடைந்தான்.

مَنْ عَرَفَ نَفْسَهُ فَقَدْ عَرَفَ رَبَّهُ يَهْدِيْ مَنْ يَشَاءُ

எவன் தன்னையறிந்தானோ நிச்சயமாக அவன் அவனுடைய இறைவனை அறிந்தான் எனவும் அவன் நாடியவர்களுக்கு நேர்வழி காட்டுவான் எனவும் ரஸுலுல்லாஹ் அவர்களும் அல்லாஹுதஆலாவும் கூறுகின்றமையால் தெண்டிப்பவர்களால் ஹக்கை நிச்சயம் அடையலாம். அல்லா(ஹ்)வை அறிந்த ஞானிகளிற் சிலர், அல்லாஹ்வின் 'குன்ஹு'(كُنْهُ)வாகிய யதார்த்தம் அல்லது அதுவேயானது ஒருவருக்கும் வெளியாகாது என்கிறதிலே சந்தேகம் கொண்டார்கள். அவ்விறை ஞானிகள் ஹக்கை அனைத்துமாய்க் காட்சி கண்டார்கள்.

ஏக ஞான அறிவை அறிந்த அறிஞரல்லாதார் சிலர் மனிதன், குதிரை முதலானவைகளை மிருக இனமாகக் கண்டார்கள். வானம், சூரியன், சந்திரன் முதலானவைகளை நட்சத்திர இனமாகக் கண்டார்கள். அவர்கள் இவைகளின் மூலம் அல்லது யதார்த்தம் எது என்பதை அறியவில்லை. ஆரிபீன்கள் ஹக்கு ஸுபுஹானஹுவதஆலாவை

வெளிவந்த பொருள்களிலும் உள்ளத்தால் காட்சி காண்கிறார்கள். அதாவது மனிதர்களெனவும், மிருகங்களெனவும், தாவரங்களெனவும். நீரெனவும் மண்ணெனவும் சூரியன் எனவும் சந்திரன் எனவும், வானமெனவும், பூமியெனவும் வேறு வேறாய்க் காட்சி காண்பதில்லை. பூரணத்தை வேறு வேறாய்க் கூறுபடுத்திக் காண்பவர்கள் ஹக்கு ஸுபுஹானஹுவதஆலாவின் யதார்த்தத்தை அறியமாட்டார்கள். இப்படிப்பட்டோர் எப்படி ஹக்கை அடைவர். இவர்கள் ஹக்கைச் சித்திரவதை செய்கிறார்கள்.

மேலும் குன்ஹு (كُنْهُ) எனப்படும் யதார்த்தமானது குறிப்பானவைகள் அனைத்தை விட்டும் நீங்கிக் கொண்டது. ஆகவே அது குறிப்பற்றது. இதனையே 'தன்ஸீஹ்' (تَنْزِيْه) எனவும் 'லாதஅய்யுன் (لاتَعَيُّنْ)' எனவும் 'அதம்' (عَدَمْ) எனவும் கூறுவர். "தஅய்யுன்" (تَعَيُّنْ) என்பது தஷ்பீஹிய்(تَشْبِيْهِى) யாகும். எல்லாம் லாதஅய்யுனிலிருந்தே வெளியாயின. வெளியாகியவைகளே 'தஅய்யுன்'(تَعَيُّنْ)களும் ஏனையவைகளும், தஷ்பீஹி(تَشْبِيْه)ன் யதார்த்தம். இவற்றின் யதார்த்தம் தன்ஸீஹா(تَنْزِيْه)கும். "தன்ஸீஹே" (تَنْزِيْه) மாற்றம் பெற்றதால் தஷ்பீஹ் (تَشْبِيْهْ) எனப் பெயர் கொண்டுள்ளது. "லாதஅய்யுன்"(لاتَعَيُّنْ) தஅய்யுன் (تَعَيُّنْ) முதலானவைகளுக்கான உரிய கருத்தும், விளக்கமும் கீழே கொடுக்கப்படும்.

புதிதாக உண்டாகும் பொருள்களுக்கு முடிவு. எல்லை, ஆரம்பம் மட்டு முதலியன உண்டு. ஹக்கு அவைகளை விட்டும் பரிசுத்தமானது. சிருஷ்டிப் பொருள்கள் யாவும் கர்த்தாவின் பகுதிகளே. இலை, கொப்பு, பூ, பழம், காய், தண்டு, வேர் ஆதியன போன்றவையே சிருஷ்டிப் பொருள்களுக்கு உதாரணம் போன்றவை. இலை தனியே மரமாகாது.

கொப்பு மரமாகாது. பூ, காய், கனி ஆகியனவும் மரமாகா. ஆயினும் மரத்திலிருந்தே உதித்து மரத்திலே உள்ளவை. மரமின்றேல் காயில்லை, கனியில்லை, கொப்பில்லை, வேரில்லை, தண்டில்லை. ஆகவே அவை மரத்தின் பகுதிகள். அவை தம்மைத் தனித்தனியாய் நினைக்கும்போது அவை மரத்திலிருந்து வெளியான மரத்தின் அங்கங்களாகின்றன. அவை தமது பிறப்பு நிலையை அறியும்போது தம்மை (மொத்தமாக) முழுமையாக மரத்தோடு சேர்த்து நினைக்கும்போது; அவை எங்கிருந்து எப்படி உதித்தன என்பதை நினைக்கும்போது தம் தாற்பரியத்தை நினைக்கும்போது, தாமும் மூலமான மரமாகின்றன. பரமநிலையை அடைகின்றன. அப்போதே அவைகளும் தாம்கொப்பல்ல மரமாகத்தானே உள்ளேன்; யான் காயல்ல; என் யதார்த்தம் மரமல்லவா? கனியாகிய யானும் அவ்வாறே; தண்டாகிய யானும் அவ்வாறே வேராகிய யானும் அப்படியே.

எனவே, காய் கனிகளெனவோ வேரெனவோ தண்டெனவோ இலையெனவோ கொப்பெனவோ எம்மில் என்ன வித்தியாயம், நாம் அனைவரும் ஒன்றேயாம். நாம் மரமல்லவா? என நினைத்து ஒன்றாகி ஒரே நிலையெய்திப் பரவசக் கூத்தாடுகின்றன. அவ்வாறே எம்பெருமானாரும் பரிபூரண தோன்றுதுறை. இதனாலே மூலநூலார் முதலில் நபிகள் நாயகம் அவர்களை "மள்ஹறுள் அத்தம்மு" (مَظْهَرُ الْاَتَــمّ) என்றார். தன்னை அறிந்தவன் இவ்வாறே தன்னை யாரென அறிந்து கொள்வான். பரவசமடைந்து பிரம நிலையை அடைவான்.)

وَمَنْ اَرَادَ مَعْرِفَتَهُ مِنْ هَذَاالْوَجْهِ وَسَعَى فِيْهِ فَقَدْ ضَيَّعَ وَقْتَهُ

இந்த ஞானப் போக்கிலே எவன் ஒருவன் அல்லா(ஹு)வை அறியவிரும்பினானோ அவன் அதிலே முயற்சி எடுப்பான். அப்படியன்றேல் அவன் திட்டமாக நேரத்தை வீணாக்கினான்.

இந்த ஞானப் போக்கிலிருந்து அவனை அறிய விரும்புகிறவர் ஹக்கை அறிவதிலே முயற்சியெடுப்பார். (எடுத்தார்). மேலும் (இதுவரை

தெண்டிப்பின்றிச் சென்ற) அவருடைய நேரத்தை அல்லது காலத்தை அவர் வீணாக்கினார்.

(கண்ட கண்ட கூட்டங்களோடு அலைந்து திரிந்து முடிவில் அதிற்கண்ட பலனின்றி - ஹக்கையறியாது நஷ்டவாளியாகி விட்டீர். கண்டதெல்லாம் உண்மையெனக் கருதி ஏமாற்றம் அடைந்தீர். கானலை நீரெனக் கருதி ஓடியிழைத்த மானென மயங்கினீர். ஆதலால் ஹக்கை அறிவதில் முயற்சி எடுப்பீராக! என மூலநூலார் கேட்டுக் கொள்கிறார்.)

எனவே, மேலே குறிப்பிட்டபடி அறியாத ஒரு பொருளை அறிய வேண்டின் அவன் அறிந்த பொருளைக் கொண்டே அறிய வேண்டும் எனும் உத்தியால் ஒரு வகையில் இறையை அறிய சிருஷ்டிப் பொருள்களை உதாரணத்துக்காகக் காட்ட வேண்டியதும் அவசியமே. ஆயினும் இவ்வுதாரணங்கள் முழுமையாக இறைவனைக் காட்டிக் கொடுப்பதாகா. ஆதலால் தான் உம்மில் நீர் சிந்தனை செலுத்துவது உமக்குப் போதுமானது எனக் கூறப்பட்டுள்ளது. எனவே, சிந்தனையும் நுணுகிய ஆராய்ச்சியும் பயிற்சியும் அவனுடைய குன்ஹு அகிய தன்னிற்றானான தன்மையை அடைய வழிவகுக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை.)

وانَّ ذَالِكَ الْوُجُوْدَ مَرَاتِبٌ كَثِيْرَةٌ

அந்தப் பிரபஞ்சம் அல்லது உள்ளமைக்கு அதிகப் படித்தரங்கள் உண்டு. (அஷ்ஷெய்க் அப்துல் கரீமுல் ஜீலிய் (ரஹ்) அவர்கள், தங்கள் நூலான அல் கஹ்பு வர்ரகீமில் நாற்பது படித்தரங்களைக் கூறுகிறார்கள். அவற்றைக் கீழே தருகிறோம்.)

1. தாதுஸ் ஸாதிஜ் - (கலப்பற்ற பிரணவம்) اَلذَّاتُ السَّاذَجْ

2. اَلْعَمَا அல்அமா - அந்தகம் - குறிப்பற்றது அதாவது கலப்பற்ற பிரணவ நிகழ்ச்சியைத் தோற்றுவிக்கும் அதுவேயான பிரணவ உள்ளமை. நிராமயம், ஏகமயம், நிர்விகற்பம்.

3. அல்அஹதிய்யத் (اَلْاَحَدِيَّة) (ஒப்பறத் தனித்தது. அதாவது மறைந்த கருவூலங்கள் இதனைக் கொண்டு குறிப்பிடப்படும்.

4. அல்வாஹிதிய்யத் (اَلْوَاحِدِيَّة) - (ஒப்புறத் தனித்தது. அதாவது இதுவே பெயர்களிலும் வருணனைகளிலும் பிரணவம் இறங்கும் படிகளில் முதன்மையாகும்.)

5. அல்உலூஹிய்யத் (اَلْاُلُوْهِيَّة) (தெய்வீக அல்லது பரமார்த்த உள்ளமையின் வருணனை அல்லது பிரபஞ்சம். அதாவது உயர்தரமான, கீழ்த்தரமான சிருஷ்டிகளின் பொதுவான படித்தரங்கள் பொதுவான காட்சி சிறிது சிறிதே ஆரம்பமாவதற்குரிய படித்தரம்.)

6. அர்ரஹ்மானிய்யத் (اَلرَّحْمَانِيَّة) - (தியானம் அல்லது கிருபை. உயர்தரமான சிருஷ்டிகளின் காட்சி சிறிது சிறிதே ஆரம்பமாவதற்குரிய சொந்தப் படித்தரம்.

7. அர்ருபூபிய்யத் (اَلرُّبُوْبِيَّة) - (இஃது இறைவன் தான் முக்கியமாய் நிறைவேற்ற வேண்டிய படித்தரமாகும். இங்கே தான் குறிப்பற்ற படைப்பின் அம்சம் தன்னில் தோற்றம் பெறலாயது. இஃது பார்வையற்ற பரிபூரணக் கோலம்.)

8. அல்அர்ஷ் (اَلْعَرْش) - (பூரண அம்சம் அல்லது கோலம். இஃது அசைவற்ற பூரணநிலையாகும். அசர நிலை. பார்வையற்ற பரிபூரணகோலம். குறிப்பற்ற நிலை.)

9. அல்கலமுல் அஃளா (اَلْقَلَمُ الْاَعْلٰى) - (மிக உயர்வுமிக்க - மிகச் சிறப்பிற்குரிய எழுதுகோல். இஃது அளவிலாது பரந்து விரிந்து நிறைந்து நின்று செயற்பட முனையும் ஒரு நிலை. எனினும் பார்வையற்ற பரிபூரண கோலம். குறிப்பற்ற நிலை.

10. அல்அக்லுல்குல் (اَلْعَقْلُ الْكُلّ) - (பூரணபுத்திப் பிரமாணம். இஃது இருதயத்தை எடுத்துக் காட்டுவது. இஃதும் முன்னையதை விடக்கூடத் தொழிற்பட முனையும் ஒரு நிலை. இதுவும் பார்வையற்ற பரிபூரண நிலை. குறிப்பற்ற நிலை.)

11. அன்னப்ஸுல் குல்லியா (اَلنَّفْسُ الْكُلِّيَّة) - (பரிபூரணமாய் அதுவேயானது. இது துடிப்பு அல்லது பூரண அசைவின் நிலை. இஃது இப்பொருள் என குறிப்பற்ற நிலை.)

12. அல்ஹயூலா (اَلْهَيُوْلى) - (உருவகமாகாத சத்து, மூலாதாரம் - பூரண அசைவு கொண்டது. குறிப்பற்ற நிலை.)

13. ஹபாஉ (هَبَآء) - (புழுதி, தூசி அதாவது கண்ணுக்கேனும் கருவிகளுக்கேனும் தென்படாத ஒருவகை வெளிப்பாடு. இதிலிருந்தே இவ்வின்ன பொருள்கள் வெளியாகலாம் எனும் தீர்மானம் உண்டானது.)

14. ஃபலகுல் அனாஸிர் (فَلَكُ العَنَاصِر) - (ஃபலக் - கிரகச் சுற்றுப்பாதை-orbit) ஆதிமூல வானமண்டலம், பஞ்சபூத மண்டலங்கள். பஞ்ச பூதங்களும் வெளியாவதற்கான இடம்.)

15. ஃபலகுல் அத்லஸ் (فَلَكُ الْاَطْلَسْ) - (பூ மண்டலம்)

16. ஃபலகுல் புரூஜ் (فَلَكُ الْبُرُوْج) - (இராசி மண்டலம்)

17. ஃபலகுல் ஸுஹல் (فَلَكُ الزُحَل) - (சனி மண்டலம்)

18. ஃபலகுல் முஷ்தரி (فَلَكُ الْمُشْتَرِيْ) - (வியாழன் மண்டலம்)

19. ஃபலகுல் மிர்ரீக் (فَلَكُ الْمرِّيْخ) - (செவ்வாய் மண்டலம்)

20. ஃபலகுஷ்ஷம்ஸ் (فَلَكُ الشَّمْس) - (ஞாயிறு-சூரிய மண்டலம்)

21. ஃபலகுல் ஸஹ்றா (فَلَكُ الزُّهَرَة) - (சுக்கிர மண்டலம்)

22. ஃபலகுல் அதாரித் (فَلَكُ الْعَطَارِد) - (புதன் மண்டலம்)

23. ஃபலகுல் கமர் (فَلَكُ الْقَمَر) - (திங்கள் மண்டலம்)

24. ஃபலகுல் அஸீர் (فَلَكُ الْاَثِيْر) - (Ether ஆகாச நுண்ணணு)

வாயு மண்டலத்திற்கு மேற்பட்ட பரந்த ஆகாய வெளி ஒளியையும் ஒலியையும் பரவச் செய்யும், கண்ணுக்குப் புலப்படாத வானவெளியில் உள்ள பரமாணு. நெருப்பு மண்டலம்.

25. ஃபலகுல் ஹவாஉ (فَلَكُ الْهَوَآء) - (பூமியைச் சூழவுள்ள வாயு மண்டலம்)

26. ஃபலகுல் மாஉ (فَلَكُ الْمَآء) - (நீர் மண்டலம்)

27. ஃபலகுத்துராப் (فَلَكُ التُّرَاب) - (மண் மண்டலம்)

28. ஃபலகுல் முவல்லதாத் (فَلَكُ الْمُوَلَّدَات) - (உற்பத்தி மண்டலம்)

29. ஃபலகுல் ஜவ்ஹறுல் பஸீத் (فَلَكُ الْجَوْهَرُ الْبَسِيْط) (பரந்து விரிந்த பரமாணு)

(அணு என்பது இருவகைகளாகப் பிரிக்கப்படுகிறது.)

1. ஜவ்ஹர் 2. அர்ளு ஜவ்ஹர் - பரமாணு. சூரிய கிரணத்தில் காணும் துகளின் முப்பதில் ஒருபாகமுள்ளது. நபோரேணு. அதிசூக்கும

அணு. (Atom) பிரிக்கவொன்னாத பரமாணு (ஆதாரமுள்ள நுண்ணணு மூலப் பிரகிருதி. பிரபஞ்ச காரணமான மாயை - தன்னிலே உயிர்வாழ முடியுமானது.)

(பிரகிருதி - அது தன்னில் நிலையானது.)

30. ஃபலகுல் அர்ளுல்லாதிம் (فَلَكُ الْعَرْضُ اللاَّزِم) - (அர்ள் முக்கியமான அப்பிரகிருதி. மண்டலம் தாதுப்பொருள். அப்பிரகிருதி ஆதாரமில்லாத அணு. ஜவ்ஹர் - மூலப் பிரகிருதி. ஆதாரமுள்ள நுண்ணணு. அர்ளு - அப்பிரகிருதி ஆதாரமில்லாத அணு.)

31. ஃபலகுல் முரக்கபாத் (فَلَكُ الْمُرَكَّبَات) - (ஒழுங்கு பண்ணப்பட்ட மண்டலம்)

32. அல்மஉதன் (الْمَعْدَنْ) - (தாதுப் பொருள், உற்பத்தித் தலம், மூலம்)

33. அன்னபாத் (النَّبَات) - (தாவரங்கள்)

34. ஹயவானாத் (اَلْحَيَوَانَات) - (மிருகங்கள்)

35. அல்இன்ஸான் (اَلْاِنْسَان) - (மானிடப் பிறவி)

36. ஆலமுஸ் ஸுவர் (عَالَمُ الصُّوَر) - (பிரதிமை அல்லது உருவக உலகம். உலகம் இதனோடு சம்பந்தமுடையது.)

37. ஆலமுல் மஆனி (اَلْعَالَمُ الْمَعَانِيْ) - (கியாமம், இதனோடு சம்பந்தமுடையது.

38, 39. அல்ஜன்னா வன்னார் (اَلْجَنَّة وَالنَّارْ) - (சொர்க்கம், நரகம்)

40. அல்கஸீபுல் அப்யள் (اَلْكَثِيْبُ الْاَبْيَضُ) - (வெண்மணற் குவியல். சுவர்க்கத்தை யுடையோர் இதிலிருந்து வெளியாவர். இது ஹக்கின் உள்ளமையின் தானத்தைப் பற்றிக் கூறும் விபரமாகும்.

(மேலே எழுதப்பட்டுள்ள படித்தரங்கள் நாற்பதும் ஹக்கை அடைவோருக்கு அவசியமில்லை. இதனால் தான் இந்நூலின் கருத்தா அவர்கள் இவற்றை ஏழு படித்தரங்களாகச் சுருக்கிக் கொண்டார்கள்.

அவை கீழே கொடுக்கப்படுகின்றன.)

அல்மர்த்தபதுல் ஊலா (اَلْمَرْتَبَةُ الْاُوْلٰى) : முதலாம் படித்தரம்.

முதலாம் படித்தரம்

மர்த்தபதுல் லாதஅய்யுன் (مَرْتَبَةُ اللَّاتَعَيُّن وَالْـاِطْلَاق وَالذَّاتُ الْبَحْتُ) : (இப்படித்தரத்துக்கு) லாத அய்யுன், இத்லாக், தாத்துல் பஹ்த் என(வெல்லாம் கூற)ப்படும்.

லாதஅய்யுன் (اَللَّاتَعَيُّن) - குறிப்பற்ற நிலை : குறிப்பற்ற நிலை - இந்த முதற்படியே தாத்துல் முகத்தஸ் ஆகும். (பரிசுத்த பிரணவம்) ஹக்கை (பரப்பிரமத்தை) கல்கை, (படைப்பினத்தை)ச் சேர்ந்த அடையாளங்கள் அல்லது குறிப்புகள் இதில் இல்லை. இது பிரணவ வெளிப்பாட்டிலே மிகப் பரிசுத்தமானது.

இதிலே பெயர்களோ, வருணனைகளோ, குணங்களோ ஒப்போ விபரங்களோ இல்லை. வெளியாகும் தோற்றங்களோ இதில் அறவே இல்லை. இந்த லாதஅய்யுனுக்கு "இத்லாக்" (اِطْـلَاقْ) எனவும் கூறப்படும். இதன் கருத்து பொதுவானது - மொத்தமானது விடுபட்டது என்பன. எனவே கீழே வரக்கூடிய எல்லாப் படித்தரங்களுக்கும் இதுவே

முக்கியமானதும் பொதுவானதுமாகும். மேலும் பிரிவுகளின்றிப் பூரணமாய் மொத்தமானது. ஒப்பு, வருணனை முதலான எல்லாவற்றிலிருந்தும் விடுபட்ட இதற்கு தாத்துல் பஹ்த் எனவும் பெயருண்டு. இதற்கு கலப்பற்ற "தாத்" (ذَات) (பிரணவம்) என்பது கருத்து.

லா பி மஃனா (لَا بِمَعْنٰى) - 'லா' என்பது ஒரு கருத்தைக் கொண்டது. (அதாவது ஒரு தனிப்பட்ட விளக்கத்தைக் கொண்டது.) (وَانَّ قَيْدَالْاطْلَاق) மொத்தம் என்பதன் கட்டுப்பாடும், (அதாவது மொத்தம் இவ்வளவுதான் எனும் கட்டுப்பாடும்)

وَانَّ مَفْهُوْمُهُ سُلبَ التَّعَيُّنُ اَيْضًا ثَابتَان فِيْ تلْكَ الْمَرْتَبَة

குறிப்பானது என்பதை நீக்க விளக்கப்பட்ட, லாதஅய்யுனிலுள்ள 'லா'வும், அஹதிய்யத் எனப்படுகிற இந்த முதற் படித்தரத்திலே இத்திரமானவையாகும்.

சுருக்கமான விளக்கம்: 'லா' என்பது இவ்வளவுதான் என நினைக்கும் கட்டுப்பாட்டை நீக்க வந்ததாகும். மொத்தம் (وجود): உள்ளமை என்பதற்கு இவ்வளவுதான் எனும் குறிப்பில்லை.

بَلْ بِمَعْنٰى اَنَّ ذَالِكَ الْوُجُوْدَ فِىْ تلْكَ الْمَرْتَبَة مُنَزَّهٌ

عَنْ اضَافَة النُّعُوْت

இந்தப் படித்தரத்திலே உள்ள இந்த வுஜூதாகிய உள்ளமை விவரணங்களும் வருணனைகளும் சேர்வதை விட்டும் பரிசுத்தமானது எனும் கருத்தைக் கொண்டது. (அதாவது: பெயர்களைக் கொண்டும் அதன் வருணனைகள் கொண்டும் இவ்வளவுதான் அது எனும்)

(وَمُقَدَّسٌ عَنْ كُلِّ قَيْدٍ حَتّٰى عَنْ قَيْدِالْاِطْلَاقِ) மொத்தமான ஒரு வரையறையை விட்டும் எல்லாக் கட்டுப்பாடு (எல்லை, அளவு)களை விட்டும் பரிசுத்தமானது.

اَيْضًا وَهٰذِهِ الْمَرْتَبَةُ تُسَمّٰى بِالْمَرْتَبَةِ الْاَحَدِيَّةِ

மேலும், இந்தப் படித்தரத்தினுக்கு மர்த்தபத்துல் அஹதிய்யா (ஏக, ஏகாந்தப் படித்தரம்) எனவும் பெயர் கூறப்படும்.

وَهِيَ كُنْهُ الْحَقِّ سُبْحَانَهُ وَتَعَالٰى

இந்த அஹதிய்யத்தெனும் ஏக ஏகாந்த நிலை உயர்வு மிக்கப் பரிசுத்தமான ஹக்காகிய பரமனின் மூலச்சத்தாகும். (ஏனெனில் அதுவே தன்னில் தானாய் உள்ளது.)

وَلَيْسَ فَوْقَهَا مَرْتَبَةٌ اُخْرٰى بَلْ كُلُّ الْمَرَاتِبِ تَحْتَهَا

இதற்கு மேலே வேறெந்தப் படித்தரங்களும் இல்லை. மற்றெல்லாப் படித்தரங்களும் இதற்குக் கீழுள்ளவையே.

இரண்டாம் படித்தரம்

اَلْمَرْتَبَةُ الثَّانِيَّةُ – اَلتَّعَيُّنُ الْاَوَّلُ

இரண்டாவது படித்தரம் - தஅய்யுனுல் அவ்வல் (எனும் முதற் குறிப்பாகும். (இதுவும் முதற்படியாகிய லாத அய்யுனிலிருந்தே வெளியானது. முதலாம் படித்தரம் வருணனைகளோ விவரணங்களோ பெயர்களோ அற்றது. எனவே இதிலிருந்தே பெயர்கள் வருணனைகள் விவரணங்கள் முதலாயின சிறிது சிறிதாய் வெளிப்படத் தொடங்கினவெனலாம். இல்லாததென உள்ளதாயிருந்த வெளிப்பாடற்ற முதற்படி சற்றே சிறிது விசமம் கொள்ளத் தொடங்கிய படித்தரமே இது.

இஃது உள்ரங்கமானது. தெய்வீகத் தத்துவங்கள் அல்லது யதார்த்தங்கள் பிரபஞ்ச தத்துவங்கள் அல்லது யதார்த்தங்களனைத்துக்கும் இதுவே மூலமானது.)

وَهِيَ عِبَارَةٌ عَنْ عِلْمِهِ تَعَالٰى لِذَاتِهِ وَصِفَاتِهِ

அல்லாஹுதஆலாவின் (இறையோனின்) பிரணவமாகிய உள்ளமைக்கும் வருணனைக்கும் உள்ள அவனுடைய அறிவைப் பற்றி இது தெரிவிக்கும். (அதாவது: பிரணவமாகிய உள்ளமை வருணனைகள் ஆகியவற்றின் அறிவு இப்படித்தரத்தில் வெளியாகும்.)

وَلِجَمِيْعِ الْمَوْجُوْدَاتِ عَلٰى وَجْهِ الْاِجْمَالِ مِنْ غَيْرِ الْاِمْتِيَازِ بَعْضِهَا عَنْ بَعْضٍ

அவற்றிற் சில சிலவற்றைத் தெளிந்து (விளங்கிக்) கொள்வதின்றி மொத்தமாகப் பிரபஞ்சம் அனைத்துக்கும் உரிய அவனுடைய அறிவைப் பற்றி அறிவிக்கும் நிலையாகும். (அதாவது: விளக்கமின்றி மொத்தமாய் அறியும் நிலை இது. இப்படித்தரத்திலே அறிவு, அறிந்தவன், அறியப்பட்டவன் அல்லது செய்பொருள், செய்தவன், செய்யப்பட்ட பொருள் இன்ன இன்னதே எனும் குறிப்பற்ற நிலை.)

(களி, களியாற் பொருள் செய்தவன் (குயவன்) செய்யப்பட்ட பொருள் (குடம்) ஆகியவை வேறு வேறாய்த் தோன்றுதலின்றி மொத்தமாய் விளங்கிய நிலை.)

وَهٰذِهِ الْمَرْتَبَةُ تُسَمّٰى بِالْوَحْدَةِ

இப்படித்தரம் வஹ்தத் (ஏகானந்தம்) படித்தரம் எனக் கூறப்படும்.

وَتُسَمّٰى حَقِيْقَةُ الْمُحَمَّدِيَّةِ

மேலும், இது (முஹம்மதிய்ய உள்ளமை) ஹகீகதுல் முஹம்மதிய்யா எனவும் கூறப்படும். (இதற்கு நூருல் முஹம்மதிய்யா எனவும் பெயருண்டு. ஏனெனில், எம்பெருமானார் (ஸல்) "முதலில் அல்லாஹு தஆலா சிருஷ்டித்தது என் ஜோதியையே" என்று கூறினார்கள்.

"அவ்வலு மா கலகல்லாஹு தஆலா நூரீ"

- மேலும் அல்லாஹுதஆலா கூறியதாக எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"லவ்லாக லமா கலக்துல் அக்வான" – நீங்களே இல்லையானால், பிரபஞ்சத்தையே நான் படைத்திருக்க மாட்டேன். ஆகவே, எம்பெருமானார் (ஸல்) முந்திய ஹதீஸின்படி ஆத்துமார்த்த உள்ளமைகளுக்கெல்லாம் உள்ளமையானவர்கள்.

இரண்டாவது ஹதீஸின்படி, எம்பெருமானார் (ஸல்) பிரபஞ்ச உள்ளமைகளுக்கெல்லாம் உள்ளமையானவர்கள்.

இவ்வுயர்ந்த தத்துவார்த்தத்தை அறிந்தவனே எம்பெருமானாரின் உயர்வை அறிவான். எவனுடைய மனம் புதை குழி போல் இருண்டிருக்குமோஅவன் எப்போதும் பெருமானாரை அறியவே மாட்டான்.

எல்லா உயர்வுகளும் மிக்க எம்பெருமானாரைத் தத்துவார்த்தமாக அறியாத மூடன் எம்மைப் போன்ற மனிதன் எனத்தான் கூறுவான். இது மதியின் கேடு, ஈமானின் கேடு!

இவ்விரண்டாம் படித்திரத்தினுக்குத் தரிபாடான மூலப்பொருள் (அஇயான் ஸாபிதா) எனவும் கூறுவர்.)

மூன்றாம் படித்தரம்

اَلْمَرْتَبَةُ الثَّالِثَةُ مَرتَبَةُ التَّعَيُّنِ ثَانِىْ وَهِيَ عِبَارَةٌ عَنْ عِلْمِه تَعَالٰى لِذَاتِه وَصِفَاتِه

மூன்றாம் படித்தரம் – இரண்டாம் குறிப்பாகும்.

அல்லாஹுதஆலாவின் (இறையோனின்) பிரணவமாகிய உள்ளமைக்கும் வருணனைக்கும் உள்ள அவனுடைய அறிவைப் பற்றி இது தெரிவிக்கும். (அதாவது: பிரணவமாகிய உள்ளமை. வருணனைகள் ஆகியவற்றின் அறிவு இப்படித்தரத்தில் வெளியாகும்.)

وَلِجَمِيْعِ الْمَوْجُوْدَاتِ عَلٰى وَجْهِ الْاِجْمَالِ

மொத்தமாகப் பிரபஞ்சம் அனைத்துக்கும் உள்ள அவனுடைய அறிவைப் பற்றி இது தெரிவிக்கும். (அதாவது: பிரபஞ்சம் அனைத்தினதும் அறிவு இப்படித்தரத்தில் வெளியாகும்.)

عَلٰى طَرِيْقِ التَّفْصِيْلِ وَامْتِيَازٍ بَعْضُهَا عَنْ بَعْضٍ

அவற்றிற் சில சிலவற்றைத் தெரிந்து (விளங்கிக்) கொள்வதன் பொருட்டு பிரித்தறிவதன் வகையில் மொத்தமாகப் பிரபஞ்சம் அனைத்துக்கும் உள்ள அவனுடைய அறிவைப் பற்றி இது தெரிவிக்கும்.

(அதாவது பிரித்தறியும் அறிவு சிறிது சிறிதே இதிலிருந்து ஆரம்பமாகிறது.)

وَهٰذِهِ الْمَرْتَبَةُ تُسَمّٰى بِالْوَاحِدِيَّةِ

இம்மூன்றாம் படித்தரத்தினுக்கு வாஹிதிய்யா (ஏகம்) எனப் பெயர் கூறப்படும். பெயர்களும் வருணனைகளும் இதிற் சிறிதே வெளியாகும். இஃது ஊற்றுக் கண் போன்றது.

وَتُسَمّٰى بِالْحَقِيْقَةِ الْاِنْسَانِيَّةِ

இதற்கு மானிட உள்ளமை எனக் கூறப்படும் (ஹக்காகிய யதார்த்தம் படைப்பினங்களின் உருவங் கொண்டு வெளியாகும்.)

(எவன் தன்னுடைய முயற்சியில் இதையடைந்தானோ அவன் மறைந்த உலகத்தின் உயர்வை அடைந்தான்:

இவனிடத்தே அசுத்தங்களோ அவலங்களோ இராது நீங்கிவிடும். ஹகீகதுல் இன்ஸானியா (மானிட உள்ளமை)அவனிடத்து நிலைப்படும். சென்றவைகளையும் நிகழவிருப்பவைகளையும் அறிவான். இவனே இன்ஸான் காமிலாகிய பூரண மனிதன். அவன் எல்லாப் பூரணங்களையும் எல்லாச் சிறப்புகளையும் பொதிந்தவன்.)

وَهٰذِهِ ثَلاَثُ مَرَاتِبَ كُلُّهَا قَدِيْمَةٌ

மேலே கூறப்பட்ட முதலாம் இரண்டாம் மூன்றாம் படித்தரங்கள் அனைத்தும் பூர்வீகமானவை.

(படித்தரங்கள் மூன்றாய் வேறுபட்ட போதும் அவைகள் யாவும் ஒரே தரத்தைச் சேர்ந்தவை போன்றவை.)

اَلتَّقْدِيْمُ وَالتَّاْخِيْرُ عَقْلِيٌّ لاَزَمَانِيٌّ

பூர்வீகம் (அல்லது பழமை), பிந்தியது (அல்லது புதுமை) என்பன புத்திப் பிரமாணத்தைக் கொண்டதாகும். காலம் கடந்தது அல்லது தற்காலிகமானது அல்ல.

மேலும் இதற்குக் கால, நேர இடங்களில்லை, முந்தியது. பிந்தியது என்பது காலத்தாலோ, நேரத்தாலோ, இடத்தாலோ ஆனதல்ல. புத்தியால் விளங்கவே கூறப்பட்ட வார்த்தைகளாகும்.

இது அப்போது எப்படியிருந்ததோ அப்படியே இப்போதும் உள்ளது.

இதில் எந்த வகையான கூடல் குறைவோ முன் பின்னோ மேல் கீழோ இல்லை.

இம்மூன்று படிகளும் அஉயானுஸ் ஸாபிதா தரிபாடான மூலங்கள் எனக் கூறப்படும்.

இரண்டாம் மூன்றாந்தரங்கள் சிறிது சிறிது மாற்றம் பெற்ற போதும் அவை குறிப்புடையனவாயினும் முன்னைய குறிப்பற்றது போன்றே இத்திரமானதாகும்.

ஏக புராதன பழமை வாய்ந்தது. قَدِيْمَةٌ

வருணனைகள் வருணிக்கப்பட்டது எனும் புறத்தாலும் அது ஒன்றேயாயிருக்கும். பெயர்களும் பெயரிடப்பட்டவைகளும் ஒன்றேயாகும். அஃதின்றி வேறில்லை. عَقْلِيٌّ புத்திப் பிரமாணமானது. لاَزَمَـــانِيٌّ ஏனெனில், அது முந்தி எப்படியிருந்ததோ அப்படியே இப்போதும் இருக்கிறது. ஆதலால் இதற்குக் காலம் இடங்கள் இல்லை.

மேலே கூறப்பட்ட மூன்று படித்தரங்களும் சற்றே வேறு வேறு தன்மையுடையவையாயினும் ஒரே தன்மையுடையனவென்று எழுதினோம்.

اَلْمَرْتَبَةُ الرَّابعَةُ مَرْتَبَةُ عَالَمِ الْاَرْوَاحِ

நான்காம் படித்தரம்

நான்காம் படித்தரம் (ஆலமுல் அர்வாஹ்) ஆத்மாக்களின் உலகம் ஆகும். (ஆத்தும உலகம்)

மனிதர், அமரர், ஜின்கள் முதலானோரினதும் அவையல்லா வற்றினுடையவும் ஆத்மாக்கள் வெளியாகும் தலம். இதற்கு ஆலமுல் ஜபரூத் (عَالَمُ الْجَبَرُوْتْ) ஆத்ம ஒன்றிப்பு உலகம் எனவும் கூறுவர்.

ஆலமுல் கியாலுல் முத்லக் (عَالَمُ الْخَيَالُ الْمُطْلَق) - சம்பூர்ண மாயாரூபம் எனவும் கூறுவர். இது பிரணவம் அல்லது உள்ளமையின் முதற்கட்டமான இறக்கமாகும். அல்லது வெளிப்பாடாகும்.

ஒன்றன்பின் ஒன்றாய் - படிப்படியாய் இந்த நூருல் முஹம்மதிய்யாவிலிருந்தே எல்லாம் வெளியாகத் தொடங்கின.

இதற்குப் புத்தி - மதி எனவும் கூறப்படும்.

وَهِيَ عِبَارَةٌ عَنِ الْاَشْيَاءِ الْكَوْنِيَّةِ الْمُجَرَّدَةِ الْبَسِيْطَةِ

விரிந்து முற்றுமான பிரபஞ்சத்தின் பொருள் (வஸ்து)களைப் பற்றி விளக்கும் படித்தரமாகும்.

الَّتِيْ تَظْهَرُ عَلٰى ذَوَاتِهَا وَعَلٰى اَمْثَالِهَا

அவை, அவை தம்மிலும் அவற்றின் ஒப்புகளாகவும் வெளியாகும்.

இந்த வெளிப்பாடும் குறைவானதாகவே இருக்கும்.

ஐந்தாம் படித்தரம்

اَلْمَرْتَبَةُ الْخَامِسَةُ مَرْتَبَةُ عَالَمِ الْمِثَال

ஐந்தாம் படித்தரம் ஆலமுல் மிதால் (عَالَمُ الْمِثَال) (மாதிரி உலகம்) ஆகும். (இஃது இரண்டாம் இறக்கம் எனக் கூறப்படும். (முதலாம் இறக்கம் அல்லது வெளிப்பாட்டிலிருந்து மற்றவையெல்லாம் படிப்படியான இறைவெளிப்பாடுகளாகும். முதலாம் இறக்கம் அல்லது வெளிப்பாடு என்பது பூரணமாய்த் தன்னில் தானான வெளிப்பாடாகும்.)

(மேலும் பொருள்கள் வெளியாக இடன்பாடு பெறும்தானமாகும்.)

இவ்விரண்டாம் இறக்கம் அல்லது வெளிப்பாடு படிப்படியாய் தத்தமக்குத் தேவையான உடை (உருவ அமைப்பு)களைச் சிறிது சிறிதாய்ப் பெற்றுக் கொள்ளும்.

وَهِيَ عِبَارَةٌ عَنِ الْاَشْيَاءِ الْكَوْنِيَّةِ الْمُرَكَّبَةِ اللَّطِيْفَةِ

இலகுவான ஒழுங்குப் பிரகாரம் பொருள்கள் உண்டாவது பற்றி இது விளக்கும்.

اَلَّتِيْ لاَ تُقْبَلُ التَّجَزِّئُ وَلاَتَبْعِيْضٌ وَلاَالْخَرْقُ وَلَاالْاِلْتِيَامُ

இது பகுதி பகுதியாகப் பிரிவு பெறாது. சிற்சில வாய்ப் பெயர்வு பெறாது. பிளவுபடும் தன்மையும் இதில் இல்லை. உயர்வு தாழ்வு அகலம் நீட்டம் போன்ற அமைப்புகளும் இதில் இல்லை. இதற்கு ஆலமுல் கியாலுல் முகய்யத் (கட்டுப்பாடுடைய மாயா ரூபம்) என்பர்.

(முந்திய இறக்கம் கட்டுப்பாடுடையதன்று. இரண்டாம் இறக்கத்தில் கட்டுப்பாடுண்டாகிறது. ஆயினும் பிரிவு ஏற்படவில்லை. உருவங்களுக்கான பிரிவினையற்ற மொத்தமான முழுமையான வகைப்படுத்தப்படாத அமைப்பு தாம் இது.)

(இவ்வின்ன வெனவில்லாத பொருள்களின் மாயா தோற்றமே இதில் உண்டு. புத்தி ரூபமான உருவங்கள் இதில் உண்டு. இதுவே "லவ்ஹுல் மஹ்பூழில்" உள்ளவற்றின் தோற்றம் எனலாம். லவ்ஹுல் மஹ்பூழ் என்பது இறையறிவு வெளியாகும் தலம். ஆலமுல் மிதாலிலே - ஆலமுல் ஜிஸ்மானிய் கோல உலகத்திலே உள்ள உருவங்களும் உருவங்களின் மொத்த அமைப்பும் இவ்வைந்தாம் படியில் அமைந்துள்ளன.

இந்த ஆலமுல் மிதாலில் தான் அர்ஷும், குர்ஸிய்யும் ஏழு வானங்களும் நான்கு பூதங்களும் அவற்றில் உள்ளவைகள் யாவும் அடங்கியுள்ளன.

இதுவரையுள்ளவையெல்லாம் மொத்தமான அமைப்பு. மாற்றம் அல்லது பிரிவினைகள் இதில் இல்லை.)

ஆறாம் படித்தரம்

اَلسَّادِسَةُ مَرْتَبَةُ عَالَمِ الْاَجْسَامِ

ஆறாம் படித்தரம் (அலமுல் அஜ்ஸாம் (கோல உலகம்) எனப்படும். (இதற்கு 'ஆலமுஷ் ஷஹாதா' (காட்சி உலகம்) எனவும் 'ஆலமுல் முல்க்' (ஆட்சி உலகம்) எனவும் கூறப்படும். இது மூன்றாம் இறக்கம் அல்லது வெளிப்பாடாகும். இதில் உள்ள முதல் வெளிப்பாடு 'துர்ரதுல் பைளாஉ' (வெண்முத்து) என மறைந்துறையும் உடை.

அதற்குப் பின்னால் உள்ள மண்டலங்களும் மறைந்துறையும் உடையாகும். பூதங்களும் மறைந்துறையும் உடையாகும். தாதுப் பொருள், தாவரப் பொருள், மிருகங்கள் ஆகியவையும் மறைந்துறையும் உடைகளாகும். உடை என்பதை திரை எனவும் கூறலாம்.)

وَهِيَ عِبَارَةٌ عَنِ الْاَشْيَاءِ الْكَوْنِيَّة مُرَكَّبَةُ الْكَثِيْفَة

கனமான ஒழுங்குபடுத்தப்பட்ட சிருஷ்டிப் பொருள்களைப் பற்றியுள்ள விளக்கம் இதில் உண்டு. اَلَّتِيْ تُقْبَلُ التُّجَزّئُ وَالتَّبْعِيْضُ

உடலைச் சேர்ந்த கனமான பொருள்களும் ரூஹைச் சேர்ந்த மிருதுவான வகைகளும் இதில் கனமாகவும் மென்மையாகவும் மாற்றம் பெறும்.

முந்திய படிகளுக்கு மாற்றமாகப் பிரிவுகளும் மாற்றங்களும் இதில் ஏற்படும்.

இது பகுதி பகுதியாகப் பிரிவு பெறும்; சிற்சிலவாய்ப் பெயர்வு பெறும். இது முந்திய படித்தரங்களுக்கு மாற்றமானது.

ஏழாம் படித்தரம்

இது, தாத்தாகிய பிரணவத்துக்குரிய முடிவான இறக்கப் படித்தரமாகும். இதற்குப் பின்னால் இறக்கப் படித்தரங்கள் வேறேதுமில்லை. ஆயினும் மீளும் படித்தரங்கள் வேறுண்டு. இவற்றிற்கு (உரூஜ்) ஏற்றப் படித்தரங்கள் எனக் கூறப்படும். அதனால் மேலேயிருந்து கீழே இறங்குதல் (நுஸுல்). அப்போது தன்னை யாரென்றே அறியாது மறந்து போதலும் பின்னர் வந்த வழியே போவதற்குத் தன்னையாரென்றறிந்து, மேலேயேறும் படிகள் (உரூஜ்) படிகளாகும். கீழே இறங்கும்போது அவை இறக்கப்படிகளாகும். மேலேயேறும் போது அவை ஏற்றப்படிகளாகும்.

ஏழாவது படித்தரமாவது:

اَلْمَرْتَبَةُ السَّابِعَةُ اَلْجَامِعَةُ لِجَمِيْعِ الْمَرَاتِبِ السَّابِقَةِ
الْمَذْكُوْرَةِ الْجِسْمَانِيَّةِ وَالنُّوْرَانِيَّةِ وَالْوَحْدَةِ وَالْوَاحِدِيَّةِ

கோல உலகம். ஒளி உலகம். ஏகாந்தப் படித்தரம், ஏக படித்தரம் எனக் கூறப்படும் படித்தரங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்துக் கொண்ட படித்தரமே இது. (இதற்கு இன்ஸானிய்ய (மானிட) படித்தரம் எனக் கூறப்படும். இந்தப் படித்தரத்திலிருந்தே மேலும் மீண்டு மேலே செல்ல வேண்டும். இதனால் இது மேலே கூறப்பட்ட எல்லாப் படித்தரங்களையும் சேர்த்துக் கொண்டுள்ளது.)

(இந்தப் பிரிவு நிலையானது மொத்த நிலையிடத்தே போய்ச் சேரும். அதாவது படைப்புகளாக வெளியான எல்லாச் சிருஷ்டிகளும் பிரிவு நிலையுடையவை. பரிபூரணமாயிருந்த நிலை மொத்த நிலையாகும். ஜுஸ்மானிய்யத் என்பது கோல உலகமாகும். இதுவே காட்சி உலகம் எனவும் கூறப்படும். நூரானிய்யத் என்பது மாதிரி உலகத்தையும் ஆத்தும அல்லது ஆவியுலகத்தையும் உள்ளடக்கிய மறைந்த அல்லது

அந்தரங்கமான உலகமாகும். இது தாத்தாகிய பிரணவத்துக்குள்ள பிந்திய அல்லது முடிவான அல்லது கடைசித் தோற்றமாகும்.)

وَهِيَ التَّجَلِّي الْاَخِيْرُ وَاللِّبَاسُ الْأَخِيْرُ

அவதாரம் அல்லது தோன்றுதுறை அல்லது சாயல்களிலே அது ஹக்காகிய தாற்பரியம், தோன்றுதலினிமித்தம் இது முடிவான அல்லது பிந்திய அல்லது கடைசி உடையுமாகும். (உயிரினங்களின் உருவ தோற்றமே இங்கு உடையெனக் கூறப்பட்டுள்ளது. இந்தத் தோற்றமாகிய உருவபேதங்களே பரிபூரணத்திலிருந்து வெளியாயின.) இதுவே இன்ஸான் (وَهِيَ الْاِنْسَانُ) (மானிடன்) எனவும் கூறப்படும். (இந்தத் தோற்றம் அல்லது முடிவான உடை என்பது இன்ஸானாகும். இன்ஸான் அல்லது மானிடன் என்பது மனித இனத்துக்கு மட்டும் கூறப்படுவதன்று, பரிபூரணத்திலிருந்து வெளியான எல்லா இனங்களின் வேறுபட்ட உருவங்கள் அனைத்தும் இன்ஸான் அல்லது மானிடனாகும். இவைகளே ஏழு படித்தரங்களுமாகும். ஏழு படித்தரங்கள் பற்றியும் மேலே விளக்கியுள்ளோம் காண்க.)

فَهٰذِهٖ سَبْعُ مَرَاتِبَ اَلْاُوْلٰى مِنْهَا هِيَ مَرْتَبَةُ اللاَّظُهُوْرِ

இவைகள் ஏழுபடித்தரங்களாகும். இவைகளினின்றும் முதலாவது, வெளிப்படாத படித்தரமாகும்.

وَالسِّتَّةُ الْبَاقِيَةُ مِنْهَا هِيَ مَرَاتِبُ الظُّهُوْرِ الْكُلِّيَّة

அவற்றுள் மீதியுள்ள ஆறும், அனைத்து(ப் பொருள்களு)ம் வெளியாகும் படித்தரங்களாகும். (அது தனக்காகத் தன்னைக் கொண்டே வெளியாகும். மேலும் அது தன்னைக் குறிப்பிட்டுக் கொள்ளவும் வெளியாகும். அது தன்னை அறிவித்துக் கொள்ளவும் வெளியாகும். மேலே கூறப்பட்ட முதலாவது படித்தரம் மட்டுமே வெளியாகாத

நிலையுடையது. ஏனைய மற்றாறும் சிறிது சிறிதாய் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையையுடையன. இந்தப் படித்தரங்கள் தன்னிலே தனக்காகத் தானே வெளியாகும் படித்துறைகள். இவைகள் தம்மைக் குறிப்பாகக் காட்டவும் தம் சுயத்தைக் காட்டவும் வெளியாயின. எனவே, இவை தானே தன்னில் தானாய் வெளியாகும் படித்தரங்களாம்.)

وَالْاَخِيْرَةُ مِنْهَا اَعْنِيْ الْاِنْسَان

மேலே சொன்ன ஏழுவகைப் படித்தரங்களிலும் கடைசியாவது இன்ஸான் எனும் படித்தரமாகும்.

(மூன்றாம் படித்தரத்தினுக்கு "அல்ஹகீகத்துல் இன்ஸானிய்யா" اَلْحَقِيْقَةُ الْاِنْسَانِيَّة அல்லது வாஹிதிய்யத் (وَاحِدِيَّة) எனக் கூறப்படும். "ஹகீகத்துல் இன்ஸானிய்யா" என்பது மானிட உள்ளமையெனக் கூறப்படும். மேலும் ஏகநிலையெனவும் இதனைக் கூறலாம். ஹக்காகிய யதார்த்தப் படைப்பினங்களின் உருவங்கள் கொண்டு வெளிவரும். எனவே, மறைந்திருந்ததிலிருந்து வெளிவரும் அனைத்தும் இன்ஸானிய்யத் எனும் மானிடமாகும். மான் என்பதன் கருத்து உருவம் என்பதே. எனவே மானிடம் என்பது மான் + இடம் எனப் பிரிக்கப்படின் உருவத்தை இடமாகக் கொண்டது எனக் கருத்துக் கொள்ளும். முதலாவது படித்தரத்தைத் தவிர்ந்த மற்றெல்லாம் வெளியாகும் நிலைகொண்டவை. எனவே சிறிது சிறிதே உருவ வெளிப்பாடு வெளியாகத் தலைப்பட்ட படிகளெல்லாம் இன்ஸானிய்யத்தான மானிடமாகும். இதனாலே தான் முஹக்கிகீன்களான தத்துவ ஞானிகள் அல்-ஆலமுல் இன்ஸானுல் கபீர் பிரபஞ்சம் பெருமானிடம் என்றனர். மேலும் (இன்ஸான்) மனிதனோ சிற்றுலகம். அல்லது சிறு பிரபஞ்சம் என்றும் கூறினர்.

இங்கு இன்ஸான் என்பது மானிடப் பிறவியையே. அதாவது, பேசும் மிருகமாகிய மனிதனையேயாகும். இன்ஸான் எனும் பொது மனிதனே பூமியிலே அல்லா(ஹ்)வாகிய இறைவனின் உத்தராதிகாரி.

“இன்ஸானுல் கபீர்” எனும் பிரபஞ்சம் அல்லது ஹக்கில் இரண்டறக் கலந்த பரிபூரண மனிதனான “இன்ஸான் காமில்” வானம் பூமி இரண்டிலும் அல்லா(ஹ்)வின் உத்தராதிகாரி. மனிதன் ஒவ்வொருவனும் ஆதம் (அலை) ஹவ்வா (அலை) இருவரினதும் பிரதி அல்லது சாயையினதும் கருத்தினதும் விளைவு அல்லது பலனாகுவான். மேலே கூறப்பட்ட இன்ஸானுன் கபீர் எனும் பெருமானிடம் அல்லது அதுவே அதான “இன்ஸான் காமி”லான பூரண மனிதன் தான் தெளிவான சத்திய தோற்றமாவான். மள்ஹரு ஹக்கில் முபீனாவான். தெளிவான ஹக்கின் தோற்றமுமாவான்.)

اِذَاعُرِجَ وَظَهَرَ لَهُ فِيْهِ جَمِيْعُ الْمَرَاتِبِ الْمَذْكُوْرَةِ مَعَ انْبِسَاطِهَا

எம்பெருமானார் அவர்கள் அஹதிய்யத் எனும் மிக உயர்ந்த படித்தரம் வரை (ஏறி) உயர்ந்தபோது, விரிவாக அல்லது திருப்திகரமாக மேற்சொல்லப்பட்ட படித்தரங்களனைத்தும் அவர்களுக்கு வெளியாயின.

وَيُقَالُ لَهُ اَنْتَ اِنْسَانُ الْكَامِلُ அதனால், அவர்களுக்கு நீங்கள் பூரண மனிதர் எனச் சொல்லப்படுகிறது. (ஏறினார்கள் அல்லது உயர்ந்தார்கள் என்பது. தமது பூமியெனும் உடலிலிருந்து அவர்களுடைய உணர்வு அற்றுப்போன வானம் வரை ஏறினார்கள் என்பதாகும். அவர்களின் பரிபூரண ஆத்மாவைக் கொண்டு விண் பிரயாணம் நடந்தது. பரிபூரணமான அவர்களின் ஆத்மா, உடலுடன் உணர்வது போன்றே ஆத்ம பிரயாணமான விண்ணுலகப் பிரயாணத்தையும் உணர்ந்தது. அதில் தாம் யார் என்பதையும் அந்த ஆத்மா உடலுடன் உணர்ந்தது. ஆத்மா தன் தாற்பரியத்தை விளங்கிற்று. நான் நீ எனும் வித்தியாசமின்றி இரண்டறக் கலந்தது.

اَلْعُرُوْجُ وَالْاِنْبِسَاطُ عَلَى الْوَجْهِ الْاَكْمَلِ

ஏற்றமும் அதன் விரிவும் பரிபூரணம் எனும் தரத்திலே உண்டானதாகும். كَانَ نَبِيُّنَا مُحَمَّد صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّم ஏனெனில் எம்பெருமானார் ஞான உச்ச உயர்ச்சியில் மிகமிகப் பரிபூரணமானவர்கள். (சந்தேகமற இரண்டறக் கலந்தவர்கள். மற்றெல்லா நபிமார்களைவிடவும் எம்பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்து இந்தப் பூரணம் (பரிபூரணமாய்) உண்டாயிற்று. எனவே, பரிபூரணம் என்பதே அவர்கள் தாம் என்பதுதான் கருத்து. இதனாலேயே.) இவர்கள் நபிமார்களில் முடிவானவர்கள். وَلِهٰذَا كَانَ خَاتِمُ النَّبِيِّيْنَ (இதனாலேயே, எம்பெருமானார் நாமே முந்திய முடிவினர்" என்று கூறினார்கள். யானோ, ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், ஆத்மாவுக்கும் உடலுக்கும் இடையே இருக்கும்போது நபிய்யானோம்" என்றும் கூறினார்கள். மேலும் அவர்கள் தாற்பரியத்திலே நபிமார்கள் அனைவருக்கும் முந்தியவர்கள். உருவத்திலே அவர்கள் அனைவருக்கும் பிந்தியவர்கள்.)

وَاَنَّ اَسْمَآءَ الْمَرْتَبَةَ الْاُلُوْهِيَّةَ لَايَجُوْزُ اطْلَاقُهَا عَلٰى مَرَاتِبِ الْكَوْنِ وَالْخَلْقِ

தெய்வீகத் தரத்தின் பெயர்களைப் பிரபஞ்சத்தின் தரங்களிலோ படைப்பின் தரங்களிலோ ஏற்றிக் கூறுதல் ஆகாது (அதாவது, பிரபஞ்சத்தின் அல்லது படைப்பினத்தின் பகுதிகளுக்குத் தெய்வீகத் தரங்களுக்குரிய பெயர்களைக் கொண்டழைப்பது கூடாது என்பதாகும். ஏனெனில் முழுமைக்கு ஒரு பகுதியைக் கூறுவது போன்றதது. உதாரணமாக மரம் எனும்போது அதில் இலை, மலர், பிஞ்சு, காய். கனி. தண்டு, வேர், கொப்பு முதலாம் அனைத்தும் சேர்ந்து விடுகின்றன. ஆயினும் இலையெனும்போது அதில் முழுமரமும் சேர்வதில்லை. எனினும் இலையின் தாற்பரியம் மரமாகும். உலூஹிய்யத் என்பதன் கருத்து தெய்வீகம், பரமார்த்த உள்ளமையின் வருணனை. பிரபஞ்சம்

என்பனவாம். கவ்ன் (كــــون) என்பது உலகம், பிரபஞ்சம் போன்ற கருத்துகள் கொண்டது. மறைவான உலகம் இது. கல்கு (خلق) என்பது படைப்பினம். இஃது உணர்ச்சிகளையுடையது. தெய்வீகத் திருநாமங்கள் இத்திரமானவை. ஆதலால் அவைகள் படைப்பினங்களுக்கு வைக்கப்படுவதோ அவற்றைக் கொண்டழைப்பதோ பொருந்தாது.)

وَلكِنْ لَايَجُوْزُ اطْلَاقُ اَسْمَاء مرَاتِبِ الْكَوْنِ وَالْخَلْقِ
عَلى مَرْتَبَةِ الْاُلُوْهِيَّة

இதுபோன்றே பிரபஞ்சத்தினுடையவும் படைப்பினங்களினுடையவும் தரங்களின் பெயர்களை தெய்வீகத் தரங்களுக்கு ஏற்றிக் கூறுவதும் கூடாது.

وَانَّ لِذَالِكَ الْوُجُوْد كَمَالَيْنِ

இவ்வுண்மைக்கு இரு கமால் (كمال)கள் (பூரணங்கள்) உண்டு.

اَحَدُهُمَــــا كَمَــــالٌ ذَاتِيٌّ அவ்விரண்டில் ஒன்று பிரணவ சம்பூரணம். இது தன்னில் தானேயானதாகும். وَثَانِيْهِمَــــا كَمَالٌ اَسْمَائِيّ இரண்டாவது நாம பரிபூரணமாகும்.

பிரணவ சம்பூரணம் என்பது : اَمَّاالْكَمَالُ الذَّاتِيُّ

فَهُوَعبَارَةٌ عَنْ ظُهُوْره تَعَالىٰ على نَفْسه بنَفْسه فِيْ نَفْسه
لنَفْسه بلااَعْتبَارِالْغَيْرِ وَالْغَيْرِيَّة وَالْغَنىُّ الْمُطْلَقُ لازَمٌ

هٰذَاالْكَمَالِ الذَّاتِيّ

அல்லாதது அல்லது பேதம் என்பவற்றை நோக்காது, அவன் தன்மீது, அவன் தன்னைக் கொண்டே அவன் தன்னிலேயே அவன் தனக்கே உள்ள அல்லாஹுதஆலாவின் தோற்றத்தைப் பற்றி அறிவிக்கின்ற ஒரு விபரம் அல்லது அடையாளம்.

(இதன் கருத்து: பிரணவ சம்பூரணம் என்பது தன்மீது, தன்னைக் கொண்டு, தன்னில் தனக்காக வேற்றுமையின்றி ஹக்காகிய இறை வெளியாவதாகும்.)

முழுமையாய் எதையும் தேவையற்றிருத்தல் இந்தப் பிரணவ சம்பூரணத்திற்கு இன்றியமையாதது. (அதாவது அவன் எந்தத் தேவையுமற்றவன்.)

وَمَعْنَى الْغَنِيُّ الْمُطْلَقُ مُشَاهَدَتُهُ تَعَالٰى فِيْ نَفْسِهِ جَمِيْعَ الشُّؤُنِ

அல்கனிய்யுல் முதுலக் (முழுமையாய் எதையும் தேவையற்றிருத்தல்) என்பதன் கருத்து, எல்லாக் கருமங்களிலும் அல்லது எல்லா நிலைமைகளிலும் தன்னிலேயே உயர்வு பொருந்திய ஹக்காகிய அதை அது காட்சி காண்பதாகும். (அதாவது), உள்ளமையின் தனித்தன்மையிலே உள்ள தாற்பரியமான (உள்ளான) அனைத்துக் கருமங்களையும் தன்னிலேயே காட்சி காணுதலாகும். அனைத்தும் அதாயும் அதே அனைத்துமாயும் உள்ளதால் அதற்கு உதவி தேடிச் செல்ல வேண்டிய எவருமில்லை. அதே தனக்கு உதவியானது.)

وَجَمِيْعُ الْاِعْتِبَارَاتِ الْاٰلٰهِيَّة

பரமார்த்த அடையாளங்கள் அனைத்தையும் அல்லது அமைப்புகளனைத்தையும் தன்னிலே காட்சி காணுதலாகும். (அதாவது.

ஒன்று என்பதில் அதற்குள்ள (தாற்பரியமான) வெளியான பரமார்த்த அடையாளங்களை அல்லது அமைப்புகளை அது தன்னிலே காட்சி காணுதலாகும்.

وَجَمِيْعُ الْاِعْتِبَارَاتِ الْكِيَانِيَّة مَعَ اَحْكَامِهَا وَلَوَازِمِهَا عَلٰى وَجْهِ كُلِّيِّ جُمْلِيٍّ لِانْدِرَاجِ الْكُلِّ فِيْ بُطُوْنِ الذَّاتِ وَوَحْدَتِه

தாத்தாகிய உள்ளமையின் மறை பொருளிலும் அதன் ஏகாந்தத்திலும் அனைத்தையும் உட்படுத்துவதற்காக அனைத்துப் போக்கிலும் அவற்றின் ஒழுங்குமுறைகளுடனும் அதன் முக்கியத் தன்மைகளுடனும் அதன் விதிமுறைகளுடனும் இயற்கையான அடையாளங்கள் அனைத்தையும் தன்னில் காட்சி காணுதலாகும்.

كَانْدِرَاجِ جَمِيْعِ الْاَعْدَادِ فِي الْوَاحِدِالْعَدَدِيِّ

எல்லா எண்ணிக்கைகளையும் ஒரே எண்ணிக்கையில் உட்படுத்துவது போன்றது மேலே கூறப்பட்டதற்கு உதாரணமாகும்.

(அதாவது: அனைத்தையும் தன்னில் காண்பது. பிரபஞ்சத்திலுள்ள எல்லாச் சராசரங்களையும் ஒன்றென மனதில் திடமாய்க் கருதி தன்னிற் பேதமின்றி உட்படுத்தி தன்னோடு ஒன்றாய்க் காணல் என்பதாகும்.

(மேலும் ஒன்று எனும்) ஒரே எண்ணிலே எண்கள் அனைத்தும் அடங்கியிருப்பது போன்றது.)

وَاِنَّمَاسُمِّيَتْ غِنَا مُطْلَقًا لِاَنَّهُ سُبْحَانَهُ وَتَعَالٰى بِهٰذِهِ الْمُشَاهَدَةِ مُسْتَغْنٍ عَنْ ظُهُوْرِ الْعَالَمِ عَلٰى وَجْهِ التَّفْصِيْلِ

இறைவன் பிரபஞ்சத்தை வகை வகையாய்ப் பிரிவுபடுத்தி இக்காட்சியாகிய பிரபஞ்சத்தை வெளிப்படுத்தத் தேவையற்றவன் என்பதனாலே இதற்கு முழுமையாய்த் தேவையறல் (தேவையற்றவன்) எனப் பெயர் சொல்லப்பட்டுள்ளது.

لَاحَاجَةَ لَهُ فِيْ حُصُوْلِ الْمُشَاهَدَةِ اِلَى الْعَالَمِ وَمَافِيْه

(தோன்றாத) பிரபஞ்சத்தில் காட்சி உண்டாவதிலோ அதில் என்ன உள்ளது என்ப(தை அறிவ)திலோ இறைவனுக்குத் தேவையிராது. (அது அவசியமில்லை என்பது கருத்து.)

لِاَنَّ مُشَاهَدَةَ جَمِيْعُ الْمَوْجُوْدَاتِ حَاصِلَةٌ لَهُ تَعَالَى عِنْدَ انْدِرَاجِ الْكُلِّ، فِى بُطُوْنِ وَحْدَته

ஏனெனில், பிரபஞ்சம் அனைத்தினதும் காட்சி, ஏகாந்தத்தின் மறைவிலுள்ள அனைத்தையும் உட்படுத்தி அல்லாஹு தஆலாவைச் சேர்ந்து கொள்வதாகும்.

(அதாவது: குறைவற்ற முழுமையான காட்சியனைத்தும் அல்லாஹ்வெனும் பரிபூரணத்திற்கு உட்பட்டதாகும்; அதுவேயாகும்.)

وَهٰذِه الْمُشَاهَدَةُ تَكُوْنُ شُهُوْدًا غَيْبِيًّا عِلْمِيًّا

இந்தக்காட்சி மறைந்த அறிவின் பாலுள்ள காட்சியாகும். (மேலும் இது கண்பார்வையாகவோ உருவ சம்பந்தமானதாகவோ உள்ளதல்ல.)

كَشُهُوْدِ الْمُفَصَّلِ فِي الْجُمَلِ

மறைவாயுள்ள மொத்தத்திலிருந்து பகுதிகளாய்ப் பிரிவாகி காட்சியாவது போன்றது.

وَالْكَثِيْرُ فِى الْوَاحِدِ وَالنَّخْلَةُ مَعَ الْاَغْصَانِ وتَوَابِعِهَا فِى النَّوَاةِ الْوَاحِدَةِ

ஒன்றிலே அதிகத்தைக் காண்பது போன்றது. ஒரே ஈத்தம் விதையில் அதன் கொப்புகளுடனேயும் அதைத் தொடர்ந்த காய், கனி, பூக்கள் போன்றவைகளுடனேயும் உள்ள ஈந்து மரம் போன்றது.

(அதாவது: ஏக ஏகாந்தம் என்பதிலே பார்வையின்றிய காட்சிகள் கூடத் தென்படா. ஏகாந்தம் எனும் பிரிவிலே பார்வையற்ற பிரிவுகள் உண்டாவதுண்டு. இதுவே, மொத்தமான பார்வையற்றதிலிருந்து காட்சிக்குரியவைகள் தென்படுவன. உதாரணமாய்க் காட்டப்பட்டுள்ளன. ஒன்றிலிருந்து பல பிரிவன போன்றது. கிளைகளுடனேயுள்ள ஈந்து மரம் போன்றது.

(அதாவது: கிளைகள் என்பது ஈத்து ஓலைகள் ஒரே ஈத்தம் விதையிலிருந்து பல பயன்களைத் தொடர்ந்து தருவது போன்றது. மேலே கூறப்பட்ட ஏகாந்தத்தின் பார்வையற்ற காட்சியாகும்.)

(அதாவது : ஈத்தம் விதை மரமாகிப் பல பயன்களையும் தொடர்ந்து தருவது போன்றது.)

اَمَّاالْكَمَالُ الْاَسْمَائِيُّ فَهُوَعِبَارَةٌ عَنْ ظُهُوْرِهِ تَعَالٰى عَلٰى نَفْسِهِ وَشُهُوْدِ ذَاتِهِ فِى التَّعَيُّنَاتِ الْخَارِجِيَّةِ

நாம பரிபூரணம் என்பது, இறைவன் தன்னிலேயே வெளியாவது பற்றியும் வெளிக்குறிப்புகளிலே அதன் பிரணவ (உள்ளமை)க் காட்சி பற்றியும் எடுத்துக் காட்டும் ஓர் அடையாளம் அல்லது ஒரு விபரம் அல்லது ஒரு மொழியாகும். (பிரணவம் : தாத்து)

اَعْنِي الْعَالَمُ الْكَبِيْرُ وَهُوَ انْسَانُ الْكَامِلِ وَمَابَطَنَ فِيْه

கருதுக. பெரும் பிரபஞ்சம் என்பது அதுவே பூரண மனிதனும் அவனில் மறைந்திருப்பவைகளுமாகும். (மறைந்திருப்பவைகள் ஆத்மாக்களில் நின்றும் தோற்றங்கள் அல்லது உருவ அமைப்புகளில் நின்றும் உள்ளது.) அதுவே பூரண மனிதன் என்னும் இன்ஸானுல் காமிலுமாகும்.

وَهذِهِ الشُّهُوْدُ يَكُوْنُ شُهُوْدًا عِيَانِيًّا عَيْنِيًّا وُجُوْدِيًّا

அது, இக்காட்சி கண்பார்வைக்குரிய காட்சியாகவும் குறிப்புக் காட்சியாகவும் இல்லாததிலிருந்து உண்டான காட்சியாகவுமிருக்கும்.

குறிப்பு: இன்ன பொருளென அறியும் குறிப்புத் தன்மை.

كَشُهُوْدِ الْمُجْمَلِ الْبَاطِنِ فِي الْمُفَصَّلِ وَالْوَاحِدُ

فِيْ الْكَثِيْرِ وَالنَّوَاةُ فِى النَّخْلَةِ وَتَوَابِعِهَا

உதாரணத்திலே மறைவான முழுமையின் காட்சி பிரிவாயிருப்பது போன்றது. (எவை அன்று முழுமையாக இருந்தனவோ அவை இன்று பிரிவுகளாக உள்ளன. ஒன்றின் காட்சி பலவற்றிலிருந்துள்ளது போன்றது.) ஒன்று அதிகத்திலுள்ளது என்பது ஈந்து மரத்தில் உள்ள விதையும் அதன் பயன்களும் போன்றது. ஒரு சிறு ஈந்து மரவிதை, வேராகிக் கன்றாகி இலைகளுண்டாகித் தண்டாகி மரமாகிப் பூவாகிக் காயாகிப் பழமாகிப் பலப்பல பிரயோசனங்களைக் கொடுத்து நிற்பது போலப் பரிபூரணமாகிய ஒன்றிலிருந்து விரிந்து பரந்த சிருஷ்டிகளே மற்ற முழுத்தோற்றங்களெல்லாமென்க.

هذَا الْكَمَالُ الْاَسْمَائِيُّ مِنْ حَيْثُ التَّحَقُّقِ

இந்த நாம பூரணம் பரமார்த்த நிச்சயத்தின் புறத்தினின்றுள்ளது.

(நாம பூரணம் என்பது கண்ணுக்குத் தென்படாத ஆரம்ப சிருஷ்டி உற்பத்தி நிலை.)

وَالظُّهُوْرُ مَوْقُوْفٌ عَلٰى وُجُوْدِالْعَالَمِ وَمَافِيْهِ

ளுஹூரெனும் வெளிப்பாடென்பது பிரபஞ்ச உள்ளமைக் காட்சியையும் அதில் மறைந்து உள்ளமை வெளிப்படுதலையும் அறிவிப்பது.

لِاَنَّ مَعْنَاهُ السَّابِقُ لَايَحْصُلُ اِلَّابِظُهُوْرِ الْعَالَمِ عَلٰى وَجْهِ التَّفْصِيْلِ

அதன் முந்திய கருத்து, பிரபஞ்சம் வெளியாதலன்றி (அதன் பகுதிகளான) பிரிவுகள் உண்டாவதில்லை என்பதாகும்.

(எனவே, பிரபஞ்சம் என்பது எல்லா வகைப் பகுதிகளான - பொருள்களான - பிரிவுகளும் ஒன்று சேர்ந்தே பிரபஞ்சமாகிறது என்பது கருத்து.)

اِنَّ ذَالِكَ الْوُجُوْدَ الذَّاتِيَّ لَيْسَ بِحَالٍّ فِى الْمَوْجُوْدَاتِ

பிரணவ உள்ளமை எனும் இந்த வுஜூது சிருஷ்டிகளில் இறங்குவதுமில்லை. அதற்கு ஒரு மட்டும் இல்லை. (எனவே வுஜூது தாதிய் எனும் பிரணவ உள்ளமைக்கு இறங்கலும் மட்டும் (அளவு) இல்லை. (இது முதல் படித்தரத்தை எடுத்துக் காட்டுகிறது.)

لِاَنَّ الْحُلُوْلَ وَالْاِتِّحَادَ لَابُدَّلَهُمَا مِنْ وُجُوْدَيْنِ حَتّٰى يَحِلَّ اَحَدُهُمَا فِى الْاٰخَرِاَوْيَتَّحِدَ اَحَدُهُمَا بِالْاٰخَرِ.

ஹுலூல் இத்திஹாத் என்னும் இறங்கலும் மட்டும் ஆகிய இவ்விரண்டனுக்கும் இருகாட்சிகள் அவசியமாகின்றன. மேலும் இரண்டில் ஒன்று மற்றதில் இறங்கும் அல்லது இரண்டில் ஒன்று மற்றதைக் கொண்டு மட்டுப்படும்.

அதாவது: முந்திய படித்தரத்துக்கு இறங்கலும் இல்லை; ஒரு மட்டும் இல்லை. அது அவ்வாறே பேதமின்றியிருக்கும். இரண்டாம் மூன்றாம் படித்தரங்களே, இந்த இத்திஹாத், ஹுலூல் ஆகிய இரண்டையும் பெற்றுக் கொள்ளும். ஒன்று ஒன்றில் இறங்குவது: அதாவது ஒரு பொருள் இறங்க ஓரிடம் தேவைப்படுவது போன்றது.

ஒரு பொருள் இன்னொரு பொருளைக் கொண்டு மட்டுப்படுத்துவது. உதாரணமாக நீர் குளத்தில் இறங்குவது போன்றது. உதாரணத்திற்கு: வேகமாய் வீசும் காற்று வெற்றிடமான ஓர் இடத்தைப் போய்ச் சேர்தலும் ஆங்கே பல மாற்றங்களை உண்டு பண்ணுதலும் போன்றது. ஒரு காற்று மிக வேகமாய் வீசி மற்றக் காற்றுடன் முட்டி இறங்கி வேறு பொருட்களை உண்டு பண்ணுவது போன்றது. ஒரு பொருள் இன்னொரு பொருளோடு சேரும்போது வேறு ஒரு பொருள் உண்டாவது போன்றது.

மனிதர் இருவருக்கிடையே உள்ள மட்டுப்பாடு (வித்தியாசங்கள்) போன்றதுதான் ஹுலூல் என்னும் இறங்கலாகும்.

இத்திஹாதென்னும் மட்டுப்பாடு அல்லது மட்டிடல், மேலே கூறப்பட்ட முதற்படிக்குரிய பதீஹிய் (بَدِيْهِيّ) ஆகும். காண்பார்க்கு உதாரணம் கூறி விளக்கவே முடியாததாகும். இரண்டாம் மூன்றாம் படித்தரங்கள் நள்ரிய் (نَظْــــــرِيّ) எனும் பார்வைக்கு உட்பட்டதும் உதாரணங் கூறி விளக்க) முடியுமானதுமே. பதீஹிய்யுக்கு உதாரணம்: உணர்வு, சிந்தனை முதலியன. நள்ரிய்யுக்கு உதாரணம் : சூரியன், நெருப்பு முதலியன.

وَالْوُجُوْدُ وَاحِدٌ

உள்ளமை அல்லது யதார்த்தம், அல்லது பரமார்த்தம் எனும் வுஜூத் பிரணவத்தைக் கொண்டும் வருணனைகள் கொண்டும் ஒன்றே தான்.

لاتَعَدُّدَلَهُ اَصْلاً மூலாதாரமே இது என்பதால் இந்த வுஜூதுக்கு எண்ணிக்கை (பல) என்பதில்லை.

وَاِنَّمَا التَّعَدُّدُ فِى الصِّفَاتِ وَالْاَفْعَالِ عَلٰى مَايَشْهَدُبِه ذَوْقُ الْعَارِفِيْنَ وِجْدَانِهِمْ

பண்புகளிலும் செயல்களிலுமுள்ள எண்ணிக்கை, ஞானிகளின் அனுபவத்தின் பாலும் செயல்முறைகளின் பாலும் உள்ள காட்சியின் மீதே உள்ளது. (அதாவது. சிருஷ்டிகளின் எண்ணிக்கையின் படியே ஞானிகள் பொருள்களை வேறுவேறாய்க் காண்பதன்றி பூரணத்தில் அல்ல என்பதே இதன் கருத்து. ஆகவே, அனைத்தையும் ஒன்றாய்க் காண்பதே ஞானிகளின் தத்துவ கருத்தாகும்.)

اِنَّ الْعُبُوْدِيَّةَ والتَّكَالِيْفَ وَالرَّاحَةَ وَالْعَذَابَ وَالْاٰلاَمَ كُلُّهَا رَاجِعَةٌ اِلَى التَّعَيُّنَات

அடிமைத்துவம், வருத்தம் அல்லது பிரயாசை (சிரமம்) சுகம், ஓய்வு மகிழ்ச்சி, திருப்தி வேதனை, வருத்தங்கள் முதலாம் இவை அனைத்தும் முதலாம் இரண்டாம் படித்தரங்களாகிய குறிப்புகளிடத்துப் போய்ச் சேருவன.

(குறிப்பு: தாத்து, சிபாத்து எனக் கருதும்போது இவை இரண்டும் ஒவ்வொன்றாகக் கருதப்பட்ட போதும் அவை இரண்டும் தாற்பரியத்தில் ஒன்றேயாகும். எதற்காக ஒருவன் ஏவல் விலக்கல்களைக் கொண்டு சிரமப்படுத்தப்படுகிறான்? எதற்காக ஏவல்களைச் செய்வதைக் கொண்டு

சுகம் பெறுகிறான்? அல்லது இன்பமுறுகிறான்? இதற்கு மாற்றமாக நடக்கிறது கொண்டு எதற்காக வேதனைப் படுத்தப்படுகிறான்? உலகத்திலும் ஆத்ம உலகத்திலும் (ஆகிராவிலும்) இன்னலுறுகின்றான்? என்பதற்கான விடையே மேலே கூறப்பட்டுள்ளது.)

(எனவே, தஅய்யுனாகிய குறிப்பு உலகத்திலே இத்தண்டனைகள் இருக்கவில்லை என்பது இதனால் புலப்படுகிறது. மேலே கூறப்பட்டவைகள் அந்த உலகத்திலே தண்டனை தண்டனையாகவும் சுகம் சுகமாகவும் வருத்தங்கள் வருத்தங்களாகவும் ஏவல்கள் ஏவல்களாகவும் விலக்கல்கள் விலக்கல்களாகவும் இருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

هُوَ الْاٰنَ كَمَا كَانَ

இப்போது அவன் முன்னிருந்ததுபோல் (என்பதை மேற்கூறியதின் மூலம் ஆராய்ந்து பார்க்கலாம். ஆயினும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருப்பவன் கட்டுப்பாட்டுக்கு அடிபணிதல் அவசியம். இதற்காகவே ஷரீஅத் உண்டாயது.)

وَانَّ ذَالِكَ الْوُجُوْدَ بِاعْتِبَارِ مَرْتَبَةِ الْاِطْلَاقِ مُنَزَّهٌ

عَنْ هٰذِهِ الْاَشْيَاءِ كُلِّهَا

இந்த உள்ளமை மொத்தமாக தரத்தைக் கவனிக்கிறது கொண்டு எல்லா வகை(த் தரங்)களை விட்டும் பரிசுத்தமானது.

(குறிப்பு: அதாவது மேலே கூறப்பட்ட துன்பம், சந்தோஷம், இன்னல், ஏவல், விலக்கல் முதலாம் எல்லாம் மேலே கூறப்பட்ட லாதஅய்யுன், தஅய்யுன் அவ்வல், தஅய்யுன்ஸானீ முதலாம் இவைகளுக்குப் பொருத்தமற்றவை. இத்தரங்களில் அவை காணப்படுவதில்லை.)

(இந்தத் தரங்களிலே இவைகள் இருக்கவில்லை. அனைத்தும் ஒன்றாய்ப் போதமற்ற நிலையிலேயே இவை பிரிவின்றியிருந்தன

என்பதனாலேயே இந்தத் தரங்கள் பரிசுத்தமானவை எனக் கூறப்பட்டுள்ளன. மேலே கூறப்பட்டுள்ள தரங்கள் வுஜூத் எனும் உள்ளமையாகும். இவை முனஸ்ஸஹ் எனும் பரிசுத்தமானவை.)

மேலே கூறப்பட்ட மூன்று தரங்களையும் தவிர்த்து ஏனைய தரங்கள் பிரிவு கொண்டு வருகின்றமையால் அவை முனஸ்ஸஹ் எனப் பெயர் பெறவில்லை.

وَاِنَّ ذَالِكَ الْوُجُوْدَ مُحِيْطٌ بِجَمِيْعِ الْمَوْجُوْدَاتِ كَاِحَاطَةِ الْمَلْزُوْمِ بِاللَّوَازِمِ الْمَوْصُوْفِ بِالصِّفَاتِ

அவசிய பொருள்களைக் கொண்டு அவசியப்பட்டது சூழ்ந்திருப்பது போலும் வருணனைகளைக் கொண்டு வருணிக்கப்பட்டது சூழ்ந்திருப்பது போலும் சிருஷ்டிகள் அனைத்தைக் கொண்டும் உள்ளமையானது சூழப்பட்டுள்ளது.

(குறிப்பு: அவசியப்பட்டதற்கு உதாரணம் மனிதன். அவசிய பொருள்களுக்கு உதாரணம் பேச்சு. மனிதனுக்கு அவசியமானது பேச்சு. இவ்வாறு மனிதன் தேவையானவற்றைக் கொண்டு சூழ்ந்துள்ளான். ஒரு பொருள் வருணிக்கப்படுமானால் அப்பொருளுக்குரிய வருணனைகள் மிக அவசியமாகும். எனவே, மனிதனை அவசியமான பொருள்கள் சூழ்ந்திருப்பது ஒரு பொருளை வருணனைகள் சூழ்ந்திருப்பது போலும் இந்த வுஜூத் எனும் உள்ளமையாகிய தன்னில் தானான பிரபஞ்சத்தை தேவையான சிருஷ்டிப் பொருள்கள் சூழ்ந்துள்ளன. அதாவது சிருஷ்டிப் பொருள்கள் தன்னில் தானாய் அமைந்துள்ளன என்பது கருத்து. இவ்வாறு சிருஷ்டிப் பொருள்களை இவ்வுஜூதாகிய உள்ளமை பொதிந்திருந்தபோதும் அஃது அஃதாகவே பரிசுத்தமாயுள்ளது. இங்கே சூழப்பட்டுள்ளது என்பதன் கருத்து தன்னில் தனக்குள்ளே அமைந்துள்ளதைக் காட்டுவதாகும்.)

لَاكَاحَاطَةِ الظَّرْفِ بِالْمَظْرُوْفِ وَالْكُلِّ بَالْجُزْءِ

உறைக்குள், உள்ள பொருளை உறை சூழ்ந்திருப்பதும் பகுதிகளைக் கொண்டு முழுமை சூழ்ந்திருப்பதும் போன்றுமன்று.

(அனைத்தும் வுஜூதாக உள்ளமையால் வுஜூதே எவ்லாவற்றையும் சூழ்ந்து தனக்குள் தானாய் ஆகியுள்ளது. அதற்குப் புறம்பாய் பிரபஞ்சம் வேறெதுவும் இல்லை. இருப்பதெல்லாம் அதுவேயாகும். இதற்கு முடிவில்லை. உறைக்குள் அதற்குள் அடங்கும் பொருள்களை மட்டுமே போடலாம்.)

تَعَالىٰ عَنْ ذَالِكَ عُلُوًّا كَبِيْرًا

மேலே கூறப்பட்டவற்றிலிருந்து அவன் உயர்வாலும் பெருமையாலும் மேலானான்.

குறிப்பு : (அவன் உயரத்தால் உயர்வானவனும் பருமையால் பெருத்தவனுமல்லன்).

وَانَّ ذَالِكَ الْوُجُوْدَ كَمَاانَّهُ بِاعْتِبَارِمَحْضِ اطْلَاقِهِ سَارٍ فِيْ ذَوَاتِ جَمِيْعِ الْمَوْجُوْدَاتِ

மொத்தமாய்க் கலப்பற்ற தரத்தைக் கவனிக்கிறது கொண்டு அதுபோன்ற அந்த உள்ளமை எல்லா சிருஷ்டிகள் அவை தம்மிலும் நடந்தேறும்.

(விளக்கம்: இந்த வுஜூதாகிய உள்ளமை கலப்பற்ற நிலையாகிய முதற்குறிப்பு இரண்டாம் குறிப்புகளைக் கவனிக்கும் போது - அந்த வுஜூது எல்லா சிருஷ்டிகளிலும் பிரதிபிம்பிக்கும். அதாவது, முன்னைய கலப்பற்ற நிலை, வெளிவந்த எல்லா வுஜூதுகளிலும் உண்டு.)

بِحَيْثُ يَكُوْنُ ذَالِكَ الْوُجُوْدُ فِيْ تِلْكَ الذَّوَاتِ

عَيْنَ تِلْكَ الذَّوَاتِ

அந்தப் பிரணவத்திலே அந்தப் பிரணவத்தின் தாற்பரியமாக அந்த வுஜூதெனும் உள்ளமை அமைந்திருக்கிற புறத்தால்.

(விளக்கம்: வெளிவந்துள்ள பொருள்களிலெல்லாம் உள்ளமையின் தாற்பரியம் உள்ளது என்பதாகும்.)

كَمَا كَانَتْ تِلْكَ الذَّوَاتُ قَبْلَ الظُّهُوْرِ فِي ذَالِكَ الْوُجُوْدِ

عَيْنَ ذَالِكَ الْوُجُوْدِ

அந்த உள்ளமையின் தாற்பரியமாக அந்த உள்ளமையிலே, அது தானேயான அது, வெளியாகிறதற்கு முன்னேயிருந்த அந்தப் பிரணவம் ஆனது போன்றது.

(விளக்கம்: இப்போதுள்ள நிலையானது (வெளிவந்த நிலை) வெளியாவதற்கு முன்னிருந்த நிலை.)

(மேலே கூறப்பட்ட மூன்று வாக்கியங்களினதும் மொத்தமான கருத்து.)

(இப்போதுள்ளதும் முன்னிருந்தது போன்றதேயென்பதாகும்.)

كَذَالِكَ الصِّفَاتُ الْكَامِلَةُ لِذَالِكَ الْوُجُوْدِ بِاعْتِبَارِ كُلِّيَّتِهَا

وَاِطْلَاقِهَا سَارِيَةٌ فِىْ جَمِيْعِ صِفَاتِ الْمَوْجُوْدَاتِ

மொத்தமாகவும் பூரணமாகவும் அதனைக் கவனிக்குமிடத்து அந்த உள்ளமைக்குள்ள பூரணமான வருணனைகளும் மேற்கூறப்பட்டது

போன்றதே. (அந்த வருணனைகளான) வுஜூதின் வருணனைகள் சிருஷ்டிகளின் வருணனைகள் அனைத்திலும் நடந்தேறும்.

(விளக்கம்: தானே தன்னிலாயுள்ளது (வுஜூது) وُجُوْدْ தாற் பரியம் எவ்வாறு மவ்ஜூதாத் (مَـــوْجُـــوْدَاتْ)களில் பிரதிபிம்பித்துள்ளதோ அவ்வாறே வுஜூதின் வருணனைகளும் மவ்ஜூதாத்(مَوْجُوْدَاتْ)திலே பிரதிபிம்பித்துள்ளன. எனவே வுஜூதை "ஹக்"கெனவும் மவ்ஜூதாத்தை "கல்க்" (خَلْق) எனவும் கொள்க. மறுவார்த்தையில் வுஜூதை "காலிக்" எனவும் மவ்ஜூதாத்தை "மக்லூகாத்" (مَخْلُوْقَـــاتْ)எனவும் கொள்க. ஆகவே, வுஜூத், காலிக் இரண்டும் ஹக்காகிய இறைக்கு உரியவை.)

(தானே தன்னிலாயுள்ளது (وُجُوْدْ)

(காணப்படும் பொருள்களான சராசரங்கள் (مَوْجُوْدَاتْ))

(காலிக் : படைக்கிறவன் (خَالِقْ))

(படைக்கப்பட்டவைகள் (مَخْلُوْقَاتْ))

ஹக், வுஜூத், காலிக் மூன்றும் ஒன்றே. மக்லூகாத் மவ்ஜூதாத் இரண்டும் ஒன்றே.)

மவ்ஜூத், மக்லூக் இரண்டும் சிருஷ்டிக்குரியன.

சிருஷ்டிகள் வருணனைகளைப் பொதிந்து கொள்கின்றன சிருஷ்டிகளின் வருணனைகளின் தாற்பரியங்கள் பூரணமான அந்த வருணனைகளாக அமைந்துள்ள புறத்தால்.

(விளக்கம்: சிருஷ்டிகளின் வருணனைகள் பூரணத்தின் வருணனைகளாக அமைந்துள்ளன.)

كَمَا كَانَتْ صِفَاتُ الْمَوْجُوْدَاتِ قَبْلَ الظُّهُوْرِ فِى تِلْكَ الصِّفَاتِ الْكَامِلَةِ عَيْنَ تِلْكَ الصِّفَاتِ الْكَامِلَةِ

பூரணமான அந்த வருணனைகளிலே சிருஷ்டிகளின் வருணனைகள் வெளியாவதற்கு முன்னால் அந்தப் பரிபூரணமான வருணனைகளின் தாற்பரியமாக ஆனது போலாகும். (விளக்கம்: பரிபூரணத்தின் சில வருணனைகளே சிருஷ்டிகளிலும் பிரதிபிம்பித்தன.)

اِنَّ الْعَالَمَ بِجَمِيْعِ اَجْزَائِه اَعْرَاضٌ وَالْمَعْرُوْضُ هُوَالْوُجُوْدُ

பொருள் : எல்லா வகைகளிலும் (பிரிவுகளிலும்) பிரபஞ்சம் இஉராளா(கும்) மஉரூள் என்பது உள்ளமைத் தத்துவமாகும்.

விளக்கம்: எல்லா வகைகள் என்பது ஆத்துமார்த்தமான ஜடார்த்தாமானவைகளைக் குறிக்கும். (சிருஷ்டிகள்)

இஉராள் என்பது அது அல்லாததைக் கொண்டு நிற்பது.

மஉரூள் என்பது தன்னில் தானே நிற்பது. அதுவே உள்ளமையாகும்.

وَاِنَّ لِلْعَالَمِ ثَلَاثَةُ مَوَاطِنٍ

பொருள் : பிரபஞ்சத்தினுக்கு மூன்று இடங்கள் உண்டு. (இடம்: தானம், வகை)

اَحَدُهَا التَّعَيُّنُ الْاَوَّلُ وَيُسَمَّى فِيْهِ شُئُوْنًا

பொருள்: முதலாவது முதற்குறிப்பு. இதற்கு ஷுஊன் எனப்பெயர் சொல்லப்படும். ஷுஊன் என்பதன் பொருள்: கருமம், செயற்படல். பிரபஞ்ச நிர்வாகம் முதலாயின.

பொருள் : அதிலே, செயல்கள் (கருமங்கள் அலுவல்கள்) உள்ளனவால் முதற்குறிப்பு எனக் கூறப்படும்.

(விளக்கம்: இது பற்றி முதலில் கூறப்பட்டுள்ளது. இதில் பொருள்களின் உற்பத்தியோ ஆரம்பமோ இருக்கவில்லை.) இதற்கு வஹ்தத் وَحْدَة எனவும் பெயர் கூறப்படும்.

وَثَانِيْهَا اَلتَّعَيُّنُ الثَّانِي وَيُسَمَّى فِيْهِ اَعْيَانًا ثَابِتَةً عِلْمِيَّةً

பொருள்: அதில் இரண்டாவது, இரண்டாம் குறிப்பாகும். அதிலே, அறிவால் நிலைபட்ட மூலப்பொருட்கள் உள்ளனவால் இரண்டாம் குறிப்பு எனக் கூறப்படும்.

(விளக்கம்: இது பற்றிய விளக்கமும் முன்னர் கூறப்பட்டுள்ளது காண்க. இதில் முதலாவது நிலை குறிப்பிடப்பட்ட பொருளாக இராதது. பொருட்கள், பொருட்களாக இருக்கவில்லை. இரண்டாவது ஆகு எனும்போது பொருளாக (வெளியாகாத நிலையில்) ஆகிவிடும் தன்மையுடையது.)

وَثَالِثُهَا فِى الْخَارِجِ وَلِهٰذَا يُسَمَّى اَعْيَانًاخَارِجِيَّةً

பொருள்: அதில் மூன்றாவது வெளியாகும் தன்மையில் உள்ளது. இதனால் அதற்கு வெளியான மூலப் பொருட்கள் எனக் கூறப்படும். இதுவெளியாகிறதாகும். பிரணவ அறிவான வுஜூதாகிய உள்ளமையிலிருந்து வெளியாகிறதால் இதற்கு வெளியாதல் எனும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. (خَارِجِيَّة)

(குன் ஆகிவிடு எனும் கட்டளையைக் கொண்டு அறிவாகிய உள்ளமையிலிருந்து குறிப்பான உள்ளமையின் பக்கம் படைப்பினங்களின் உலகு வெளியாவதாகும்.)

وَاَنَّ اَعْيَانَ الثَّابِتَة مَاشَمَّتْ رَائِحَةُ الْوُجُوْدِ

பொருள்: உள்ளமையின் வாடையை எவை நுகர்ந்தனவோ அவையேதாம் நிலைபெற்ற மூல பொருட்களாகும்.

وَاَنَّمَا الظَّاهِرُ اَحْكَامُهَا وَآثَارُهَا

ளாஹிர் (வெளிப்பாடு) என்பதெல்லாம் (அறிவின் வெளிப்பாட்டிலிருந்து குறிப்பின் வெளிப்பாடுகள் வரையுள்ள) அதன் அடையாளங்களும் சட்டங்களுமாகும்.

وَاَنَّ الْمُدْرَكَ اَوَّلاً فِيْ كُلِّ شَيْئٍ هُوَالْوُجُوْدُ

எல்லாவற்றிலும் முதலிலே தேடப்பட்டது வுஜூதேயாகும். (அதாவது -உள்ளமைப் பொருளாகும். முழுமையாகிய உள்ளமையே தவ்ஹீதாகிய ஏகத்துவத்தில் அடைந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

بوَاسِطَته يُدْرِكُ ذَالِكَ الشَّيْئُ

அடைந்து கொள்ள வேண்டும் எனும் விருப்பம் அல்லது தேட்டத்தின் மூலமாகவேதான் இப்பொருளாகிய வுஜூத் எனும் உள்ளமையை அடையமுடியும். (பொருள் அல்லது வஸ்து என்பது இங்கே திடப்பொருளைக் காட்டுவதன்று. விருப்பம் உள்ளவர்களேதாம் உள்ளமையை அடைவார்கள் என்பது இதிலிருந்து விளங்கும்.

كَالنُّوْرِ لِلشَّمْسِ

நாடப்பட்ட பொருளாகிய வுஜூதின் ஜோதியானது ஓர் ஒளிவைப் போன்றது. உதாரணத்திற்கு சூரியனின் ஒளிவைப் போன்றது.

مَثَلاً بِالنِّسْبَةِ اِلى سَائِرِالْاَلْوَانِ وَالْاَشْكَالِ

உதாரணமாக எல்லா (வருணங்களளவிலும்) நிறங்களளவிலும் உருவ கோலங்களளவிலும் உள்ள சம்பந்தத்தைப் போலும்.

விளக்கம் : (சூரியனுக்கு ஒளி சம்பந்தமாயுள்ளது. அதுபோன்று மனிதனுக்கோ மற்றும் சிருஷ்டிகளுக்கோ (வருணங்களும்) நிறங்களும் உருவ அமைப்பும் சம்பந்தப்பட்டுள்ளன. இதனால் ஒவ்வொன்றுக்குமுள்ள மாற்றம் தென்படுகின்றது. சூரியனின் சோதி எல்லாவற்றிலும் பிரதிபிம்பிக்கின்றது. சூரியனுக்கு ஒளி பிரத்தியட்சமாயிருப்பதுபோல் சிருஷ்டிகளுக்கு (வருணங்களும்) நிறங்களும் உருவ அமைப்பும் பிரத்தியட்சமாயுள்ளன.

وَلِاَجْلِ دَوَامِ الظُّهُوْرِ وَشِدَّتِهِ

இன்னும் நியமமாய்த் தோன்றுதற்காகவும் அத்தோன்றலின் உறுதிப்பாட்டுக்காகவும் உள்ள சம்பந்தத்தின் உதாரணத்தைப் போன்றது. (உறுதிப்பாடு என்பது அங்க பரிபூரணத்தைக் காட்டும்.)

لَايَعْلَمُ هٰذَا الْاِدْرَاكَ اِلَّاالْخَواصّ

இந்த (அறிவின்) ஆழத்தைத் தகுதி வாய்ந்த மேன்மக்களேயன்றி யறிய மாட்டார்கள்.

وَاِنَّ الْقُرْبَ قُرْبَانِ

நெருங்கல் அல்லது முடுகல் என்பது இருவகைப்படுவது. (இறைவனுடன் இரண்டறக் கலத்தலேயே குர்பு என்பர். இதனை இன்னொரு மொழியிற் கூறுவதாயின் விஸால் وِصَـــال என்பதாகும். உங்களிடத்தில் என் அடியார்கள் என்னைப் பற்றிக் கேட்டால் நானோ நெருங்கினவன் என்று கூறுங்கள் எனத் திருமறையில் கூறப்பட்டுள்ளது. وَاِذَا سَئَلَكَ عِبَادِيْ عَنِّي فَاِنِّيْ قَرِيْبٌ இங்கு குர்பெனும் சொல்லைச் சேர்ந்த கரீப் கூறப்பட்டுள்ளது.

மேலும், نَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ "ஹப்லுல் வரீத் எனும் நரம்புகளைவிட நாம் அவனிடத்து நெருக்கமாயுள்ளோம்" என்பதிலும்

குர்பிலிருந்து உண்டான اَقْرَبُ கூறப்பட்டுள்ளது. எனவே அல்லாஹ் சிருஷ்டிகளிடத்தே மிக நெருக்கமானவன். எல்லாம் அதுவே எனும் போது தஸவ்வுபையறியாத முரட்டு மூடர்களும் பொறாமைக்காரர்களும் இதை மறுக்கிறார்கள். அல்லாஹ் மேல் வானத்தில் ஓர் ஆசனத்தில் அமர்ந்துள்ளான் என நினைத்து ஆதியந்தம், உயரம் பள்ளம், உயர்வு தாழ்வு, மட்டு முதலானவையற்ற இறைவனைச் சிலைகளுக்குச் சமப்படுத்திக் கும்பிடுவது போல் பல எண்ணங்களின்படியே பலவாறு இறைவனைக் கும்பிடுகிறார்கள். நஊதுபில்லாஹி மினஷ்ஷிர்க். வஹ்ஹாபிக் கும்பல்களும் மதம் மாறி, இஸ்லாம் எனும் பெயருடன் இதனையே கூறிக் கொள்கிறார்கள். கொடிய சிர்க்கிலிருந்து கொண்டு தங்களைத் தவ்ஹீத் ஜமாஅத் எனவும் கூறிக் கொள்கிறார்கள். உண்மை உண்மையாகவே இருக்கும். உண்மை பொய்யாவதில்லை.)

اَحَدُهُمَا قُرْبُ النَّوَافِلِ

அவ்விரண்டில் ஒன்று குர்புன் நவாபிலாகும்.

وَالثَّانِيْ قُرْبُ الْفَرَآئِضِ

இரண்டாவது குர்புல் பராஇளாகும்.

اَمَّاقُرْبُ النَّوافِلِ فَهُوَ زَوَالُ صِفَاتِهِ الْبَشَرِيَّةِ

அறிந்து கொள், மேலதிக வழிபாட்டின் நெருக்கம் அல்லது கொடையின் நெருக்கம் என்பது மனிதனுடைய மானுட வருணனைகள் மனிதனை விட்டும் நீங்குதலாகும். (நீங்குதல் என்பது சிருஷ்டிகளுக்குரிய அடிமைத்துவம் அல்லது அதற்குரிய வருணனைகள் மனிதனிலிருந்து அற்றுப் போதலாகும்.)

وَظُهُوْرُ صِفَاتِهِ تَعَالٰى عَلَيْهِ

மேலும் அல்லாஹுதஆலாவின் வருணனைகள் (அவனில்) வெளியாகிறதுமாயிருக்கும்.

يُحْيِيْ وَيُمِيْتُ بِاذْنِ اللّٰه تَعَالٰى

குர்புன் நவாபிலையுடையவர்கள் அல்லாஹுதஆலாவின் உத்தரவைக் கொண்டு உயிர்ப்பிப்பார்கள். மரணிக்கச் செய்வார்கள்.

وَيَسْمَعُ وَيَبْصِرُ مِنْ جَمِيْعِ جَسَدِهِ لَامِنَ الْاُذْنِ وَالْعَيْنِ فَقَطْ

அவருடைய முழு உடலிலிருந்தும் அவர் கேட்பார், இன்னும் பார்ப்பார். அறவே, அவருடைய காதில் நின்றும் கண்ணில் நின்றுமல்ல.

وَكَذَالِكَ يَسْمَعُ الْمَسْمُوْعَاتِ مِنْ بَعِيْدٍ وَيَبْصُرُ الْمُبْصِرَاتِ مِنْ بَعِيْدٍ

இவ்வாறே மிகத் தூரத்திலிருந்து கேட்கப்படும் ஒலி முதலான கேள்விகளையும் கேட்பார். மிகத் தூரத்திலுள்ள பார்வைக் கெட்டாத காட்சிகளையும் காண்பார்.

وَعَلٰى هٰذَاالْقِيَاسِ இந்த ஒழுங்கின்படி

وَهٰذَا مَعْنٰى بِفَنَاءِ الصِّفَاتِ الْبَشَرِيَّةِ فِيْ صِفَاتِ اللّٰه

மானுட வருணனைகளை மிகப் பூர்வீக இறையின் வருணனைகளிலே அழித்துவிடுதல் எனும் கருத்து இதுவேயாகும். (ஒரு சிருஷ்டி தன்னை இறையின் வருணனைகளிலே அழித்து தனக்கொரு வருணனையில்லை என்னும் நிலைக்கு வந்துவிடுமானால் அது மேற்கண்ட உயர்வுகளை அடையும்.)

وَهُوَ ثَمْرَةُ النَّوافِلِ

இதுவே நவாபிலின் பிரயோஜனமாகும்.

وَاَمَّاقُرْبُ الْفَرَائِضِ فَهُوَ فَنَاءُالْعَبْدِ بِالْكُلِّيَّةِ عَنْ شُعُوْرِ جَمِيْعِ الْمَوْجُوْدَاتِ حَتّٰى عَنْ اِحْسَاسِ نَفْسِهِ الْجُزْئِيَّةِ

பொருள் 1: அறிக. குர்புல் பராஇள் (முக்கிய வழிபாட்டின் நெருக்கம்) என்பது தனித்தனிப் பொருள்களான அல்லது பகுதிகளான அந்த உடல்களின் உணர்ச்சியை மேலும் விட்டு சிருஷ்டிப் பொருள்கள் அனைத்தினுடைய உணர்ச்சிகளையும் விட்டு அடங்களிலும் அடிமை தன்னை அழிப்பதாகும்.

பொருள் 2 : (சிருஷ்டிப் பொருள்கள் அனைத்தினுடையவும் உணர்வின்றி பூரணத்திலே ஓர் அடிமை அழிவதாகும். மேலும் பூரணத்தின் பகுதியான அவன் தன் உணர்ச்சிகளை விட்டு நீங்குகிறவரை அழிவு உண்டாகாது.)

اَيْضًا بِحَيْثُ لَمْ يَبْقَ فِيْ مَحَلِّ نَظْرِهِ الاَّوُجُوْدَالْحَقِّ سُبْحَانَهُ وَتَعَالٰي

மேலும், அவனுடைய தோற்றத்திலே, ஸுபுஹானஹூவ தஆலாவாகிய ஹக்கின் உள்ளமையைத் தவிர வேறு எதிலும் நிலை நிற்காதிருப்பதன் புறத்தால்.

وَهٰذَا مَعْنَي فَنَاءِ الْعَبْدِ فِى اللّٰهِ تَعَالٰى

وَهُوَ ثَمْرَةُ لِلْفَرَائِضِ بِفَنَآءٍ

இதுதான் அல்லாஹுதஆலாவுடைய தாத்திலே (அது தன்னிலே) அடிமை அழிந்து போகிறதின் கருத்து. அதுவே பனாவைக் கொண்டுள்ள பராஇளின் பயனாகும்.

(குறிப்பு: குர்புன் நவாபில் என்பது மானிடவருணனைகளை ஹக்கின் வருணனைகளில் அழிப்பது. வேறெதிலுமேயன்றி அதிலே நிலைத்து நிற்றல்.)

(குர்புல் பராஇள் என்பது மானிடன் பூரணமாய்த் தன்னை ஹக்கின் பரிபூரண தாத்தில் இரண்டென்ற நிலையின்றி வேற்றுமையின்றி அழித்து அதிலே நிலைத்து நிற்றலாகும்.)

وَانَّ مِنَ الْقَائِلِيْنَ بِوَحْدَةِ الْوُجُودِ فَالْاَوَّلُ مَنْ يَعْلَمُ اَنَّ الْحَقَّ سُبْحَانَهُ وَتَعَالٰى حَقِيْقَةُ جَمِيْعِ الْمَوْجُوْدَات

முதலாவது, வஹ்ததுல் வுஜூதைப் பற்றிக் கூறியவர்களிற் சிலர் ஸுப்ஹானஹுவதஆலாவாகிய ஹக்கெனும் இறை, அனைத்துப் பிரபஞ்சத்தினதும், அதன், உள்ரங்கமான யதார்த்தம் என அறிவர். பிரபஞ்சம் என்பது இங்கே சராசரங்களைக் குறிக்கும்.

بَاطِنِهَا عِلْمًا يَقِيْنًا

அவர்கள் நிச்சய அறிவினால் மட்டுமே ஹக்கை உள்ளரங்கக் காட்சி காண்பார்கள். (இவ்வகையோர் ஹக்கைத் தன்ஸீஹாக மட்டுமே காண்பார்கள். தஷ்பீஹுக்குத் தாற்பரியத்தில் இடம் கொடுக்க மாட்டார்கள்.)

وَلٰكِنْ لَا يُشَاهِدُ الْحَقَّ سُبْحَانَهُ وَتَعَالٰى فِى الْخَلْقِ

ஆயினும், அவர்கள் ஸுபுஹானஹுவதஆலாவாகிய ஹக்கு எனும் இறைவனை சிருஷ்டிகளிலே காட்சி காணமாட்டார்கள். (மேலே கூறப்பட்டது முதலாவதாகும். இதற்கு நிலைபாடான குறிப்புகளின் நிழல் என்பர். அதாவது பிரதிபிம்பம். அதேயான பூரணப் பொருளல்ல. இவர்கள் ஹக்கும் கல்கும் வேறுவேறு எனக் கூறுபவர்கள் இது முதலாம் தரமாகும்.

இவ்வாறு வஹ்ததுல் வுஜூதைப் பற்றிக் கூறியவர்களில் கீழ்க்காணுமாறு சொல்பவர்களும் இரண்டாம் வகையினர்.

وَالثَّانِيْ مِنهُمْ مَنْ يُشَاهِدُ الْحَقَّ فِي الْخَلْقِ شُهُوْدًا حَالِيًّا بِالْقَلْبِ

இரண்டாவது, அவர்களினின்றும் சிலர். உள்ளத்தில் நிலை பெற்றிராத காட்சியாக சிருஷ்டிகளிலே பூரண இறையைக் காட்சி காண்பர்.

இந்தத் தரம் முந்தின தரத்தைவிட மேலானதும் உயர்வானதுமாகும். இதற்கு நிச்சயமான குறிப்புகள் என்பர். சிலவேளைகளிற்றான் ஹக்கும் கல்கும் ஒன்று என்பர். ஆனால் பூரண யதார்த்தத்தில் இவர்களுக்கு நம்பிக்கையில்லை. இவர்கள் காட்டும் உதாரணம். இரும்பும் நெருப்புமாகும். இதனாலேயே (ஹாலிய்யன்) حَالِيًّا என்று கூறப்பட்டுள்ளது. حَالَة ஹாலத் என்பது சில நேரங்களில் என்பது கருத்து. வஹ்ததுல் வுஜூதைப் பற்றிக் கூறியவர்களில் கீழ்க்காணுமாறு கூறுபவர்களும் மூன்றாம் வகையினைச் சார்ந்தவர்கள்.

ஒன்றுக்கு ஒன்று மாற்றமாயன்றி ஹக்காகிய பரிபூரணத்திலே சிருஷ்டியையும் பரிபூரணத்தையும் (தன்னில் தானே) காட்சி காண்பவர்களே அவர்கள்.

وَهٰذِهِ الْمَرْتَبَةُ (اَلْمُسَمَّاتُ بِعَيْنِ الْيَقِيْنِ)
اَوْلٰى وَاَعْلٰى مِنَ الْمَرْتَبَةِ الْاُوْلٰى

இந்தக் கடைசித் தரமானது (ஐனுல்யகீன் (عَيْنُ الْيَقِيْنْ) எனப் பெயர் சொல்லப்பட்டது.) முந்திய முதலாம் தரத்தை விடவும் மிக மேலானதும் உயர்வானதுமாகும். (சந்தேகமற்ற மூலம்.)

(மேலே கூறப்பட்டுள்ள அனைத்தும் வஹ்தத்துல் வுஜூத் எனக் கூறப்படுகின்றன. வஹ்தத்துல் வுஜூதை தனித்துவமான உள்ளமை எனக் கூறலாம். இதற்கு மாறுபட்டதெதுவும் இல்லையென்பதாகும்.)

(இந்த வஹ்தத்துல் வுஜூத் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் படுகின்றன. ஒன்று, சிருஷ்டிகளிலே ஹக்கைக் காணமாட்டார்கள். ஹக்கு வேறு, கல்கு வேறு என வாதாடுபவர்கள். இவர்கள் ஹக்கு ஹக்குத் தான் கல்கு கல்குத்தான் என்பவர்கள். இது தனித்தன்மையிலிருந்து பிரிவை ஏற்படுத்துகிறது. வேற்றுமையை உண்டு பண்ணுகிறது. உலமா உள்ளாஹிர் எனக் கூறக் கூடிய வெளிரங்கமான அறிவை மட்டும் கற்றுள்ள உலமாக்களின் வஹ்தத்துல் வுஜூத் எனும் கொள்கை இதுவாகும்.)

இது ஹக்கை இரண்டாகப் பிரிக்கும் கொள்கையாகும். ஹக்கு (இறைவன்) தனித்தவன்; நிகரற்றவன்; பரிபூரணமானவன் எனும் கொள்கைக்கு மாற்றமானது இது. ஒரு கூட்டத்தார், வானத்திலே அர்ஷை வைத்து அதிலே இறைவன் அமர்ந்திருக்கிறான் எனும் கொள்கையுடையவர்கள்.

இக்கொள்கையுடையோர் பரிசுத்த அல்லாஹூவுக்குக் குற்றம் விளைவிக்கிறவர்கள். அல்லாஹ்வுக்கு ஓரிடமோ அவனுக்கு ஒரு மட்டோ அவன், இவன், நான், நீ, அவள், இவள் நாம் முதலான தன்மை, முன்னிலை. படர்க்கைகளோ இல்லாதவன்; எதுவும் தேவையற்றவன். இவ்வாறு ஓரிடம் குறிப்பிட்டுச் சொல்லப்படுவது சிர்க்கை உண்டு பண்ணும்.

(ஆகவே இந்த முதலாவது மர்த்தபாவுக்கு வஹ்தத்துல் வுஜூத் எனக் கூறப்பட்டிருப்பினும் இது வஹ்தத்துல் வுஜூத் அல்ல. இது கடலலை வேறு; கடல் வேறு என்பது போலுள்ளது. பனிக்கட்டி வேறு நீர் வேறு என்பது போலுள்ளது.)

(இரண்டாவது மர்த்தபா மேற்சொல்லப்பட்டது போன்றன்று. அன்றிச் சற்று முன்னேற்றமுடையது. இவர்கள் ஹக்காகிய இறையைச் சிருஷ்டியிலே காட்சி காண்பார்கள். ஆயினும் இது நிலைபெறாத

காட்சியாகும். அதாவது சுஹூதுடைய நேரத்தில் மட்டும் தான் ஹக்கும் கல்கும் ஒன்று என்பர். ஆயினும் வேறுபட்டு விட்டார்களானால் ஹக்கு வேறு கல்கு வேறு என்பர்.)

(எனவே நிலைபெற்ற – நிரந்தரமான தன்மையில் இவர்களில்லை. இரும்பும் நெருப்பும் போன்று. நெருப்பில் இரும்பை இட்டால் அது நெருப்புப் போல் காட்சி தரும் வரை ஹக்கில் கல்கு கலந்திருக்கும் என்பர். நெருப்பின் குணம் இரும்பிலிருந்து நீங்கிவிட்டால், இரும்பு இரும்பாகிவிடும். நெருப்பு நெருப்பாகவே இருக்கும். இஃதும் நிலைபட்ட தன்மையுடையதன்று. ஆதலால் இதிலும் சிர்க்கின் தன்மையுள்ளது. மேலே கூறப்பட்டவைகள் இரண்டும் இப்னு அறபி (ரலி) அவர்களுடைய கொள்கைக்குப் பொருத்தமற்றவையாகும். (இது: இப்னு அரபி (ரலி) அவர்களின் கொள்கை கல்கிலே ஹக்கைக் காண்டலும் ஹக்கிலே கல்கைக் காண்டலுமாகும். இந்த இரண்டிலும் எந்த வித்தியாசமின்றி ஹக்கையும் கல்கையும் ஒன்றாகக் காண்டலே வஹ்தத்துல் வுஜூதாகும். எந்த வகையான பிரிவினையுமின்றி ஹக்கை ஒன்றுபடுத்தலே வஹ்தத்துல் வுஜூதின் தன்மையாகும். இவ்விரண்டும் ஹக்கில் கல்கைக் காண்டலும் கல்கில் ஹக்கைக் காண்டலுமான சுஹூதாகும்.

(இதில் எந்த விதமான இணைவைத்தலும் ஏற்படுவதில்லை. இந்தத் தன்மையே எல்லாவற்றிலும் மிக மேலானது. தத்துவார்த்தத்திற்கும் தருக்க முறைக்கும் பொருத்தமானது. விதண்டாவாதம் புரியாது உண்மையைக் கருதி விளங்கிக் கொண்டவர்களுக்கும் அமுதமானது. இது வெறும் சக்கையல்ல. பிழிந்தெடுத்த சாறாகும். எல்லாச் சக்தியும் இதிற்றான் உண்டு.

فَضْلاً عَنِ الْمَرْتَبَةِ الْاَخِيْرَةِ الَّتِيْ هِيَ اَعْلَى مِمَّاسِوَاهَا

مِنَ الْمَرْتَبَتَيْنِ السَّابِقَتَيْنِ

இதன் கருத்து: முந்திய இருதரங்களினின்றும் அதல்லாத மிக உயர்ந்த கடைசித்தரமும் நீங்கலாக. (அதனையும் அடைய முடியாது என்பதாகும். இது மூன்று தரங்களைக் கொண்டது. ஒன்று இல்முல் யகீன், இரண்டு ஐனுல் யகீன், மூன்று ஹக்குல் யகீன். ஹக்குல் யகீன் ஐனுல் யகீனைவிட உயர்தரமானது. ஐனுல் யகீன் இல்முல் யகீனை விடமேலானது.

தாத்து அல்லது வுஜூத் அல்லது அமா அல்லது லாதஅய்யுன் எனும் முதலாந்தரம் அல்லது இரண்டாந்தரமான ஹக்குல் யகீன் அல்லது மூன்றாந்தரமான ஐனுல் யகீன் அல்லது நான்காம் தரமான இல்முல் யகீன் ஷரீஅத்து, தரீக்கா முதலானவற்றையும் குத்புமார்களையும் இழிவுபடுத்துவோரை முன்கிர்கள் என்பர். முன்கிர் என்பது முரணானவர்கள், மறுப்பவர்கள் எனும் கருத்துடையன. இதில் ஸுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக்கொள்ளும் சிலரும் தஸவ்வுபின் அறிவில் சுத்த சூனியங்களான ஆலிம்கள் சிலரும் தம்மை தௌஹீத் ஜமாஅத் என மாற்றுப் பெயர் சூட்டிக் கொண்ட வஹ்ஹாபிகளும் உட்படுவர்.

لعن اللّه المنافقِيْنَ والكافرين ومن يضرعقيدة الاسلام
كل ساعة ولحظة ولمحة واجعلهم في نارجهنم داخلين
واجعلهم فى الدرك الاسفل من النار جمعا وكافة، تقبل
منا ماسمعنا منْكَ يَارب العالمين

وَالثَّالثُ منْهُمْ مَنْ يُشَاهدُ الْحَقَّ فى الْخَلْقِ وَالْخَلْقَ
فِي الْحَقِّ بحَيْثُ لايَكُوْنُ اَحَدُهُمَا مَانعًا عن الْآخرِ

வஹ்தத்துல் வுஜூதைப் பற்றிக் கூறுகிறவர்களினின்றும் மூன்றாவதானோர் அவ்விரண்டிலொன்றும் மற்றதைவிட்டும் விலகிக் கொள்ளாதிருக்கிற புறத்தால், ஹக்காகிய பரிபூரணத்தைச் சிருஷ்டியிலும் சிருஷ்டியிலே ஹக்காகிய பரிபூரணத்தையும் காட்சி காண்பார்கள். (வஹ்தத்துல் வுஜூத் என்னும் சொல் அறபி மொழியிலே இருப்பதால் இது அறபு நாட்டிலிருந்துதான் இறக்குமதியாகியிருக்கும். மூளை கலங்கிய காய்ந்து வரண்ட மொழியறிவில்லாத, தத்துவார்த்தத்தையே நுகராத பித்துப்பிடித்த பொறாமைக்காரக் கள்ளக் கும்பல்கள் சொல்வதுபோல் இம்மொழி இந்தியாவிலிருந்து இறக்குமதியாகவில்லை. இதை மனித மிருகங்கள் விளங்கிக் கொள்ளா.) வஹ்தத்துல் வுஜூதை விண்ணுலகத்திலிருந்து அல்லாஹுவே அறபு நாட்டுக்கு இறக்குமதி செய்துள்ளான்.

وَهٰذِهِ الْمَرْتَبَةُ الْاَخِيْرَةُ اَوْلٰى وَاَعْلٰى مِنَ الْمَرْتَبَتَيْنِ السَّابِقَتَيْنِ

இந்தக் கடைசித்தரம்தான் (முந்திய) இருதரங்களைவிடவும் மிகப் பாத்தியமுடையதும் மிக்க மேன்மையானதும்.

وَهِيَ مَقَامُ الْاَنْبِيَاءِ وَالْاَقْطَابِ بِمُتَابِعَتِهِمْ

இந்தத் தரம் தான் அன்பியாக்கள் அவர்களைத் தொடர்ந்தவர்களாக வந்த வந்து கொண்டிருக்கும் குதுபுமார்களுடையவும் தரமாகும்.

وَمِنَ الْمَحَالِّ اَنْ تَحْصُلَ الْمَرْتَبَةَ الْمُتَوَسِّطَةَ مِنْ تِلْكَ الْمَرَاتِبِ الثَّالِثِ لِمَنْ خَالَفَ الشَّرِيْعَةَ وَالطَّرِيْقَةَ

ஷரீஅத்துக்கும் தரீக்கத்துக்கும் எவன் மாற்றமாய் நடப்பானோ அவனுக்கு அந்த மூன்று தரங்களிலும் நடுத்தரமான ஐனுல் யகீன் எனும் தரத்தை அடைதல் முடியாதாகும்.

(ஷரீஅத்துக்கும் தரீக்கத்துக்கும் மாற்றம் செய்வது இயற்கைக்கு மாறானதாகும். ஷரீஅத்துக்கும் தரீக்கத்துக்கும் மாற்றம் செய்வோர் உயர்தரமான அந்தக் கடைசித் தரத்தை அடைவது முடியததாகும்.)

اِنَّ جَمِيْعَ الْمَوْجُوْدَاتِ مِنْ حَيْثُ الْوُجُوْدِ

عَيْنُ الْحَقِّ سُبْحَانَهُ وَتَعَالٰى

தன்னில் தானான உள்ளமையின் புறத்தால் உள்ள சிருஷ்டிப் பொருள்கள் அனைத்தும் ஸுப்ஹானஹூவதஆலாவாகிய சத்திய ஹக்காகிய இறைவனின் மூலமாகும். (தனித்தனியாகக் குறிப்பிடுகின்றபோது ஸுபுஹானஹூவ தஆலாவாகிய ஹக்கு அல்லாதது சிருஷ்டி என்பதாகும். (அவைகள் ஹக்கினின்றும் வெளியானவைகளாகும்.) அவைகளை ஹக்கின் பகுதிகள் (ஜுஸ்உகள்) என்போம். மரத்தை முழுமையாகப் பார்க்கும்போது மரமெனவும் அதிலிருந்து இலை பறிக்கப்பட்டால் அதனை மரம் எனக் கூறாது இலையெனவும் கூறுவது போன்றது. ஆயினும் இலைகள் மரம் எனும் தாற்பரியத்திலிருந்து வந்தமை போன்றே சிருஷ்டிகள் அனைத்தும் ஹக்கென்னும் தாற்பரியத்திலிருந்து வந்தவையென்பது புலனாகும்.)

وَمِنْ حَيْثُ التَّعَيُّنِ غَيْرُ الْحَقِّ سُبْحَانَهُ وَتَعَالٰى

அஃது தஅய்யுனே பரிபூரண ஹக்கு எனக் கூறப்படுவதன் புறத்தால் மவ்ஜுதாத்களான காட்சிப் பொருள்கள் மெய்ப்பொருளாகிய உயர்வையுடைய பரிசுத்தமான ஸுபுஹானஹூவதஆலா அல்ல.

(மேலே கூறப்பட்ட ஐனுல் ஹக்குத்தான் வுஜூதுல் முதுலக் என்னும் மொத்தமான உள்ளமை. அதல்லாதவைகளே தஅய்யுன் ஆகும்.)

(இதனையே கைருல் ஹக் எனும் ஹக்கல்லாதது என்பர் ஆயினும் தாற்பரியத்திலே அதுவும் ஹக்கிலிருந்து வெளியானதே.)

وَالْغَيْرِيَّةُ اعْتِبَارِيَّةٌ

எனவே, கைரிய்யத் அதாவது அல்லாதது என்பதும் கவனத்துக்குரியதாகும். (இங்கே கவனத்துக்குரியது என்பதனால் அதுவும் ஹக்கின் தாற்பரியமேயாகும். எனவே மேலே கூறப்பட்ட ஹக்கின் பகுதிகளாயினும் அவையும் ஹக்கின் தாற்பரியமே என்பது இந்த வாக்கியங்களால் விளங்கும்).

وَاَمَّامِنْ حَيْثُ الْحَقِيْقَةِ فَالْكُلُّ هُوَالْحَقُّ سُبْحَانَهُ وَتَعَالٰى

அறிக. யதார்த்தத்தின் புறத்தால் அனைத்தும் மெய்ப் பொருளாகிய உயர்வையுடைய பரிசுத்தமான சுப்ஹானஹுவதஆலாவாகும்.

விளக்கம்: தனித்தனியாக ஒவ்வோரு பொருளையும் நோக்கும்போது அவைகள் உறுப்புகளே. மனிதனின் கை கால்கள் போன்றது. அனைத்தையும் ஒன்றாக நினைக்கும்போது அவையனைத்தும் ஹக்காகவும் ஹக்குத் தாற்பரியமாகவும் உள்ளன என்பது பரம இரகசியமும் உண்மையுமாகும்.

وَمِثَالُهُ اَلْحُبَابُ وَالْمَوْجُ وَكُوْزُالثَّلْجِ فَاِنَّ كُلَّهُنَّ
مِنْ حَيْثُ الْحَقِيْقَةِ عَيْنُ الْمَاءِ

அதற்குரிய உதாரணம்.

நீர்க்குமிழ், அலை, உறை பனிக்குவளை. அவை அனைத்தும் அதுவேயானது அல்லது யதார்த்தம் எனும் காரணத்தால் நீரின் மூலம் அல்லது தாற்பரியமாகும். (நீர்க்குமிழ், அலை, உறைபனிக்குவளை ஆகியன எல்லாம் நீரேயாகும். தனித்தனிப் பொருள்களாக ஷரீஅத்தை மட்டுமுடைய அல்லது மேலே கூறப்பட்ட முதலாவது தரத்தையுடைய பிரித்துப் பார்க்கும் தன்மையுடைய அன்னாரின் கொள்கையைப் பொறுத்து மேலே கூறப்பட்ட உதாரணங்கள் நீரல்ல என்பதாகும்.)

وَمِنْ حَيْثُ التَّعَيُّنِ غَيْرُالْمَاءِ

பொருள்கள் வெளியாயின பின்னால் அவைகள் تَعَيُّـــنْ எனும் புறத்தால் நீரல்ல. (அவ்வாறு கூறுவது மடமையாகும்.) (அதாவது ஹக்குவேறு கல்கு வேறு எனக் கூறுபடுத்துகிறவர்களின் கொள்கைப்படியுள்ளதே இது.) (இக்கொள்கை ஹக்கைப் பரிபூரணமாய் எண்ணி அதல்லாதது வேறில்லை என எண்ணும் முவஹ்ஹித்களின் கொள்கைப்படி ஹக்கைக் கூறுபடுத்திச் சித்தரவதை செய்வதாகும். நீரிலே மிதந்துவரும் நீர்க்குமிழில் விரலை வைத்தால் குமிழ் விரலுக்கு வருவதில்லை. அது உடைந்துவிடும். அப்போது விரலிருப்பது நீராகும். இதனை உண்மையான உள்ளத்தால் உணர்ந்தாற் போதும்.

இந்தப் பாபத்திலிருந்து, பெரும்பாபத்திலிருந்து, சிர்க்கென்னும் கொடிய பாபத்திலிருந்து அனைவரையும் ஹக்குப் பாதுகாக்குமாக. ஆமீன்.)

وَكَذَالسَّرَابُ مِنْ حَيْثُ الْحَقِيْقَةِ عَيْنُ الْهَوَآءِ

وَمِنْ حَيْثُ التَّعَيُّنِ غَيْرُالْهَوَآءِ

அதுபோன்றே ஹகீகத்தின் பொருட்டுக் கானல் ஆகாயத்தின் யதார்த்தமாகும். தனித்தனியாகக் குறிப்பிடுவதன் பொருட்டு கானல் ஆகாயமல்ல என்பதாகும். (இவ்வாறான கருத்து உண்மையறியாத மாயையால் ஏற்படுவதாகும்.)

وَالسَّرابُ فِي الْحَقِيْقَةِ هَوَآءٌ ظَهَرَ بِصُوْرَةِ الْمَآءِ

கானல் யதார்த்தத்திலே நீரின் உருவத்தில் வெளியான ஆகாயம் அல்லது வாயுவாகும். (இதுவே முழுமையான விளக்கமாகும்.)

وَالدَّلائِلُ الدَّالَّةِ عَلٰى وَحْدَةِ الْوُجُوْدِ كَثِيْرَةٌ

வஹ்தத்துல் வுஜூதாகிய தனித்த உள்ளமைபற்றி அறிவிக்கின்ற ஆதாரங்கள் குர்ஆனிலே அதிகமுண்டு.

وَامَّامِنْ نَصِّ الْقُرْءٰنِ فَمِنْهَا قَوْلُهُ تَعَالٰى

وَلِلّٰهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ

அறிந்துகொள். குர்ஆனின் மூலவசனங்களில் நின்றும் (உள்ள சில கருத்துகள் உண்டு.) கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்குரியன எனும் அல்லாஹுதஆலாவின் திருவசனமும் அவைகளினின்று முள்ளவை.

மாட்சிமை பொருந்திய சிறப்புக்குரிய அல்லாஹ்வின் சொல், "கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்குரியன" என்பதாகும். (அதாவது, கிழக்கும் மேற்கும் என்பதன் கருத்து முழுப் பிரபஞ்சமும் அவனுக்குரியது என்பதாகும்.)

فَاَيْنَمَاتُوَلُّوْا فَثَمَّ وَجْهُ اللّٰهِ

"நீங்கள் எங்குத் திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வின் தோற்றம் அல்லது பக்கம் இருக்கிறது" (ஒரு கூட்டம் அல்லாஹ்வுக்கு முகம், கையெல்லாம் இருப்பதாகக் கூறிக் கொள்கிறார்கள். கால், கண், மூக்கு, வாய் எல்லாம் இருப்பதான கண்டுபிடிப்பு இன்னும் வரவில்லை. கண்டுபிடிப்புக்காக ஒரு கூட்டம் பெரும் முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இன்ஷா அல்லாஹ் ஒரு வேளை முழு முயற்சியின் பின் புதிரான

மெய்சிலிர்க்கும் கண்டுபிடிப்புகள் சீக்கிரம் வரும் சாத்தியம் உண்டு. அப்போது தனிமனித வழிபாடு அல்ல. தனிமனித வணக்கம், விக்கிரக ஆராதனை சீக்கிரமே வந்துவிடும். அப்போது ஹக்கை அறிந்த ஒரு கூட்டம் அத்தகைய முஷ்ரிக்களை, இணைவைப்பவர்களைத் தகர்த்தெறியும்.

வலில்லாஹில் ஹம்து, லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம்.

அதே கூட்டம் அல்லாஹ் வானத்தில் சிம்மாசனத்தில் (அர்ஷில்) இருப்பதாகக் கூறிக் கொள்கிறது. அவனுக்கு உருவம் உண்டாம். ஆனால் அந்த உருவம் எது என்றும் கூற முடியாதாம்.

அவர்களின் பரிசுத்தமான ஆராய்ச்சியின்பின் இதுதான் எனச் சீக்கிரமே பிரசித்தப்படுத்துவார்கள். பரிசுத்த தவ்ஹீதை அறியாதாரின் அவலநிலையே இதுவாகும். எம்மை இவ்வகையான கொடிய சிரிக்கிலிருந்து ஹக்குப் பாதுகாக்குமாக. ஆமீன். வஜ்ஹு என்பதற்கு முகம் என்பதல்ல கருத்து Direction, appearance தோற்றம் அல்லது பக்கம் என்பதாகும்.

نَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ

"நாமோ உட்கழுத்து வெளிக்கழுத்து நரம்புளைவிட அவனிடத்து மிக நெருக்கமாயுள்ளோம்." (ஹப்லுல் வரீத் என்பது கழுத்திலிருந்து இருதயம் வந்து சேரும் இரத்த நரம்பு. இது உட்கழுத்து நரம்பு வெளிக்கழுத்து நரம்பு என இருவகைப்படும. இதை ஆங்கிலத்தில் Internal Iugular vein, External Iugular vein என்பர். இதுவே ஹப்லுல் வரீத் எனக் குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. இது முக்கியமான ஒரு நரம்பாக இருப்பதால்தான் திருக்குர்ஆனிலே ஒரு முக்கியமான விசயத்திலே இது கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இதைப் பிடரி நரம்பு எனவும் கூறுவர். இது மனிதனுக்கு மிக நெருக்கமான நரம்பு. ஆயினும் இறைவன் இந்த நரம்பைவிட மனிதனோடு மிக நெருக்கமானவனாக இருக்கிறான் என்பதே இதன் கருத்து.)

وَهُوَ مَعَكُمْ اَيْنَمَا كُنْتُمْ

“நீங்கள் எங்கிருந்தபோதும் அவன் உங்களுடனே”. (நம்முடன் அவனிருக்கும்போது நாம் எங்கிருந்தாலும் அவனும் பிரியாது நம்முடனேயே இருப்பான்.)

وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْكُمْ وَلَكِنْ لاَ تُبْصِرُوْنَ

உங்களைவிட அவனிடத்து நாம் மிக நெருங்கியவர்கள், எனினும் நீங்கள் ஆராய்ந்து பார்க்கமாட்டீர்கள்.

اِنَّ الَّذِيْنَ يُبَايِعُوْنَكَ اِنَّمَا يُبَايِعُوْنَ اللّٰهَ

அல்லா(ஹ்)வுக்கு அவர்கள் வாக்களிப்பதெல்லாம் உங்களுக்கு அவர்கள் வாக்களிப்பதாகும். (எனவே அல்லாஹுவுக்கும் ரஸூல் நாயகம் அவர்களுக்குமிடையில் பிரிவு இல்லையென்பதைக் காட்டுவதாகும்.)

يَدُاللّٰهِ فَوْقَ اَيْدِيْهِمْ

அல்லாஹ்வின் கரம் அவர்களின் கரங்களுக்கு மேலே உள்ளது.

وَمَارَمَيْتَ اِذْرَمَيْتَ وَلَكِنَّ اللّٰهَ رَمٰى

எனவும், அல்லாஹுதஆலா கூறுகிறான். நீங்கள் (மண்ணை) எறிந்தபொழுது நீங்கள் எறியவில்லை எங்கிலும் அல்லாஹுவே எறிந்தான் என்று அல்லாஹ் கூறியுள்ளான். ரஸூல் நாயகம் எறிந்ததை அல்லாஹ் எறிந்ததாகக் கூறுவது இரண்டறக் கலந்த நிலையிலாகும்.

(அல்லாஹ்வின் கரம் அவர்களுடைய கரங்களுக்கு மேலே இருக்கிறது. அல்லாஹுதஆலாவுக்குக் கை கால்களில்லை யென்பதை நாம் மிகவும் உணர்கிறோம். அதனால் ரஸூல் நாயகம் அவர்களின்

கைகள்தாம் இங்கு அல்லாஹ்வின் கையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது காண்க.)

هُوَالْاَوَّلُ وَالْاٰخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ وَهُوَ بِكُلِّ شَيْئٍ عَلِيْمٌ

ஆரம்பமும் முடிவும் அவனே வெளியும் உள்ளும் அவனே அவன் எல்லாவற்றையும் மிக அறிந்தவன்.

(அவனுடைய ஆரம்பத்திற்கு ஆரம்பமுமில்லை. ஆரம்பமில்லாதவன், அவனுடைய முடிவுக்கு முடிவுமில்லை. முடிவில்லாதவன், உள்ளாய் உள்ளவன், உள்ளாயிருந்து கொண்டே வெளியானவன் எதுகையில்லாதவன்.)

وَفِيْ اَنْفُسِكُمْ اَفَلَا تُبْصِرُوْنَ

உங்களுக்குள்ளேயே அல்லது உங்களிலேயே அவனிருக்கிறான். நீங்கள் ஆராய்ந்து பார்க்கமாட்டீர்களா?

(நப்ஸ் எனும் சொல்லுக்கு, உயிர், இரத்தம், உடல், தன்மை, அதுவேயானது எனும் பல பொருள்கள் உண்டு. அவை ஒவ்வொன்றிலும் இந்தத் திருவசனத்தின் பொருளை வைத்துப் பாருங்கள்.)

(1. உங்கள் உயிரிலேயே அவன் இருக்கிறான்.

2. உங்கள் இரத்தத்திலேயே அவன் இருக்கிறான்.

3. உங்கள் உடலிலேயே அவன் இருக்கிறான்.

4. உங்கள் தன்மையிலேயே அவன் இருக்கிறான்.

5. உங்களில் அதுவேயானதாக அவன் இருக்கிறான்.

என்பவைகளைக் கவனிக்கும்போது அவனை வானத்தில் அர்ஷில் மட்டும் உட்காரவைத்து வணங்கலாமா? நீங்கள் ஆராய்ந்து பார்க்க

வேண்டாமா? இது ஹுவல் ஆன கமாகான هُوَ الْآنَ كَمَا كَانَ என்பதற்கு ஆதாரமாயிருக்கிறதன்றோ!

وَاذَا سَئَلَكَ عِبَادِيْ عَنِّيْ فَانِّيْ قَرِيْبٌ

وَمَارَمَيْتَ اِذْرَمَيْتَ وَلٰكِنَّ اللّٰهَ رَمٰى

என்னுடைய அடியார்கள் உங்களிடத்தில் என்னைப் பற்றிக் கேட்டால் நிச்சயமாக நான் நெருக்கமானவன் எனக் கூறுங்கள்.

நீங்கள் எறிந்தபோது (அதை) நீங்கள் எறியவில்லை. எனினும் அல்லாஹ் எறிந்தான்.

وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَيْئٍ مُحِيْطًا

1. அல்லாஹ் எல்லாப் பொருள்களையும் ஆராய்ந்தறிந்தவன் என்பது ஒரு கருத்து.

2. எல்லாப் பொருள்களையும் அல்லாஹ் சூழ்ந்து கொண்டவனாக உள்ளான் என்பது இர்ஃபானையுடைய பெரியார்களின் ஞானவிளக்கமாகும். (இஃது இரண்டாவது பொருளாகும். (மேலே கூறப்பட்ட ஏகத்துவ மெய்ஞ்ஞானக் கருத்துகள் சங்கைக்குரிய குர்ஆனில் உள்ள அல்லாஹ் ஒருவன் எனக் கூறும் முவஹ்ஹிதுகளின் உயர் கருத்தாகும். அல்ஹம்து லில்லாஹ்)).

(பெருமானார் அவர்களின் ஏகத்துவ மெய்ஞ்ஞான கருத்துகளைக் கீழே காண்போம்.)

اِلٰى غَيْرِ ذَالِكَ مِنَ الْاٰيَاتِ الْكَرِيْمَةِ

சங்கையான (குர்ஆன்) வசனங்களல்லாத ஏனைய (ஹதீஸ்) வகைகளையும் நோக்குவோம்.

وَاَمَّا مِنْ قَوْله صَلَّى اللّٰهُ عَلَيْه وَسَلَّمَ

அறிக. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சொற்களிலிருந்தும் اَصْدَقُ كَلِمَةً அறபிகள் சொல்லிய மிக உண்மையான சொற்களிலிருந்தும் உள்ளவைகள் கீழே தரப்படுகின்றன.

قَالَتْهَاالْعَرَبُ كَلِمَةَ لَبِيْدٍ

அறபிகள் லபீதுடைய வார்த்தையையும் எடுத்துக் கூறினார்கள்.

اَلاَكُلُّ شَيْئٍ مَاخَلاَ اللّٰهُ بَاطِلٌ، وَكُلُّ نَعِيْمٍ لاَمَحَالَةَ زَائِلٌ

அறிந்துகொள். எல்லாப் பொருட்களும் அல்லாஹ்வைத் தவிர அழிந்துவிடும். எல்லாச் செழுமையும் - சுகபோகமும் நிச்சயமாய் நீங்கிவிடும். (அல்லாஹ்வைத் தவிர எல்லாப் பொருட்களும் பொய்யானவை - அழிவன அல்லது மாற்றமடைவன. அல்லாஹ் மட்டுமே மீதியாய் இருப்பான்.

அப்படியாயின் எல்லாப் பொருள்களும் அவனிலேயே அழிந்தபின் மீதியாக உள்ளது ஹக்கு மட்டுமே. ஹக்கிலிருந்து வெளியான சிருஷ்டிப் பொருள்களும் அவ்வவற்றிற்குள்ள பெயர்களும் நீங்கி ஒன்றிலே ஒரே பெயராக மாய்ந்து மீதியாகி ஹக்கு மட்டுமேயிருக்கும். அதற்கழிவில்லை! ஹக்கே. இரண்டறக் கலக்கும் தறுவாயில் எல்லாச் சிருஷ்டிப் பொருள்களும் மாற்றமடையுமே தவிர பொருள்கள் அழிந்துவிடா. பொருள்கள் அழிந்துவிட்டன. இறந்துவிட்டன எனக் கூறுவது பொதுமக்களின் கருத்தாகும். தத்துவஞானி அன்றேல் விஞ்ஞானி ஒருவர் அவ்வாறு கூறின் அது முழுமடமையே எனத்தான் கூற வேண்டும். அவ்வாறு அழிந்துவிடுவதாக நினைப்பின் அது பூரண அழிவிலா. ஆனந்த முடிவிலா நித்தியனுக்குச் செய்யும் கொடுமையாகும். மாற்றமடைவதன்றி மறைவதன்றி அழிவதில்லை.

اِنْ اَحَدُكُمْ اِذَاقَامَ اِلَى الصَّلٰوةِ فَاِنَّمَايُنَاجِيْ رَبَّهُ

فَاِنَّ رَبَّهُ بَيْنَهُ وَبَيْنَ الْقِبْلَةِ

ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சொல்: உங்களில் ஒருவர் உண்மையாகவே தொழுகைக்காக நின்றீரானால் உண்மையாகவே அவருடைய இறைவனிடம் அவர் முறையிடுகிறார். அவருடைய இறைவன் அவருக்கும் கிபுலாவுக்கும் இடையில் உள்ளான்.

(அவர் இறைவனைத் தொழும்போது அவருடைய ரப்புடனே உரையாடுகிறார். அவர் செயல்கள் அவனிடம் ஒப்படைக்கப்படுகின்றன. அத்தஹிய்யாத்திலே அல்லாஹ்வுக்கும் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குமிடையில் நடந்த சம்பாஷனை இங்கே ஞாபகப்படுத்தப்படுகிறது.)

(அல்லாஹ் எப்படி? எங்கே? என்பவைகளை விட்டும் விடுபட்டவன். ஸூபியாக்களின் கிப்லா அல்லாஹ்வின் அர்ஷான கல்பாகும். அவன் கல்புக்குள்ளேயே) ஹக்குடன் சம்பாஷித்துக் கொள்கிறான்.

அள்ளாஹுஸுப்ஹானஹுவதஆலாவைப் பற்றிப் பேசுகிறதாக உள்ள ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சொல்:

وَمِنْهَا قَوْلُهُ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ حَاكِيًا عَنِ اللّٰهِ

سُبْحَانَهُ وَتَعَالٰى لَايَزَالُ عَبْدِيْ يَتَقَرَّبُ اِلَيَّ بِالنَّوَافِلِ

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அல்லாஹு ஸுபுஹானஹு வதஆலாவைப் பற்றி சொன்னதாக உள்ள ஒரு சொல் அதினின்றுமுள்ளது.

என்னிடத்தே என் அடிமை எப்போதும் நீங்காமல் நெருங்கியிருப்பது மேலதிக வழிபாடுகளைக் கொண்டே. (அதாவது, உயர்வுமிக்க இறைவனை அடைவதற்காக முழுமையான பிரயத்தனத்தில் கஷ்டப்படுதல் இறைவனை நினைத்தல் இறை பற்றிச் சிந்தனைகளை உண்டு பண்ணல் இவை போன்றவையே மேலதிக வழிபாடுகள் என்பன. இந்த மேலதிக வழிபாடுகள் அவனை யான் மிகவும் உகப்புக் கொள்கிறவரையாதல் வேண்டும்.)

اذَا اَحْبَبْتُهُ كُنْتُ سَمْعَهُ الَّذِيْ يَسْمَعُ بِهِ وَبَصَرُهُ الَّذِيْ
يَبْصُرُبِهِ وَيَدَهُ الَّتِيْ يَبْطِشُ بِهَا وَرِجْلُهُ الَّتِىْ يَمْشِيْ بِهَا

அவனை நான் உகந்தேனானால், எந்தக் காதால் அவன் கேட்கிறானோ

அந்தக் காதாக நான் ஆவேன்.

எந்தக் கண்ணால் அவன் காண்கிறானோ,

அந்தக் கண்ணாக நான் ஆவேன்.

எந்தக் கையால் அவன் சக்தி பொருந்திய வேலை செய்கிறானோ

அந்தக் கையாக நான் ஆவேன்.

எந்தக் காலால் அவன் நடக்கிறானோ அந்தக் காலாக நான் ஆகிவிடுவேன்.

(இங்கே "ஹுப்" எனக் கூறப்படுகிறது "குர்பு" எனும் நெருக்கம் என்பதைக் காட்டுகிறது.

எவன் ஹக்குத் தஆலாவை இரண்டறக் கலப்பதில் நான் நீ எனும் வித்தியாசமின்றி முழுமுயற்சி செய்வானோ அவன்தான் பெரும் தியாகி. அவ்வாறு ஹக்கில் தன்னையே அர்ப்பணித்து ஹக்கிலே அளவுக்கதிகமான இஷ்கைக் கொண்டு இருப்பவனே ஹக்கை உடலாலும் ரூஹாலும்

உகக்கிறவன். இரத்தத்திலும் அந்த உகப்பு ஊறிவிடும். அப்போது அவன் ஹக்கை விட்டுச் சிறிதும் விலகமாட்டான். அவன் மன்ஸூருல் ஹல்லாஜ் ரஹ்மத்துல்லாஹி அவர்களைப் போல "அனல் ஹக்கு" எனும் தன்மையிலேயே இருப்பான். ஹக்கில் அவன் கடலும் அலையும் போல் ஆகிவிடுவான். இதனால் தான் எம்பெருமானுக்கு நடந்தவைகளும் அவ்வாறே ஆயின. "நீங்கள் எறிந்தபொழுது நீங்கள் எறியவில்லை நானே எறிந்தேன்' என ஹக்குக் கூறும் வார்த்தையும் இது போன்றதே.

وَقَوْلُهُ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ انَّ اللّٰهَ تَعَالَى يَقُوْلُ مَرِضْتُ

فَلَمْ تَعُدْنِيْ وَجِعْتُ فَلَمْ تُطْعِمْنِيْ

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சொல்: அல்லாஹுதஆலா சொல்கிறான். "நான் நோயாளியாயிருந்தேன். நீர் என்னை நோய் வினவ வரவில்லை!"

(அப்போது அந்த நபர், "நீ உலகத்தாரின் இறைவனல்லவா? நான் உன்னை எப்படி நோய் வினவ வருவேன்?" எனக் கேட்பார். அப்போது ஹக்குக் கூறும்; "இன்ன ஒருவர் நோயாளியாயிருந்தார். அவரை நீர் பார்க்க வந்திருந்தால் அவரிடத்து நீர் என்னைப் பார்த்திருப்பீர்!" என்று கூறினான்.)

"நான் பசியாயிருந்தேன்; நீர் எனக்குச் சாப்பாடு தரவில்லை!"

(அப்போது அந்த நபர், "நீ உலகத்தாரின் இறைவனல்லவா? நான் எவ்வாறு உனக்குச் சாப்பாடு கொடுப்பேன்?" எனக் கேட்பார். ஹக்கு அதற்கு, "என்னுடைய அடிமை இன்னவர் பசித்திருந்தார். நீர் சாப்பாடு கொடுக்கவில்லை. அவ்வாறு நீர் கொடுத்திருந்தால் அவரை நீர் என்னிடம் பார்த்திருப்பீர்!"

இமாம் திர்மிதீ (ரஹ்) அவர்கள் ஒரு நீண்ட ஹதீஸில் ரிவாயத்துச் செய்தார்கள். (சொன்னார்கள்.)

وَالَّذِيْ نَفْسُ مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ بِيَدِهٖ

لَوْاَنَّكُمْ دَلَّيْتُمْ بِحَبْلٍ اِلَى الْاَرْضِ لَهَبَطَ عَلَى اللّٰهِ تَعَالٰى

(எவனிடத்து) எவன் கையில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உயிர் இருக்கிறதோ அவன்மீது சத்தியமாக.

நீங்கள் பூமியின்மீது ஒரு கயிற்றை இறக்குகிறீர்களாயின் அது நிச்சயமாக அல்லாஹ்வின்மீதே இறங்கும். (காலிக் மக்லூகாத்கள் அனைத்தும் ஹக்காகவே இருப்பதனால் கீழே விட்டால் என்ன மேலே விட்டால் என்ன அது விழுவது அல்லது தொடுவது அல்லது அடைவது ஹக்கையே ஆகும்!) பின்பு அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் (நாயகம்) அவர்கள் (கீழ்வருமாறு) ஓதினார்கள்.

ثُمَّ قَرَأَ عَلَيْهِ الصَّلٰوةُ وَالسَّلَامُ هُوَالْاَوَّلُ وَالْاٰخِرُ وَالظَّاهِرُ

وَالْبَاطِنُ وَهُوَ بِكُلِّ شَيْئٍ عَلِيْمٌ

ஆரம்பமும் முடிவும் வெளியும் உள்ளுமாயுள்ளான். அவன் எல்லாவற்றையும் மிக அறிந்தவன். (இதன் விளக்கம் முன்னர் எழுதப்பட்டுள்ளதால் அதைப் பார்த்துக் கொள்க.)

اِلٰى غَيْرِ ذَالِكَ مِنَ الْاَحَادِيْثِ الصَّحِيْحَةِ

ஸஹீஹான (சரியான) இந்தத் திருநபி நாயக வாக்கியங்களிலிருந்து இதல்லாத வேறுமுண்டு; கண்டுகொள்க.

وَاَمَّاقَوْلُ الْأَئِمَّةِ الْعَارِفِيْنَ بِاللّٰهِ الدَّالَّةُ عَلى وَحْدَةِ الْوُجُوْدِ فَاَكْثَرُ كَثِيْرَتِهَا بِحَيْثُ لَاتَأْتِيْ فِى الْعَدِّ وَالْحَصْرِ وَلِذَا لَمْ اَذْكُرْهَا

அறிக. வஹ்ததுல் வுஜூதாகிய தனித்த உள்ளமை பற்றி அறிவிக்கும் அல்லாஹுவை அறிந்த ஆரிபீன்களான இமாம்களின் சொற்கள் அதிகம் உள்ளன. எண்ணிக்கையில் அதிகமாயிருக்கின்றமையாலும் இயலாமையாலும் (அந்த உதாரணங்களை இங்குக்) கொண்டுவரவில்லை. இக்காரணத்தினால் அவற்றை இங்குச் சொல்லவில்லை.

وَاِنْ شِئْتَ الْاِطِّلَاعَ فَعَلَيْكَ بِمُطَالَعَةِ نُسْخَتِهِمْ لَتَجِدُهَا اِنْ شَاءَاللّٰهُ تَعَالٰى

நீங்கள் பார்க்க விரும்பினால் அவர்களின் நூல்களை நீங்கள் பார்த்தல் உங்களுக்கு அவசியமாகும். “இன்ஷா அல்லாஹுத்தஆலா” நீங்கள் அவற்றிற் காண்பீர்கள்.

اَيُّهَاالطَّالِبُ اِنْ اَرَدْتَ الْوُصُوْلَ اِلَى اللّٰهِ تَعَالٰى فَالْتَزِمْ بِمُتَابَعَةِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَوَّلاً

(இந்தக் கல்வியை விரும்பிக் கற்க உற்சாகம் கொள்ளும்) மாணவனே! அல்லாஹுத்தஆலா அளவில் நெருங்க நீ விரும்பினாயானால் முதலில், நீ நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு வழிபடுவதைப் பலமாய்ப் பற்றிக் கொள்.

قَوْلاً وَفِعْلاً ظَاهِرًا وَبَاطِنًا

சொல்லாலும் - செயலாலும் வெளியாலும் - உள்ளாலும் (பற்றிக் கொள்!)

ثُمَّ افْعَلْ مُرَاقَبَةَ وَحْدَةِ الْوُجُوْدِ ثَانِيًا

பின்னர், இரண்டாவதாக, தனித்த உள்ளமையில் அயராது பயிற்சிகள் செய்க.

اَلَّتِيْ هِيَ عَيْنُ مَعْنَى الْكَلِمَةِ الطَّيِّبَةِ مِنْ غَيْرِ اشْتِرَاطِ الْوُضُوْءِ

அதுவே கலிமதுத் தய்யிபாவாகிய உள்ளத்தைச் சுத்தி செய்யும் ஒரு மொழியின் கருத்தின் தாற்பரியமாகும். (பயிற்சியின்போது) வுளூவின் நிபந்தனைகள் தேவையில்லை.

وَاِنْ وَجَدَ الْوُضُوْءَ فَهُوَ اَوْلَى

நீர் வுளூஉ செய்தவராக இப்பயிற்சியைச் செய்வீரானால் அது மிகவும் மேலானதாகும்.

وَلاَمِنْ تَخْصِيْصِ وَقْتٍ

முராகபாவிலே ஒரு நேரத்தை குறிப்பிட்டுச் சொந்தப்படுத்திக் கொள்ள வேண்டியதுமில்லை.

دُوْنَ وَقْتٍ مِنْ غَيْرِمُلاَحَظَةِ النَّفْسِ دُخُوْلاً وَخُرُوْجًا فِي الْمُرَاقَبَةِ

முராகபாவிலே புகுவதிலும் வெளியாவதிலும் தன்னைப் பேணிக் கொள்தலன்றி ஒரு நேரம் குறிப்பிடல் அவசியமில்லை.

وَلَا مِنْ مُلَاحَظَةِ حُرُوْفِ الْكَلِمَةِ الطَّيِّبَةِ بَلْ لَاتُلَاحِظْ اِلَّا الْمَعْنٰي فَقَطْ

கலிமதுத் தய்யிபாவின் எழுத்துகளைப் பேணுதலும் (அவசியம்) இல்லை. எனினும் கருத்தை மட்டுமே தவிர நீர் எதையும் பேண வேண்டாம்.

فِيْ كُلِّ حَالٍ قَائِمًا اَوْقَاعِدًا مَاشِيًا وَمُضْطَجِعًا مُتَحَرِّكًا اَوْسَاكِنًا شَارِبًا اَوْآكِلًا

நின்றாலும் இருந்தாலும் நடந்தாலும் படுத்தாலும் அசைந்தாலும் ஒடுங்கியிருந்தாலும் (நீர்) குடித்தாலும் உண்டாலும் (முதலாம்) எல்லா நிலைமையிலும் (முராகபாவிலேயே) நிலையாயிருத்தல் வேண்டும்.

وَطَرِيْقُ الْمُرَاقَبَةِ اَنْ تَنْفِيَ اَنِيَّتَكَ اَوَّلًا

முராகபாவின் பாதையாவது முதலில் தான் என்னும் அகந்தையை இல்லாதாக்கிவிட (அழித்துவிட)லாகும்.

وَالْاَنِيَّةُ عِبَارَةٌ عَنْ اَنْ يَكُوْنَ حَقِيْقَتُكَ وَبَاطِنُكَ غَيْرَالْحَقِّ سُبْحَانَهُ وَتَعَالٰى

உமது யதார்த்தம் இன்னும் உமது மறைபொருள் ஹக்கு ஸுபுஹானஹுவதஆலாவாகிய ஹக்கல்லாததாயிருப்பதே யான் எனும் அகந்தையின் கருத்தாகும்.

(அதாவது, தான் எனும் அகந்தையுடையவன் இடத்து ஹகீகத் எனும் யதார்த்தம் அல்லது அதுவேயானதென்னும் தத்துவார்த்தமும் உட்கருத்தும் இரா என்பதாகும்.)

وَلَاتَنْفِيْ اِلَّاهٰذِهِ الْاَنِيَّةِ

தான் எனும் அகந்தையைத் தவிர மற்ற எதையும் இல்லாதாக்கிவிடாதே.

(அதாவது, உன்னிடத்தில் அகந்தையே இருக்கக் கூடாது. அஃதொன்றைத்தவிர ஹக்கின் நாட்டமே உன்னிடத்திருக்க வேண்டும்.)

وَهُوَ عَيْنُ الْمَعْنٰى لَااِلٰهَ

(தத்துவார்த்தமும் உள்ளமையுமான அனைத்தும் அதுவே. அதுவன்றி வேறேதுமில்லையெனும்) அதுதான், லாஇலாஹ்றின் முக்கிய - மூலகருத்தாகும்.

لَااِلٰهَ இலாஹ் இல்லை. சிருஷ்டிகள் ஒவ்வொன்றாய் எதுவும் இறை அல்ல.

(இவ்வாறு இருப்பின்)

ثُمَّ ثَبَتَ الْحَقُّ سُبْحَانَهُ وَتَعَالٰى فِى بَاطِنِكَ ثَانِيًا

பின்னர் இரண்டாவதாக, உம்முடைய உள்ரங்கத்திலே - உள்ளமையிலே ஸுபுஹானஹுவதஆலாவாகிய ஹக்கு நிலைபாடடையும்,

وَهُوَ عَيْنُ الْمَعْنٰى اِلَّااللّٰه

اِلَّااللّٰهُ அதுவேதான் இல்லல்லாஹ் என்பதன் மூலகருத்தாகும்.

அனைத்துமாய் பூரணமாய், பிரித்தற்கரியதாய்க் கலந்திருக்கும் இறையைத் தவிர.

فَانْ قُلْتَ اذَا كَانَ الْوُجُوْدُ وَاحِدًا وَغَيْرُهُ لَيْسَ بِمَوْجُوْدٍ

நீர், வுஜூத் ஒன்றென்றும் அஃதல்லாது காணப்பட்ட பொருள் உண்மையிலே அதில் உள்ளதல்ல என நீர் சொன்னீரானால்

فَاَيُّ شَيْئٍ تَنْتَفِيْ وَاَيُّ شَيْئٍ تَثْبُتُ قُلْتَ وَهْمُ الْغَيْرِيَّةِ وَوَهْمُ الْاِثْنَيْنِيَّةِ الَّذِىْ نَشَأَ لِلْخَلْقِ

எந்தப் பொருள் நீக்கப்படும்? எந்தப் பொருள் நிலைத்து நிற்கும்? படைப்பினத்தால் உண்டான அதல்லாதது (எனும் சந்தேகம், இன்னும் இரண்டு எனும் சந்தேகம் இதுதான் என நீ சொன்னாய். இரண்டெனும் தன்மையுடையவர்கள். (இவர்கள், அதாவது, சிருஷ்டி, சிருஷ்டிகருத்தா எனும் இரண்டு தன்மைகளையுடையவர்கள். அவர்கள் சிருஷ்டிகருத்தாவை வுஜூத் எனவும் சிருஷ்டி அதல்லாததெனவும் கூறுவர். இதிலே வேறுபாடுகள் இருக்கின்றமையால் இது சந்தேகத்திற்குரியதும் உண்மைக்கு முரணானதுமாகும்.)

وَهذَالْوَهْمُ بَاطِلٌ

இந்தச் சந்தேகம் அழிவுக்குரியதாகும்.

(ஹக்குக்கு மாற்றமானதாகும்) (பொய்யானதாகும்.)

فَعَلَيْكَ اَنْ تَنْفِيَ هذَالْوَهْمَ اَوَّلاً

முதலிலேயே இச்சந்தேகத்தை நீக்கிவிடுதல் உமக்கு அவசியமாகும்.

ثُمَّ تَثْبُتُ الْحَقّ سُبْحَانَهُ وَتَعَالىٰ فِى بَاطِنِك ثَانِيًا

பின்னர் இரண்டாவதாக, ஹக்கு ஸுபுஹானஹுவதஆலா உமது உள்ரங்கத்திலே தரிபடுவான்.

اَيُّهَا الطَّالِبُ اِذَا غَلَبَ الْحَالُ عَلَيْكَ بِفَضْلِ اللّٰه

வஹ்தத்துல் வுஜூதையறியத் தேட்டங் கொண்டவனே, உமது உள்ளங்கத்திலே ஹக்கில் சந்தேகம் அற்றுப் போய் உமது நிலைமை அல்லது தரம் மிகைத்து விட்டதானால் ஹக்கின் கொடையல்லது அருள் உன்மீது உண்டாகும். (ஹக்குத் தன்னையே உன் தன்னில் காட்சி காண்பாய்.)

لَاتَقْدِرُ عَلٰى نَفْيِ اَنِيَّتِكَ الْوَهْمِيَّة

நீ சந்தேகமான நானென்னும் அகந்தையை நீக்கிவிட உனக்கு சக்தியில்லையானால்,

بَلْ لَمْ يَبْقَ فِيْكَ اِلاَّ اِثْبَاتَ الْحَقِّ سُبْحَانَهُ وَتَعَالٰى

ஸுபுஹானஹூவதஆலாவாகிய ஹக்கினுடைய நிலைபாடானது உன்னிலே மீதியாகவில்லை (மீதியாகமாட்டாது) (அதாவது, அகந்தை உன்னிலிருந்து நீங்கி கல்பிலே ஹக்கு நிலைத்து நிற்க மாட்டாது.)

(ஆதலால், ஹக்கை அறியவும் ஷிர்க்காகிய இணையிலிருந்து நீங்கவும் பூரண ஹக்கின் அன்பைப் பூரணமாய்ப் பெறவும் மனிதனது தாற்பரியத்தையறிந்து கொள்ளவும் தன்னைச் சூழ்ந்திருப்பவைகளையும் தன்னையும், தான் என்ற ஹக்கிலிருந்து வேறுபட்ட தான எண்ணத்தை நீக்கி அனைத்தும் பூரணமாய் ஹக்கே எனக் கொள்ளவும் "தான்" என்னும் அகந்தையை நீக்கிக் கொள்ள வேண்டும். இன்றேல் கை சேதமே! முடிவு மருட்சியே!! அங்கும் இங்கும் நிம்மதியல்லையே!!!

وَرَزَقَنَااللّٰهُ وَاِيَّاكُمْ هٰذَا الْمَقَامَ بِحُرْمَةِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ

عَلَيْهِ وَسَلَّمَ آمِين

நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பொருட்டால் இந்தத் தகைமையை (இந்தத் தானத்தை) அல்லாஹுதஆலா நமக்கும் உங்களுக்கும் தந்தருள்வானாக. ஆமீன். (ஏற்றுக் கொள்வாயாக!)

يَارَبَّ الْعَالَمِيْنَ

அகிலத்தாரை (அகிலமனைத்தையும்) படைத்துப் பாதுகாக்கும் அல்லாஹ்வே.

அனைத்தும் ஹக்கே!

எல்லாம் ஹக்கின் தோற்றமே!!

இதைத் தூசிப்பவர்களே. ஹக்கை உணர்ந்து அறியும் ஆற்றல் இல்லாதவர்கள் அல்லாஹுவை மேலே வைத்துத் தனிமனித வழிபாடு செய்கிறவர்கள். அல்லாஹ்வுக்காகச் சற்றுச் சிந்தியுங்கள். உங்கள் இருண்ட கல்பை ஹக்கு ஒளிமயமாக்கப் போதும். தனிமனித வணக்கம் செய்யாமல் வஹ்தத்துல் வுஜூதை அறிந்தவர்களை அணுகிக் கொடிய சிர்க்கில் நின்றும் நீங்கி விடுங்கள். இல்லையானால் கொதி நரகு உங்களை விழுங்க அகன்ற வாயைத் திறந்து கொண்டிருக்கும்.

வலில்லாஹில் ஹம்து. ஸல்லல்லாஹு அலா மள்ஹரில் அதம். வஸல்லம் அலைஹி வஆலிஹி வஸஹ்பிஹி!

اَللّٰهُ اكبر هو الاحد وهو الصمد لم يلد ولم يولد

ولاله ندّ وحدّ وحصر

لاله قصر ولاطول ولم يكن له كفوا احد

குறிப்புகள்

பக்கம் 10, 36 :

وُجُوْد : உள்ளமை. இல்லாததெனினும் உள்ளது எனும் தத்துவார்த்தத்தையுடையது.

وَحْدَة : ஒன்று : وحدة الوجود ஒரே உள்ளமை. கற்றில்லா மடையர்கள் மந்த குணம் படைத்தவர்கள் கூறுமாப்போன்று இஃது இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதன்று. ஒருவனாகிய அல்லாஹுவே இதனை இறக்குமதி செய்தான். قل هو الله احد என்பதே இறைவனால் வான உலகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வஹ்தத்துல் வுஜூதாகும்.

பக்கம் 9 :

عِلْمُ الْحَقَائِق : யதார்த்த அறிவு.

பக்கம் 11 :

تَجَلِّي : தோன்றல் வெளியாதல். شكل உருவகோலம் பூரணத்திலிருந்து வெளியான சிருஷ்டிகள்.

பக்கம் 12 :

تَنْزِيْه : வெளியாகாத தத்துவ நிலை.

مُقَيَّد : இவ்வளவு தான் என்று தளையிடப்பட்டது. இறைவனை உயர்ந்த வானத்தில் சிம்மாசனத்தில் கை, கால், முகங்களுடன் வைத்துச் சிந்திப்பது போன்றது.

பக்கம் 12 :

تَشْبِيْه : வெளியான சிருஷ்டியினங்கள் உருவகோலத்துடன் உள்ளவை. مُحَدَّد எல்லையிடப்பட்டது. மனிதன் இவ்வளவுதான் என எல்லையிடப்படல்.

اَمْرَيْن : இருகருமங்கள் : தன்ஸீஹ், தஷ்பீஹ் ஆகியவைகள். இரண்டையும் சேர்த்துச் சொன்னவர்தான் வஹ்தத்துல் வுஜூதை அறிந்தவர். நேர்மையானவர். இவ்வாறு ஒன்றுபடுத்திக் கூறுபவரே மக்கள் மத்தியில் நாயகர்.

اشْفَاع : தன்ஸீஹ் வேறு தஷ்பீஹ் வேறு எனக் கூறி ஹக்கையும் கல்கையும் வேறுபடுத்துகிறவன். இணைவைக்கிறவன். எல்லாம் அதுதான் எனும் வார்த்தையை அறியாது அதனை ஏளனமாய்ப் பேசும் கற்ற, கல்லாத முட்டாள்களின் நிலையென்ன? முஷ்ரிக்களைவிட்டும் நம்மைக் காப்பாற்றுவானாக. ஆமீன்.

افْرَاد : தனித்தவன், ஒன்றேயானவன் என நிர்ணயம் கொள்ளல்.

பக்கம் 13, 14, 15 :

اَلْبَاس : உடைகள், உடல், உடை, நடை, ஊண். உறக்கம் முதலான திரைகள்.

تَنْزِيْه مَحْض : தன்ஸீஹும், தஷ்பீஹும் சேர்ந்தது.

ذَرَّة : அணு.

பக்கம் 15, 20 :

وُجُوْد : இல்லாததெனினும் உள்ளது. مَوْجُوْدَات : இல்லாதெனினும் உள்ளதிலிருந்து வெளியான சிருஷ்டிப் பொருள்கள்.

وُجُوْدُ الْخَارِج : வெளியான வுஜூத் : வெளியான சிருஷ்டிப் பொருள்கள்.

பக்கம் 23 :

مُحْدَثَات : புதிதாய் உண்டானவைகள். மவ்ஜூதாத். வுஜூதிலிருந்து வெளியனவைகள்.

பக்கம் 26 :

كُنْهَ : யதார்த்தமானது. குறிப்பென்பது இதிலில்லை.

பக்கம் 26 :

لاتَعَيُّنْ : குறிப்பற்றது. இதனை வேறு மொழிகளில் சொல்வதாயின் அமா, தன்ஸீஹ் மஹ்ள். ஹூவல் ஆன கமாகான, குன்ஹு, வஹ்தத், வுஜூத்.

تَعَيُّن : குறிப்பானது.

பக்கம் 27 :

مَظْهَرُالْاَتَمّ : ஹக்கின் பரிபூரண தோற்றம்.

பக்கம் 28 :

اَلذَّاتُ السَّاذَج : கலப்பற்ற பிரணவம்.

பக்கம் 28 :

اَلْعَمَا : அந்தகம். குருடு.

பக்கம் 29 :

اَلْاَحَدِيَّة : ஒன்றேயானது. மறைந்த கருவூலம் = கன்ஸுல் மக்பிய்யா ஒப்பறத்தனித்தது.

பக்கம் 29 :

اَلْوَاحِدِيَّة : ஒப்புறத் தனித்தது.

பக்கம் 29 :

اَلْاُلُوْهِيَّة : தெய்வீகம். பரமார்த்த உள்ளமையின் வருணனை - பிரபஞ்சம்.

பக்கம் 29 :

عَرْش : பூரண அம்சம். கோலம். அசைவற்ற நிலை, பரிபூரண கோலம் குறிப்பற்ற நிலை. கலந்து விரிந்து யாங்கும் நிறைந்தது.

பக்கம் 30 :

اَلْعَقْلُ الْكُلّ : பூரண புத்திப் பிரமாணம். பார்வையற்ற பரிபூரண நிலை.

பக்கம் 30 :

اَلنَّفْسُ الْكُلِّيَّة : பரிபூரணமாய் 2 அதுவேயானது. துடிப்பு அல்லது அசைவு நிலை.

பக்கம் 30 : உருவகமாகாத சத்து. هَـــبَـــاء புழுதி, தூசி, فَلَكُ الْعَنَاصِر கிரகச் சுற்றுப் பாதை. **Orbit.**

(மற்றவை நூலில் உண்டு பார்க்க)

பக்கம் 31 : அணுக்கள் இருவகைப்படும். 1. ஜவ்ஹர் 2. அர்ளு ஜவ்ஹர். ஜவ்ஹர் : பரமாணு. நபோரேணு. ஆதி சூக்கும அணு. ஆதாரமுள்ள ஆதி சூக்கும வணு. மூலப்பிரகிருதி. தன்னிலே உயிர்வாழ முடியுமானது. **பிரகிருதி:** தன்னில் நிலையானது. **அப்பிரகிருதி** ஆதாரமில்லாத வணு. ஜவ்ஹர் : மூலப் பிரகிருதி. ஆதாரமுள்ள நுண்ணணு. அர்ளு: அப்பிரகிருதி: ஆதாரமில்லாத அணு.

பக்கம் 33 :

முதற்படித்தரம் : லாதஅய்யுன் : குறிப்பற்ற நிலை. மர்தபதுல் அஹதிய்யா: **ஏக ஏகாந்தப் படித்தரம்.**

பக்கம் 35 :

இரண்டாம் படித்தரம் : தஅய்யுனுல் அவ்வல் : முதற்குறிப்பு. **ஏகானந்தப் படித்தரம். மர்தபதுல் வஹ்தத்.**

பக்கம் 37 :

மூன்றாம் படித்தரம் : தஅய்யுனுஸ்ஸானி, மர்தபதுல் வாஹிதிய்யா **ஏகப் படித்தரம்.**

பக்கம் 40 :

நான்காம் படித்தரம் : **ஆத்ம உலகம் :** ஆலமுல் ஜபரூத்: ஆத்ம ஒன்றிப்பு உலகம். ஆலமுல் கியால் முத்லக்: சம்பூரண மாயாரூபம்.

பக்கம் 41 :

ஐந்தாம் படித்தரம் : ஆலமுல் மிதால் : **மாதிரி உலகம்.**

பக்கம் 43 :

ஆறாம் படித்தரம் : மர்தபது ஆலமுல் அஜ்ஸாம் : **கோல உலகம்.**

பக்கம் 44 :

ஏழாம் படித்தரம் : الانسان : **மானிடன்.**

பக்கம் 49 : இந்த வுஜ்ஜுதுக்கு இரு பூரணங்களுண்டு.

1. கமாலுன் தாதிய்யுன் : பிரணவ சம்பூரணம்.
2. கமாலுன் அஸ்மாஇய்யுன் : நாம பரிபூரணம்.

பக்கம் 52 : வுஜ்ஜுது இருவகைப்படும்.

1. மறைவாயிருப்பதில் மறையாததை மறைத்தல்.
2. மறைவாயுள்ள மொத்தத்திலிருந்து பகுதிகளாகப் பிரிவாகி வெளிப்பட்டுக் காட்சிக் கொடுப்பது.

பக்கம் 56 : இத்திஹாத். இது இரு படிகளைக் கொண்டது.

1. பதீஹிய் : உதாரணம் காட்டி விளக்க முடியாதது.
2. நள்ரிய் : பார்க்க உதாரணம் காட்ட முடியுமானது.

பக்கம் 63,64 : பிரபஞ்சத்தினுக்கு மூவிடங்கள் உண்டு.

1. தஅய்யுனுல் அவ்வல்.
2. தஅய்யுனுஸ் ஸானீ
3. அஉயானுல் காரிஜிய்யா. (அஉயானுல்)

பக்கம் 66 : குருபு இருவகைப்படும்.

1. குருபுன் னவாபில். 2. குருபுல் பராஇள்.



اَلتُّحْفَةُ الْمُرْسَلَةَ

துஹ்பதுல் முர்ஸலா

அனுப்பப்பட்ட பரிசு!